ஞானம் சென்ரர்
இலங்கை
45 நிமிடம்
(விபரங்கள் 21-ம் பக்கம்)

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 4 17 — 23 செப்டெம்பர் 1998 முழக்கம்: 192

Gnanam Center




ஐரோப்பா எங்கும் எமது கிளை ஸ்தாபனங்கள் ஆரம்பமாகியுள்ளன. விபரங்கள் மறுபக்கங்களில்.....

# யாழ். நகரின் அடுத்த மேயர் யார்?

## கூட்டணிக்குள் பீதி - உதவி மேயர் பதவியேற்க மறுப்பு

யாழ். மாநகரசபைக்கான அடுத்த மேயரை நியமிப்பது பற்றி கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய உதவி மேயர் ரவிராஜ் அடுத்த மேயராக பதவியேற்க மறுப்புத் தெரிவித்துவிட்டதாகவும், அப்பதவியை ஏற்பதற்கு எவரும் தயாரில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவரும் புதிய மேயராக பதவியேற்காதவிடத்து தான் அப் பதவியை எடுத்துக்கொள்வேன் என தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதித் தலைவர் ஆனந்தசங்கரி அரச தரப்பு பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் அறிவித்துள்ளார். எனினும் புதிய மேயரை தொடர்ந்தும் தேர்வு செய்வதை கூட்டணியின் ஒரு பகுதியினர் எதிர்த்து வருகின்றனர். இவ்வாறு செயற்படுவது கூட்டணியை புலிகள் எதிர்ப்புக் கட்சியாக அடையாளப்படுத்திவிடும் எனவும் அதனால், தமது மிதவாதக் கட்சி என்ற நிலைப்பாடு கைவிடப்பட வேண்டி வரும் எனவும் அத்தரப்பு கருதுகின்றது. தற்போது கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் சென்னையில் இருப்பதால் புதிய மேயரை தேர்வுசெய்வது தொடர்பான முடிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கூட்டணி அறிவித்துள்ளது.

## நல்லூரில் வெடித்தது 'கிளைமோர்' குண்டு

யாழ். நகர இராணுவத் தளபதி உட்பட, பல இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகளையும் அழித்த நல்லூர் குண்டு வெடிப்பில், கிளைமோர் குண்டுகளே பாவிக்கப்பட்டுள்ளன என கருதப்படுகிறது. மண்டபக் கூரையில் பொருத்தப்பட்ட கிளைமோர் குண்டு மாநாடு நடைபெறும் போது இயக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இக் குண்டு பொருத்தப்பட்டது என்பது தொடர்பாக முரண்பட்ட ஊகங்கள் தெரியப்படுத்தப்படுகிடுன்றன. மண்டபத்தை சமீபத்தில் திருத்த வேலை செய்த போது இக் குண்டு பொருத்தப்பட்டிருக்கலாம் என புலனாய்வு வட்டாரம் கருதுகின்றது. எனினும் குண்டு இரு தினங்களுக்கு முன்னர்தான் பொருத்தப்பட்டது என சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## புலிகள் எம்மை எதிர்பார்த்துள்ளனர்!

### ஜெயசிக்குறுய் தளபதி மேஜர் ஜெனரல் நெமில் டயஸ்

'எமது இன்றைய பணி எம்மால் பிடிக்கப்பட்ட இடங்களைப் பலப்படுத்துவதுதான். முன்னரங்க காவலரண்களை நிறுவி வருகிறோம். புலிகள் எம்மை மாங்குளத்தில் எதிர்பார்த்துக் காத்துநிற்கின்றனர். ஆனால் அவர்களை எதிர்கொள்வது போர்த் தந்திரத்தை மாற்றுவது போன்றது' என ஜெயசிக்குறுய் போர்முனைத் தளபதி மேஜர் ஜெனரல் நெமில் டயஸ் அங்கு விஜயம் செய்த பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்துள்ளார். எங்களிடம் நன்றாக வகுக்கப்பட்ட திட்டங்கள்

(☞ 2ம் பக்கம்)

### செங்கலடியில்

## கிளைமோர் தாக்குதல்

(14.09.98)

மட்டக்களப்பு நகரிலிருந்து பொலநறுவை நோக்கி சென்றுகொண்டிருந்த இராணுவத் தொடரணி ஒன்றின் மீது இன்று காலை 10.40 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் ஒரு இராணுவ பஸ் பலத்த சேதமடைந்துள்ளது. இதில் பயணம்செய்த இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதுடன் சிலர் படுகாயங்களுடன் பொலநறுவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)



15.09.98 - 26.09.98

தியாகி லெப்.கேணல் திலீபனின் 11-ம் ஆண்டு நினைவுகள்

## ரணில் புலிகளுடன் இணைந்து எம்மை கவிழ்க்க முயற்சி

### - சந்திரிகா

ஐ.தே.கட்சி விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்டு எமது அரசை கலைக்க முயற்சி செய்து வருகின்றது என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா



கடந்த செவ்வாய் அன்று குருநாகலில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசசார்பற்ற அமைப்பின் வாகனங்களில் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குச் சென்று வருகின்றனர். அண்மையில் புலிகளின் அமைப்பை சேர்ந்த தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர். இந்த சந்திப்பு எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஐ.தே.கட்சி புலிகளுடன் இணைந்து ஜனநாயக முறையில் ஆட்சியமைத்த எமது கட்சியை கவிழ்க்க சதிசெய்து வருவதாக நம்பிக்கையான வட்டாரங்கள் சில அறியத்தந்துள்ளன என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய சந்திரிகா, விடுதலைப்புலிகளுடன்

(☞ 2ம் பக்கம்)

### வன்னிக்கு

## புதிய பாதை

(08.09.98)

மன்னார் வீதியில் பூவரசங்குளம் ஊடாக புதிய பாதை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் உயிலங்குளம் ஊடாக இடம்பெற்ற போக்குவரத்துக்கள் இனிவரும் காலங்களில் பூவரசம்குளம் ஊடாகவும் இடம்பெறும் என அறிவிக்கப்படுகிறது.

இதற்கான உத்தரவுகளை சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் வழங்கியுள்ளனர். ஐ.நாடுகள் உயர் ஸ்தானிகர் பணிமனை ஊடாக இவ் அனுமதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது

Kumars Shop
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore
Exchange Co.
90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
R. ராஜசேகரன்
Grundtvigs Vej - 38, 1.th
7400 Herning, Denmark.
Tel: 97 12 03 76 - 97 21 76 49

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# செம்மணி புதைகுழிகளை ஒளிப்பதிவு செய்யுமாறு வேண்டுகோள்

செம்மணி புதைகுழி பற்றி தகவல் தெரிவித்துள்ள ராஜபக்ஸவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக மக்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டது. அதன் படியே சிறைச்சாலையின் உள்ளேயே சிறைச்சாலைக் காவலாளிகளால் கடுமையாக தாக்கப்பட்டார் என்பதும் தெரிந்ததே. எனவே அவருக்கு தீவிர பாதுகாப்பு வழங்கும் அதேவேளை செம்மணி புதைகுழிப் பகுதியை ஒளிப்பதிவு செய்து அவரிடம்காட்டி அடையாளம் காட்டுமாறு கேட்கப் பட வேண்டும் என பல அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

செம்மணிப்பகுதியை சுற்றியுள்ள ஒன்றரை கிலோமீற்றர் பகுதியை முழுவதுமாக, தெளிவாக ஒளிப்பதிவு செய்து, கைதியிடம் காட்டப்படுவதையும் இன்னொரு ஒளிப்பதிவு நாடாவில் பதிவு செய்யவேண்டும். அவரது வாக்குமூலமும் ஒளிப் பதிவு செய்யப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்து கடிதங்கள் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

ராஜபக்ஸவை செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கு கொண்டு செல்வது அவரது உயிருக்கு ஆபத்தானது என்ற காரணத்தினால் புதைகுழிகளை அடையாளம் காண்பதும், புதைகுழிகள் தோண்டப்படுவதும் பிற்போடப்பட்டு வருவதனாலேயே இக் கோரிக்கை விடுக் கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளுடனான தொடர்பை வெளியிடுக!

## – ரணில் –

'ஜெயசிக்குறுய் நடவடிக்கை மூலம் புலிகளைத் தோற்கடிக் கலாம் என அரசு கருதிய போது பொக்ஸ் உடன்பாட்டை உதாசினப்படுத்தியது. இன்று ஜனாதிபதியும் ஜி.எல். பீரிசும் புலிகளுடன் பேசுவது பற்றி கதைக்கின்றர்' என ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் இளைஞர் பேரவை கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டுள்ளார்.

புலிகளுடனான தமது பேச்சு வார்த்தைகள் பாதிப்புகளற்றவை என சந்திரிகா கருதினால் புலிகளுடனான தனது முன்னைய கடிதத் தொடர்புகளை அவர் வெளியிட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.



நன்றி: தினக்குரல்

# பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் வேந்தன்



தமிழீழம் வசாவிளானைச் சேர்ந்த திரு. திருமதி கதிரமலை தம்பதிகளின் கனிஸ்ட புதல்வன் செல்வன் 'வேந்தன்' 13.09.1998 ஞாயிற்றுக்கிழமை தனது 5வது பிறந்தநாளை இங்கிலாந்தில் 109 Lynmouth Road -Walthamstow London ல் தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை, இங்கிலாந்திலுள்ள அப்பா, அம்மா, பெரியண்ணா, அக்கா, ஆசை அண்ணா, சின்னமாமா, பிரான்ஸிலுள்ள பெரியமாமா, பெரியமாமி, சின்ன மாமா (பாலா) அண்ணா (கபிலர்) சித்தப்பா-அன்ரி, தமிழீழத்திலுள்ள அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், அன்ரிமார் அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், தம்பிராதா (இலண்டன்) ஆகியோர் பல்கலைகளும் கற்று சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

# யாழ். நகரில் சிவபாலன் தகனம்

(14.09.98)

தமிழர் விடுதலைக் கூட்டணி சட்ட அணித் தலைவரும் யாழ் மேயருமான சிவபாலனின் உடல் யாழ் கோம்பயன் மணல் சுடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது. பலத்த இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் சுமார் 200 உறுப்பினர்கள் கலந்து கொண்ட இறுதி ஊர்வலத்தில் கூட்டணித் தலைவர்களான ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கடைகளை மூடுமாறு மிரட்டல்

(14.09.98)

நல்லூர் குண்டுவெடிப்பால் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்த கடைகளை மூடுமாறு அரச ஆதரவு தமிழ் ஆயுதக்குழுக்கள் எச்சரித்துள்ளன.

சிவபாலனின் மரணத்தை தமிழ் மக்கள் அனுதாபத்துடன் அனுட்சித்தாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தவே இவ் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

**செங்கலடியில்...**

கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து 400 மீற்றர் தொலைவில் இக் கிளைமோர் வெடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

**ரணில் புலிகளுடன்...**

நிபந்தனையற்ற விதத்தில் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று ஐ.தே.கட்சி முன்வைத்துள்ள கருத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ரணில் விக்கிரமசிங்காவுடன் லண்டன் பிரதிநிதி ஒருவர் மூலம் கடிதம் போக்குவரத்துக்களை வைத்திருந்தேன். அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை.

ஒன்றரை வருடமாக காலத்தைக் கடத்திவிட்டு, இன்று விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்கிறார். இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

**புலிகள்...**

உள்ளன எனக் கூறிய தளபதி துருப்புக்களின் எண்ணிக்கையை குறைத்தால் சாதனைகள் அனைத்தையும் அது செல்லுபடியற்றதாக்கிவிடும் என அச்சம் தெரிவித்துள்ளார்.

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,670 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# நல்லூரில் பாரிய குண்டுவெடிப்பு

## யாழ். நகர மேயர், இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்

(11.09.98)

இன்று காலை நல்லூரில் உள்ள யாழ். மாநகர சபை பணிமனையில் பாரிய குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

இக் குண்டு வெடிப்பில் யாழ் மேயர் பொன் சிவபாலன், யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுகந்த மெண்டிஸ், அவரது பிரதான உதவி அதிகாரி கப்டன் ராமநாயக்கா, பொலிஸ் உயரதிகாரி சந்திரா பெரேரா, உதவிப் பொலிஸ் அத்தியேட்சகர் சரத் பெர்னான்டோ, யாழ். பொலிஸ் தலைமைப் பணியக கண்காணிப்பாளர் மோகனதாஸ் உட்பட 18 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி இக் குண்டு வெடிப்பில் 30-ற்கு மேற்பட்டோர் பலியானதாக அறியப்படுகின்றது. பல படையினரும் பொதுமக்களும் இக் குண்டு வெடிப்பில் காயமடைந்துள்ளனர்.

யாழ். மாநகர பணிமனையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த, யாழ். நகரப் பகுதிக்கான போக்குவரத்து கட்டுப்பாடு பற்றிய புதிய விதிமுறைகளை ஆராயும் முகமாக கூட்டப்பட்ட மாநாட்டில் இராணுவ, பொலிஸ் மற்றும் பொறியியல் துறை உத்தியோகஸ்தர்கள் போன்றோரும் பங்குபற்றியிருந்தனர். இம் மாநாட்டின் மத்தியிலேயே இக் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பதிவுக்கான செய்திகள்

★ அக்கரைப்பற்று தமிழ் பாடசாலை ஒன்று இனந்தெரியாதவர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இதன்போது தளபாடங்களும், காரியாலய உபகரணங்களும் எரிந்து நாசமாகியுள்ளன. இவ்வாறான ஒரு தீ வைப்பு ஏற்கனவே நிகழ்ந்த போதும் பொதுமக்களால் உரிய நேரத்தில் தீயணைக்கப்பட்டதால் சேதாரம் ஏற்படவில்லை.

★ யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த 4000 மூடை அரிசி குருநகர் பகுதியில் களஞ்சியப்படுத்தி வைத்தபோது கடல்நீர் புகுந்ததால் அரிசி பழுதாகி அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதாக தெரியவருகின்றது.

★ யாழ். புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வீட்டிற்கு வெளியே வந்த கந்தையா தம்பையா என்பவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போது வெளியே வந்ததாலேயே சுடப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

★ மட்டக்களப்பில் சிறீலங்கா படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையால் பட்டிருப்பு பாலம் மக்கள் வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பட்டிருப்பு பாலத்தினூடாக பயணம் செய்வதை கைவிட்டு அம்பலாந்துறை ஆற்றுப் பாலத்தினூடாக பயணம் செய்துவருகின்றனர்.

★ வடக்கு கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தினால் இதுவரை 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக பனைப்பொருள் அபிவிருத்தி சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டவர் எவரும் பாதிக்கப்படவில்லை

## — செஞ்சிலுவைச் சங்கம் —

(11.09.98)

நல்லூரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் செஞ்சிலுவைச்சங்க பணிகளில் ஈடுபட்ட எந்தவொரு வெளிநாட்டவரும் கொல்லப்படவோ அல்லது காயப்படவோ இல்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. முன்னர் இக் குண்டுவெடிப்பில் சர்வதேச உதவி நிறுவனங்களைச் சேர்ந்த சிலரும் அகப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன; அச் செய்திகளில் உண்மை இல்லை எனக் கூறிய செஞ்சிலுவைச் சங்க அதிகாரி, தாம் இது குறித்து மேலதிகத் தகவல்களைத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

ஆனால் பிற சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்த வெளிநாட்டு தொண்டர்கள் எவரும் இக் குண்டு வெடிப்பில் அகப்படவில்லை என நம்பப்படுகிறது.

# வன்னி மக்கள் பட்டினி சாவில்

## மனித நேயம் மிக்க அனைவரும் உதவவேண்டும்

### — கூட்டுறவு சங்கங்கள் அவசர வேண்டுகோள் —

சிறீலங்கா அரசின் நிவாரண வெட்டு உணவு, மருந்து தடையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவலத்தை குறைக்க அனைத்து தமிழ் மக்களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியம் அவசர அவசரமாக அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டுகோளை விடுத்துள்ளது.

இடம் பெயர்ந்துள்ள மக்களின் மேல் சுமத்தப்பட்டுள்ள நிவாரண வெட்டினால் இலட்சக்கணக்கான மக்கள் என்றும் இல்லாதவாறு அதி உச்ச அவல நிலையை அடைந்துள்ளனர். இவ் அவல நிலைபற்றி சர்வதேச அமைப்புக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புக்களும் பல வேண்டுகோள்களை விடுத்த போதும் அரசு செவிசாய்க்கவில்லை. மக்களை பட்டினி போட்டு தனது இராணுவ நடவடிக்கைகளை வெற்றிகொள்ள முனைகின்றது. இதனால் நிவாரண தடையானது மிகவும் இறுக்கமான நிலையை அடைந்துள்ளது.

வன்னி பெருநிலப்பரப்பிலும், முல்லைத்தீவிலும் பெரும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் மக்களின் சார்பிலும் கேட்டுக்கொள்கின்றோம். மனித நேயம் மிக்க அனைத்து மக்களும் உடனடியாக தமது பங்களிப்பினை வழங்கி இம் மக்களின் பட்டினிச்சாவை தடுத்து நிறுத்தவேண்டும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சித்தாண்டியில் இரு படையினர் பலி

மட்டு. வாழைச்சேனை பிரதான வீதிவழியாக ரோந்து சென்ற சிறீலங்கா படையினர் விடுதலைப் புலிகளினால் சித்தாண்டியில் வைத்து திடீர் தாக்குதலுக்கு உள்ளானார்கள். கடந்த வியாழன் மாலை இடம்பெற்ற இத் தாக்குதலின் போது இரு படையினர் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. கொல்லப்பட்ட படையினர் பொலநறுவை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இத் தாக்குதலின்போது படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒருவரை, விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கூறி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக புலிகளிடம் ஒப்படைக்க முயற்சி எடுத்துள்ளனர்.

# ரெலோ உறுப்பினர் கொலை

மட்டு. செங்கல் ரெலோ முகாமைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கடந்தவாரம் இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஐயங்கேணி, பாநதி கிராமத்தைச் சேர்ந்த சின்னத்துரை திலகநாதன் (21) கண்ணன் என்பவர் கடந்த வியாழன் இரவு பத்து மணியளவில் கொம்மாந்துறை சிறீலங்கா இராணுவ முகாமுடன் அமைந்துள்ள ரெலோ அலுவலகத்திலிருந்து உள்வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை செங்கலடி மகா வித்தியாலயத்தின் முன்னால் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என ரெலோ தெரிவித்துள்ளது.

# புலிகளுடன் இணைந்து அரசை கவிழ்க்க சதி

## ஜயலத் ஜயவர்த்தன மறுப்பு

'நான் மடுவிற்கு இரகசியமாக பயணத்தை மேற்கொள்ளவில்லை. பாதுகாப்பு அமைச்சின் முன்னனுமதி பெற்றுத்தான் மடுவில் தங்கியுள்ள அகதிகளை பார்வையிடச் சென்றேன். ஆனால் தற்போது அரசு எனது மடு விடயம்பற்றி ஏன் சந்தேகங்களை கிளப்புகின்றது என்றுதான் தெரியவில்லை' என ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இவரது வீட்டிற்குச் சென்ற விசேட பொலிசாரும், புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவர்களும், நான்கு மணி நேரமாக இவரை தீவிர விசாரணை செய்துள்ளனர்.

புலிகளின் தலைவர்களில் யார் யாரை சந்தித்தீர்கள் என கேட்கப்பட்டதாகவும், புலிகளுக்கும் தனக்கும் என்ன தொடர்பு உள்ளதெனவும் விசாரித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் ஒரு அரசியல்வாதி அதுவும் பாராளுமன்ற உறுப்பினர் இன, மத பேதம் பாராது சேவை செய்வதே தனது பணி. அதுவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் உறுப்பினராக உள்ளதால் அகதிகளை பார்வையிடச் சென்றதாக கூறியுள்ள அவர், புலிகளுடன் இணைந்து ஐ.தே.கட்சி அரசை கவிழ்க்க சதிசெய்வதாக அரசாங்கம் கூறிய குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ளார்.

# புலிகளுடன் பேசுவது பற்றி

## பாராளுமன்றத்தில் கடும் வாக்குவாதம்

(14.09.98)

புலிகளுடன் நிபந்தனையற்ற முறையில் பேசவேண்டும் என ஐ.தே.க. பாராளுமன்றத்தில் கோரியுள்ளது. புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் பேட்டியை ஆதாரம்காட்டி தமது வேண்டுகோளை ஐ.தே.க. பாராளுமன்றத்தில் விவாதித்தது. நிபந்தனையற்ற பேச்சுக்களை தமது அரசு நடத்தாது என பதிலளித்த அரசு, ஐ.தே.க. புலிகளுடன் சேர்ந்து தமது அரசைக் கவிழ்க்க நினைக்கிறது என குற்றம்சாட்டியது.

அண்மையில் வன்னிக்கு விஜயம் செய்த ஐ.தே.க. பா. உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவை அரச உறுப்பினர்கள் 'புலிகளின் கையாள்' என குற்றம்சாட்டினர். அவர் குற்றம் புரிந்தால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யுமாறு ஐ.தே.க. அரசை கேட்டுள்ளது. தமது கட்சி நாட்டின் நலனை முன்னிட்டுத்தான் நிபந்தனையற்ற பேச்சுக்களை ஆதரிக்கிறது எனவும் ஐ.தே.க. கூறியுள்ளது.

# பாரிஸ் முத்துமாரியம்மன் ஆலயத்தில் பெருங்கவிக்கோவின் சொற்பொழிவு

பாரிஸ் வருகை தந்துள்ள பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை 18.09.98 அன்று மாலை 7.30 மணிக்கு பாரிஸ் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற உள்ளது.

# கிறீபீல்ட்டில் அமைதிப் பேரணி

சிறீலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்கவும், சிறீலங்கா அரசின் தமிழர்கள் மீதான அடிப்படை மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தவும், ஜேர்மனியிலிருந்து தமிழர்கள் திருப்பி அனுப்புவதை தடுத்து நிறுத்தவும் கோரி பத்துக்கு மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிறீபீல்ட் தமிழர் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அமைதிப் பேரணி 17.09.98 வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு Neu Markt. Krefeld (Kauf hof) அருகாமையில் ஆரம்பமாகி Krefeld நகரபிதா வாசல் தலம் நோக்கி நடைபெறும்.

# இரத்தினபுரியில் தமிழர் வீடுகள் எரிப்பு

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் 20ற்கு மேற்பட்ட வீடுகள் இனம் தெரியாத சிலரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இருவர் கொல்லப்பட்டிருந்தனர். கொல்லப்பட்ட இருவரும் சிங்கள இளைஞர்கள் என தெரிவிக்கப்படுகிறது. இதனை தொடர்ந்தே அப் பகுதியில் உள்ள தமிழர்களின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. பல தோட்ட தொழிலாளர்களும் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் தோட்டப் பகுதிகளில் ஊடுருவியிருப்பதாக கூறி அண்மைக்காலமாக பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. இதன் காரணமாக அங்கு நடைபெற்ற இரண்டு குழுக்களுக்கிடையிலான தனிப்பட்ட மோதலை இரண்டு இனங்களுக்கிடையிலான மோதலாக மாற்றி பிரச்சினை வளர்க்கும் நோக்கத்துடன் சிலரால் மேற்கொள்ளப்பட்ட விஷமத்தனமான நடவடிக்கை இது என தெரிவிக்கப்படுகிறது.

இம் மோதல் சம்பவத்தையும், வீடுகள் எரிக்கப்பட்டதை அடுத்து அறுப்பொத்த, வேவல்வத்தை பகுதியை சேர்ந்த தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்கு பாதுகாப்புத் தேடி சென்றுள்ளனர். இவ்வாறு சென்ற மக்களின் பல குடும்பங்கள் காடுகளுக்குள் சென்று மறைந்திருந்ததாகவும், அங்கு உணவுகளுக்கு வழியில்லாததால் திரும்பி வந்து தேயிலை தொழிற்சாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க நாவலப்பிட்டிப் பகுதியில் பாடசாலை சென்றுவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்த தமிழ் சிங்கள இளைஞரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் செயலை கண்டித்து சுமார் 3000-ற்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 7—ம் திகதி வேலைக்கு செல்லாமல் பகிஷ்கரிப்பை நடாத்தியதுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் நடாத்தியுள்ளனர்.

# படையினரால் கைது செய்யப்பட்டவர் காணாமல் போயுள்ளார்

கொழும்பிலுள்ள தமிழ் உணவகம் ஒன்றில் பணிபுரிந்துவந்த திருக்கோயில் விநாயகபுரத்தைச் சேர்ந்த பூபாலபிள்ளை சுதாகரன் (19) என்பவர் படையினரால் கொண்டு செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் உள்ள தமிழ் உணவகம் ஒன்றில் கடமையில் இருந்த வேளை, இராணுவ வாகனமொன்றில் வந்த நான்கு சீருடை அணிந்த படையினர் அவ் இளைஞனை விசாரணைக்கென அழைத்துச் சென்றனர் என உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இவரது கைது குறித்து பெற்றோர் இராணுவ முகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் விசாரித்தபோது, தாம் அப்படி ஒருவரையும் கைது செய்யவில்லை என மறுத்துள்ளனர். இது தொடர்பாக தொல்லை தவிர்ப்பு குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பாதாள உலக கோஷ்டி உறுப்பினர் சுட்டுக்கொலை

சிறீலங்கா பொலிசாரினால் மிக தீவிரமாக தேடப்பட்டு வந்த பாதாள உலக கோஷ்டியை சேர்ந்த முக்கிய உறுப்பினரான கிறிஸ்தோபர் பெரி கடந்த செவ்வாய் அன்று பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சிறீலங்கா உதவிப்பொலிஸ் அத்தியட்சர் சாந்திகுமார் கொலை உட்பட பல கொலைகள் தொடர்பாக இவர் தேடப்பட்டு வந்தவர் எனவும் தெரிவித்துள்ள பொலிசார், கடந்த செவ்வாய் அன்று தமக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து ராகம பகுதியில் இவர் தங்கியிருந்த வீடு சுற்றிவளைக்கப்பட்டதாகவும் அப்போது ஏற்பட்ட துப்பாக்கி சமரில் இவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவருடன் கூட இருந்த அனுஷா குமுதினி (22) என்பவரும் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

# அவசரகால சட்டம் நீடிப்பு

அவசரகால சட்டத்தை தொடர்ந்து நாடு பூராகவும் நீடிப்பது தொடர்பாக கடந்த வியாழனன்று வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. அரசின் இப் பிரேரணை வாக்கெடுப்பிற்கு ஆதரவாக 104 வாக்குகளும், எதிராக 80 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதனால் 24 வாக்குகள் வித்தியாசத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்புக்கு தொடர்ந்து அமுலில் இருக்க ஆதரவு கிடைத்துள்ளது.

இவ் வாக்கெடுப்பிற்கு எதிராக ஐ.தே.கட்சியும், முற்போக்கு முன்னணியும், ரெலோவும் வாக்களித்திருந்தன. ஆதரவாக இலங்கை தொழிலாளர் காங்கிரசும், ஈ.பி.டி.பியும் வாக்களித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

# லலித் கொலை தொடர்பாக இன்ஸ்பெக்டர் கைது

முன்னாள் ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், பாதுகாப்பு அமைச்சருமாகிய லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள இவர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, நீதிபதியின் உத்தரவின் பேரில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கூட்டணி சிவா சென்னையில்

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் கடந்த வியாழனன்று சென்னை சென்றுள்ளார். கொழும்பு வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவந்த இவர், வைத்தியரின் ஆலோசனையின் பிரகாரமே சென்னை சென்று தமது குடும்பத்தினருடன் தங்கி ஓய்வெடுக்க சென்றுள்ளார் என கொழும்பு செய்திகள் தெரிவித்துள்ளன.



# Pyramid Proudly Presents

## Isai Puthaiyal

★ மிக விரைவில் எல்லாக் கடைகளிலும்

★ புதிய சிறந்த பாடல்கள்

★ போலிகளைத் தவிர்க்க தங்க எழுத்துக்களினால் Pyramid சின்னம் பொறிக்கப்பட்டுள்ளனவா? என்பதை பார்த்து வாங்கவும்




**PYRAMID AV INTERNATIONAL PTE LTD**
83, Genting Lane # 06-02
Al-Homied Industrial Building,
Singapore 349568
Tel: (65) 841 7140 Fax: (65) 841 7150
E-Mail: pyrsin@paciffic.net.sg

**PYRAMID AV (MALAYSIA) SDE BHD**
11-0 11 th floor. semua house
lorong Bunus enam,
50100 Kuala lumpur, Malaysia
Tel: (603) 4661191 Fax: (603) 4661192
E-Mail: tspyr@mol.net.my

**PYRAMID INTERNATIONAL LIMTED**
2nd Floor, Pyramid House
1, Martindale road, Hounslow west
Middlesex, Unted Kingdom
Tel: (0181) 5722070 Fax: (0181)5 715560
E-Mail: pyramid @dircon.co.uk

**PYRAMID AV (CANADA) INC**
6760 Davand Drive, Unit 1,
Missisauga, Ontario L 5 T 219, Canada
Tel: 905-565-1152 - Fax: 905-565-1345
E-Mail: pyrcan@sympatico.ca

Distributed and Marketed by: ℗ & © 1998 Pyramid av international pte ltd

*Unauthrised public performance Broadcasting and copying of this recording is prohibited*

## Coming Soon

## இசை புதையல்

| பாடல்கள் | Songs |
| --- | --- |
| 1. ஒன்னும் ஒன்னும் (நிலாவே வா) | 1. Onnum Onnum (Nilaavey Vaa) |
| 2. பத்து ரூபா (என் ஆச ராசாவே) | 2. Paththu Rooba (En Aasa Rasavey) |
| 3. சாந்துபொட்டு (வீர தாலாட்டு) | 3. Saanthu Poddu (Veera Thaladdu) |
| 4. முத்தான சேலை (அரிச்சந்திரா) | 4. Munthana Chela (Harichchantira) |
| 5. வயசு புள்ள (கிழக்கும் மேற்கும்) | 5. Vayasu Pulla (Kizhakkum Metkum) |
| 6. பொன் திருவோண (கவலைப்படாதே சகோதரா) | 6. Ponn Thiruvona (Kavalaip padaathe Sakothara) |
| 7. நிலவே நிலவே (நிலாவே வா) | 7. Nilavey Nilavey (Nilaavey Vaa) |
| 8. புதுப்பொண்ணு (கிழக்கும் மேற்கும்) | 8. puthu Ponnu (Kizhakkum Metkum) |
| 9. சந்தன (இரத்னா) | 9. Santhana (Rathna) |
| 10. சோலைக்காட்டு (என் ஆச ராசாவே) | 10. Solaikkaddu (En Aasa Rasavey) |
| 11. ஆளப்பிறந்த (வீர தாலாட்டு) | 11. Aalappirantha (Veera Thaladdu) |
| 12. கம்மாக்கரை (ரத்னா) | 12. Kammakarai (Rathna) |
| 13. ஒரு கத்தரிக்காய்க்கு (கிழக்கும் மேற்கும்) | 13. Oru Kaththarikkai (Kizhakkum Metkum) |
| 14. சந்திர (நிலாவே வா) | 14. Chandra (Nilaavey Vaa) |
| 15. இதழ் செந்தூரம் (ரத்னா) | 15. Ithal Senthuram (Rathna) |
| 16. என்ன இது (அரிச்சந்திரா) | 16. Enna ithu (Harichchantira) |
| 17. பொன்னாப்பிறந்த (கவலைப்படாதே சகோதரா) | 17. Ponnaap Pirantha (Kavalaip padaathe Sakothara) |
| 18. மயங்காத (என் ஆச ராசாவே) | 18.Mayangatha (En Aasa Rasavey) |
| 19. பூங்காற்றே (கிழக்கும் மேற்கும்) | 19. Poongattay (Kizhakkum Metkum) |
| 20. கடலம்மா( நிலாவே வா) | 20. Kadalamma (Nilaavey Vaa) |
| 21. வான்துளி (ரத்னா) | 21. Vaan Thuli (Rathna) |
| 22. காதல் என்பது (அரிச்சந்திரா) | 22. Kathal Ennpathu (Harichchantira) |
| 23. தெக்கு (என் ஆச ராசாவே) | 23. Thekku (En Aasa Rasavey) |
| 24. கத்துங்குயிலே (கிழக்கும் மேற்கும்) | 24. Kaththung Kuyley (Kizhakkum Metkum |
| 25. படிக்கட்டுமா (வீர தாலாட்டு) | 25. Paddikadumma (Veera Thaladdu) |
| 26. நீ காற்று (நிலாவே வா) | 26. Nee Kattu (Nilaavey Vaa) |
| 27. நாடோடிப்பாட்டு (அரிச்சந்திரா) | 27. Nadodi Pattu (Harichchantira) |
| 28. ஈஸ்வரா அல்லா (கவலைப்படாதே சகோதரா) | 28. Eswara Allah (Kavalaip padaathe Sakothara) |
| 29. வஞ்சிக்கொடி (ரத்னா) | 29. Vanchi Kodi (Rathna) |
| 30. அம்மன் கோயில் (வீர தாலாட்டு) | 30. Amman Kovil (Veera Thaladdu) |
| 31. ஏய் பஞ்சரா (என் ஆச ராசாவே) | 31. yea Panchara (En Aasa Rasavey) |
| 32. வாடிப்பட்டி (வீர தாலாட்டு) | 32. vaadi paddi (Veera Thaladdu) |
| 33. அக்குதே (நிலாவே வா) | 33. Akkuthae (Nilaavey Vaa) |
| 34. கும்பாபிஷேகம் (வீர தாலாட்டு) | 34. Kumbabishegam (Veera Thaalaaddu) |
| 35. என்னோட உலகம் (கிழக்கும் மேற்கும்) | 35. Ennoda Ulagam (Kizhakkum Metkum |
| 36. பட்ட பகல் (வீர தாலாட்டு) | 36. Patta Pagal (Veera Thaladdu) |
| 37. வாடி பட்டி (ரத்னா) | 37. Vaadi Padi (Rathna) |

## 6 அதிகாரிகள் பலி -தாக்குதலுக்கு புலிகளே காரணம் - சிறீலங்கா அரசு குற்றச்சாட்டு

*(11.09.98)*

இன்று காலை யாழ். நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தமது ஆறு உயர் அதிகாரிகள் பலியாகி உள்ளதாகவும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் இராணுவத் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளே இக் குண்டு வெடிப்பை நடத்தினர் என குற்றம்சாட்டியுள்ள இராணுவத் தலைமையகம், இதற்கு முன்பு யாழ். நகர மேயராக இருந்த சரோஜினி யோகேஸ்வரன் கொலைக்கும் இவர்களே காரணம் எனக் குற்றம்சாட்டியுள்ளது. யாழ். நகர இராணுவ பொறுப்பதிகாரி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பிரிகேடியர் முனசிங்கா யாழ். நகரின் புதிய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலதிக செய்திகளை வெளியிட இராணுவம் மறுத்துள்ளது

## விக்கிரகங்களை திருடி விற்பனை செய்யும் படையினர்

250 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்து விக்கிரகம் ஒன்று கொள்ளையடித்தவர்களிடமிருந்து சிறீலங்கா பொலிசார் மீட்டெடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கோயில்களில் இருந்து விக்கிரகங்களை திருடி விற்பனை செய்துவந்த இராணுவ மேஜர், லெப்டினன் தரத்திலான சிலர் கடந்தவாரம் அநுராதபுரத்தில் விக்கிரகத்தை விற்பனை செய்ய முயன்று கொண்டிருந்தவேளை பொலிசாரினால் பிடிக்கப்பட்டுள்ளனர். 250 வருடங்கள் பழமை வாய்ந்த இவ் விக்கிரகத்தை எங்கிருந்து திருடியுள்ளார்கள் என்பது பற்றி இன்னும் தெரியவரவில்லை. இதன் பெறுமதி 85 இலட்சங்களுக்கு மேல் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இச்சிலை திருட்டு தொடர்பாக 10 படையினர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில், இவர்கள் ஒரு குழுவாக இயங்குவதாகவும் திருடப்படும் சிலைகளை பேரம்பேசி விற்பனை செய்வதற்கு பல தரகர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

## மார்ச் 3–ல் ஜனாதிபதி தேர்தல்?
### - சண்டே ரைம்ஸ் -

*(13.09.98)*

2000-ம் ஆண்டு இடம்பெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலை அடுத்தவருடம் மார்ச் 3-ம் திகதி அளவில் நடாத்த அரசு முயல்வதாக 'சண்டே ரைம்ஸ்' செய்திவெளியிட்டுள்ளது.

அரசியல் மற்றும் சோதிட காரணங்களுக்காக இம்முடிவினை பண்டாரநாயக்க குடும்பம் எடுத்ததாகவும் ஜனாதிபதி தேர்தலை காரணம்காட்டி மாகாணசபை தேர்தலை பின்போட அவர்கள் முடிவுசெய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது கண்டி, அக்கைல, வியாங்கோட-அநுராதபுரம் பகுதிகளில் தனது அரசுக்கு ஆதரவான பரப்புரைகளை தீவிரமாக மேற்கொண்டுவரும் சந்திரிகா விஜயகுமாரதுங்க தனது தனிப்பட்ட செல்வாக்குகளை அப்பகுதிகளில் அதிகரிக்க முற்படுகிறார்.

மத்திய, ஊவா மற்றும் வடமேற்கு மாகாணங்களில் தோல்வி ஏற்படும் என சந்திரிகா அரசு அச்சம் கொண்டுள்ளது. சில மேற்கு மாகாணங்களில் அரசு நம்பிக்கை இழந்துள்ளது. மேலும் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் உணவுப் பொருட்களின் விலை ஏற்றமும் வேலைவாய்ப்பு பிரச்சினையும் சந்திரிகா அரசிற்கு சாதகமாக இல்லை. இதே வேளை சமாதானம் பற்றிய சந்திரிகாவின் பரப்புரைகளும் மக்களிடம் எடுபடக்கூடிய சூழ்நிலையில் இல்லை.

எனவே ஜெயசிக்குறு நடவடிக்கையை தீவிரமாக முடுக்கிவிடுவதன் மூலம், சிங்கள வாக்காளர்களை குறுங்காலத்திற்கு அரச ஆதரவாளராக வைத்திருக்கலாம் என சந்திரிகா நம்புவதாக கருதப்படுகிறது. மேலும் ஐ.தே.க. மீள வலுப்பெற கால அவகாசம் கொடுக்கக்கூடாது எனவும் சந்திரிகா கருதுகின்றார்.

## வன்னி உணவுநிலை மோசமடைகிறது தேசிய சமாதான பேரவை எச்சரிக்கை

*(14.09.98)*

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் களநிலவரம் கடுமையானதாகி வருகிறது என தேசிய சமாதான பேரவை எச்சரித்துள்ளது. கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் அரச நிர்வாகம் முழுமையாக செயலிழந்துள்ளதுடன், சுமார் 70,000 இடம்பெயர்ந்த குடும்பங்களின் உணவு நிவாரணம் அரசினால் நிறுத்தப்பட்டுள்ளதையும் பேரவை தன் எச்சரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. இப் பகுதிகளில் உணவு நிலை மோசமடைவது பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு சாதாரண சூழலை ஏற்படுத்தித்தராது எனவும் பேரவை கூறியுள்ளது.

## யாழ். குடாவிற்கு ரூபவாஹினி?

*(14.09.98)*

சிறீலங்காவின் தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியை யாழ். குடாவிற்கும் ஒளிபரப்பவேண்டும் என யாழ் பாராளுமன்ற உறுப்பினர் இலியாஸ், சிறீலங்கா அரசை கோரியுள்ளார். குடாநாட்டு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே இவ் வேண்டுகோளை தான் கேட்பதாக இவர் அரசிடம் கூறியுள்ளார். யாழ்.நகர் பகுதிகளுக்கு மட்டும் தற்காலிகமாக ரூபவாஹினி ஒளிபரப்பப்பட்டு வந்தது. எனினும் இது தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

## யாழ். குடாவுக்கு 5000 போத்தல்கள்?

யாழ்குடாவிற்கு அனுப்பப்பட இருந்த 5000 போத்தல் மதுபானங்களை சிறீலங்கா இறைவரி திணைக்களம் தடுத்து வைத்துள்ளது. தமது திணைக்களத்திற்கு போலியான விலை விபரங்களைக் காட்டிய குற்றத்திற்காகவே மதுபானங்களைத் தடுத்துவைத்துள்ள இறைவரி திணைக்களம் அவற்றின் உரிமையாளரான ஒரு வர்த்தகரையும் கைதுசெய்துள்ளது.

## வெளிவிவகார தமிழ் அதிகாரி வேலை நிறுத்தம்

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சின் தமிழ் அதிகாரி காண்டீபன் பாலசுப்பிரமணியம் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின்கீழ் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்ப் பெயர்களுடன் கூடிய இரு பாஸ்போட்டுகளை அவரிடமிருந்து கைப்பற்றியதாக பொலிசார் குற்றம்சாட்டியதை அடுத்து இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர் நெதர்லாந்தில் உள்ள தூதரகத்தில் 2-வது செயலாளராக பதவி ஏற்க இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உயர்நீதிமன்ற நீதிபதி கைது

*(14.09.98)*

சிறீலங்காவின் புலனாய்வுப் பிரிவு, உயர்நீதிமன்ற நீதிபதி மகனகம திலகரத்தினாவை கைது செய்துள்ளது. இக் கைது அரசியல் காரணங்களுக்காக இடம்பெற்றது எனவும் சட்ட விரோதமானது எனவும் சட்டத்தரணிகள் குரலெழுப்பியுள்ளனர். ஒரு இராணுவ சேர்ஜன்ட்டை தாக்கி ஊனப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் நீதிபதியும் அவரது மகனும் சிஐடி. யினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெகு விரைவில்.....
ஈழமுரசில்

**யாழ். கோட்டையினுள் 107 நாட்கள்'**

தொடர்

1990-ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் யாழ். கோட்டை இருந்தபோது, அங்கு கடமையாற்றிய சிறீலங்கா தமிழ் பொலிசார் 107 நாட்களும் கோட்டையினுள் நிகழ்ந்த பயங்கர அனுபவங்களை ஈழமுரசிற்கு தொடராக வழங்குகின்றார்

## பேர்லினில் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலமும் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும்

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியவர்களை நாடு கடத்துவதை கண்டித்தும், சிறீலங்கா அரசின் அடக்குமுறையையும், மனிதஉரிமை மீறல்களையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் பொருட்டு பேர்லின் ஈழத்தமிழர் நலன்புரிக் கழகம் எதிர்வரும் 18.09.98 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பகல் 14.00 மணிவரை Verwaltungsgericht, Kirch str 07, 10557 Berlin (U. Bhan Hof TURMSTR Line.9) என்னும் முகவரியில் உயர் நீதிமன்றத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தையும், உண்ணாவிரதம் இடம் பெறும் இடத்திலிருந்து பகல் 14.00 மணிக்கு எதிர்ப்பு ஊர்வலம் Kirch str, Alt - Moabit, Paul Str, Spreeweg, StraBe des 17 Juni, Ernst - Reuter - Platz, Bismarck Str, Leibniz Str, Kant Str ஆகிய பாதைகளூடாக சென்று Breitscheidplatz (Zoo - Garten) ஐ அடையும் எதிர்ப்பு ஊர்வலப் போராட்டத்தையும் நடாத்த உள்ளது.

ஜேர்மன் வாழ் தமிழீழ மக்கள் அனைவரும் இப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**தேவை**

பிரெஞ்சு மொழியில் தொலைபேசியில் உரையாடக் கூடியவரும்,
குறிப்பெடுக்கக்கூடியவரும் (விபரங்களை) உடன் தேவை
சம்பள விபரம் நேரில்
வேலை நேரம்: 9.00 மணி - 18.00 மணி)
தொடர்புகளுக்கு: சன் - 01 44 92 04 66 / 01 44 92 46 66

பாரிஸ் லாசப்பலில்

உங்கள் அனைத்து இறைச்சி வகைகளுக்கும்

**BOUCHERIE LA CHAPELLE**

கோழி, கோழிக்கால், ஆட்டிறைச்சி
மாட்டிறைச்சி வகைகளுடன்
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
உடன் மீன் வகைகள்
இவை மட்டுமா?
சனி, ஞாயிறு தினங்களில்
ஆட்டிறைச்சிப் பங்குகள், உயிர்க்கோழி
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**BOUCHERIE LA CHAPELLE**

62, Rue Louis Blanc, 75010 Paris
Tel: 01 40 38 34 08
Mo: La Chapelle ou Gare du Nord
(மக்கள் கடைக்கு முன்பாக)

# யாழ். குண்டுவெடிப்பு

## சிங்கள அரசிற்கு விடுத்த புதிய எச்சரிக்கை

### போர்முனை ஆய்வு



பண்ணையார்

இராணுவப் பலத்தைக் கொண்டு தமிழர்களை அடக்கி அவர்களது விடுதலை உணர்வினை மழுங்கடிக்க முடியும் என்ற சிறீலங்காவின் நினைப்பிற்கு மீண்டும் ஓர் எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டுள்ளது.


எத்தனை இலட்சம் படையினரை தமிழர் மத்தியில் நிறுத்தினாலும், அவர்களது விடுதலை இலக்கோ, எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து முன்னேறும் என்பதை கடந்த வாரம் சிறீலங்கா மீண்டும் உணர்ந்து கொண்டுள்ளது.

1995-ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ். குடாவை 'சூரியக் கதிர்' இராணுவ நகர்வின் மூலம் பல்லாயிரம் படையினரைக் கொண்டு சிறீலங்கா கைப்பற்றிக் கொண்டது. தான், இந்த இராணுவ வெற்றியின் மூலம், விடுதலைப் புலிகளை அவர்களது பலப் பிராந்தியத்திலிருந்து தூக்கி எறிந்துவிட்டதாகவும், தமிழர்களை விடுதலைப் புலிகளின் சிறைக்குள்ளிருந்து மீட்டுவிட்டதாகவும் சர்வதேச உலகிற்கு சிறீலங்கா அறிவித்தது. சிறீலங்காவின் முழு நிலப்பரப்பின் ஐந்து வீதத்திற்கும் குறைந்த பகுதியினைக் கொண்டிருந்த யாழ். குடாவில் தனது படைப் பலத்தின் மூன்றில் ஒரு பகுதியை சிறீலங்கா முடக்கியது. அங்கு மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்திய இராணுவம் பல வழிகளிலும் அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது.

**இம்முறைதான் இம் மண்டபத்தில் இராணுவ பொலிஸ் அதிகாரிகள் கூடியதாக சொல்லப்படுகின்றது. இம் மண்டபத்தில் அன்றைய தினம் இராணுவ உயர் அதிகாரிகளும், போலிஸ் அதிகாரிகளும் கூடுகின்றார்கள் என்ற தகவல் மிகவும் நம்பகமான வட்டாரங்களின் ஊடாக தாக்குதல் நடாத்தியவர்களுக்குக் கிட்டியுள்ளது**

யாழ். குடா, 1983-ம் ஆண்டிற்கு முன் இருந்ததை விட இன்று மிக அதிகமான இராணுவ நிலைகளையும், முகாம்களையும் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களைத் தவிர்ப்பதற்காக ஏராளமான சோதனை நிலைகளை அமைத்தும், மக்களுக்கு அவர்களது பிராந்தியத்தில் வேறுபடுத்தி அறியக்கூடிய விதத்தில் தனியான அடையாள அட்டைகளை விநியோகித்தும், சிறீலங்கா தமிழ் மக்களை வேறுபடுத்தியது.

1995-ம் ஆண்டில் 'ரிவிரச'வின் மூலம் யாழ். குடாவின் பெரும்பான்மையான பகுதியை சிறீலங்கா கைப்பற்றிக்கொண்டிருந்தாலும், பருத்தித்துறைக்கு அப்பால் கடற்கரையை அண்டிய பகுதிகள் உட்பட வடமராட்சியின் பல பகுதிகளை விடுதலைப் புலிகளே தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். பலமுறை இப் பகுதிகளுக்குள் ஊடுருவ முயன்ற சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளால் துரத்தியடிக்கப்பட்டனர் தன்னால் கைப்பற்றப்பட்ட யாழ். குடாவில் மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் என்பதை வெளியுலகிற்குக் காட்ட சிறீலங்கா பல முறைகளிலும் முயன்றது. சுதந்திரமாக இருந்த மக்கள் 35000 இற்கும் மேற்பட்ட இராணுவத்தால், அவர்கள் வாழும் பகுதிகளிலேயே சிறைவைக்கப்பட்டார்கள். ஆனால் வெளி உலகிற்கோ, அம் மக்களுக்கான நலன்களை தாமே பேணுவதாக சிறீலங்கா கூறிக்கொண்டது.



அன்றாடத் தேவைகளுக்காக மக்கள் ஏங்கிக்கொண்டிருக்கையில், சிறீலங்கா அரசு, யாழ். குடாவில் பல தொலைபேசி நிலையங்களை அமைத்து தாம் தமிழ் மக்களின் குறைகளைத் தீர்த்துவிட்டதாகக் கூறியது. அங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவத்திற்கு வழங்கும் மின்சாரத்தின் ஒரு பகுதியை மக்கள் குடியிருப்புக்களுக்கு வழங்கி, உலகை ஏமாற்றியது. இதன் அடுத்த கட்டமாக அங்கு உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி மக்கள் சகஜநிலைக்குத் திரும்பிவிட்டதாக உலகிற்குக் கூறியது. ஆனால் உண்மையில் அம் மக்கள் அடக்குமுறை இராணுவத்தின் கால்களுக்குள் சிக்குண்டு கிடக்கின்றனர் என்பதே உண்மை.

யாழ். குடாவிலிருந்து விடுதலைப் புலிகளை துரத்திவிட்டதாக சிறீலங்கா கூறினாலும், யாழ். குடாவில் விடுதலைப் புலிகளின் அணிகள் தொடர்ந்தும் நிலை கொண்டிருந்தன. ஆனால் கால மாற்றத்திற்கேற்ப அவர்கள் தங்களது அடையாளங்களையும் மாற்றிக்கொண்டனர். சிறீலங்காவின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கு எதிரான அவர்களது நடவடிக்கைகள் யாழ். குடாவில் தொடர்ந்தவண்ணமே இருந்தன. 1996-ம் ஆண்டு ஜூலை 4-ம் திகதி யாழ். நகரில் அரச நிறுவனம் ஒன்றைத் திறக்க வந்த சிறீலங்காவின் அமைச்சர் நிமால் சிறீபால டீ சில்வா விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானார். இத் தாக்குதலில் அவர் காயங்களுடன் தப்பிக்கொண்டாலும், அன்றைய யாழ். நகரத் தளபதி ஏ.எஸ். ஹமங்கொட ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். அவருடன் வேறு சில இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தின் பின் விடுதலைப் புலிகளின் அணிகளால் யாழ். குடாவில் பல தாக்குதல்கள் இராணுவத்திற்கு எதிராக நடாத்தப்பட்டன.

இவ்வகையில் கடந்த வருடம் மாவீரர்தின நிகழ்வுகளின்போது, சிறீலங்கா இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் மிகவும் முக்கியமானவை. நீண்ட காலத்தின் பின் இரு தரப்பினரும் யாழ். குடாவில் மோட்டார்களையும், பீரங்கிகளையும் பாவித்தனர். இதுபோன்று வடமராட்சிப் பகுதியிலும், தென்மராட்சியிலும் பல தொடர் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டன. இப்படி இராணுவத்திற்கு எதிரான நெருக்குதல்கள், அதிகரித்த வேளை, சிறீலங்கா உள்ளூராட்சித் தேர்தல்களை அங்கு அறிவித்தது. இத் தேர்தல்களை நடாத்தி, அங்கு பெயரளவில் ஒருவித ஆட்சியமைப்பை ஏற்படுத்தி, உலகை ஏமாற்ற சிறீலங்கா முனைந்தது.

ஆனால் யாழ். குடா மக்களின் பெரும்பான்மையானவர்கள் சிறீலங்கா அரசின் பொய்த் தேர்தலை பகிஸ்கரித்தனர். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களின் முடிவினைக்கொண்டு, அங்கு மாநகர சபை ஏற்படுத்தப்பட்டது. இதன் பின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை புறக்கணித்துவிட்டார்கள் என்ற பிரச்சாரத்தை தென்பகுதி மக்களுக்கும் உலகிற்கும் சிறீலங்கா முன்வைத்தது. இக் காலகட்டத்தில்தான் யாழ். நகரின் மேயராகப் பதவி ஏற்ற சரோஜினி யோகேஸ்வரன் சில இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்வேளையில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் யாழ். குடாப் பகுதியில் மீண்டும் அதிகரித்தன. குருநகர் பகுதியில் இராணுவ தொடர் காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்டன. இத் தாக்குதலானது, யாழ். நகரப் பகுதியில் இராணுவத்தின் பாதுகாப்பிற்குச் சவாலாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து வெற்றிடமாக இருந்த இந்தப் பதவிக்கு கொழும்பு வழக்கறிஞர் சிவபாலன் அமர்த்தப்பட்டார். இவர் மக்கள் நலன்களைக் கவனிப்பதாகக் கூறினாலும், இராணுவத்தின் ஒத்துழைப்புடன் பல காரியங்களை மேற்கொள்ள முயன்றார். யாழ். பகுதியில் 95-ம் ஆண்டிற்கு முன் கட்டப்பட்ட சில கட்டடங்களை இடிப்பதிலும் அவர் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். எப்போதும் இராணுவத்தினுடனேயே காணப்பட்ட சிவபாலன், இறுதியாக இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நகரப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த வேளை, குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்டார்.

யாழ். நகர சபையின் தற்காலிக அலுவலகமாக அமைந்திருந்த நல்லூர் கல்யாண மண்டபமே குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியது. இத் தாக்குதலில் அவருடன் சிறீலங்கா அரசின் யாழ். குடா முக்கியஸ்தர்கள் பலர் கொல்லப்பட்டனர். மிகவும் நுண்ணிய அதி நவீன முறையில் தயாரிக்கப்பட்ட குண்டுகளே அங்கு வெடிக்கவைக்கப்பட்டன என்று இராணுவ தளபதி கூறினார். யாழ். குடாவில் அதிஉயர் பாதுகாப்புடன் கூடிய நல்லூர்ப் பகுதியில், அதிலும் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட ஓர் மாநாட்டின் மத்தியில் குண்டு வெடித்ததானது, இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள பலத்த பின்னடைவு என யாழ். குடா இராணுவத் தளபதி பலகல்ல கூறினார். அவர், சில மாதங்களுக்கு முன் இம் மண்டபம் திருத்தப்பட்டபோது, கூரைப் பகுதியில் இக் குண்டுகள் மறைத்துவைக்கப்பட்டன என்றும் பின்னர் உயர் இராணுவ அதிகாரிகள் அங்கு வந்தபோது அவை வெடிக்கவைக்கப்பட்டன என்றும் கூறினார். ஆனால், வேறு தகவல்கள் குண்டுவெடிப்பு நடப்பதற்கு முதல் நாள் இரவே சில இளைஞர்களால் அங்கு குண்டுகள் பொருத்தப்பட்டன என்று தெரிவிக்கின்றன.

யாழ். மேயர் தனது தேவைகளுக்காக எப்போதுமே இராணுவ முகாமிற்குச் செல்வதே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் இம்முறைதான் இம் மண்டபத்தில் இராணுவ பொலிஸ் அதிகாரிகள் கூடியதாக சொல்லப்படுகின்றது. இம் மண்டபத்தில் அன்றைய தினம் இராணுவ உயர் அதிகாரிகளும், போலிஸ் அதிகாரிகளும் கூடுகின்றார்கள் என்ற தகவல் மிகவும் நம்பகமான வட்டாரங்களின் ஊடாக தாக்குதல் நடாத்தியவர்களுக்குக் கிட்டியுள்ளது என கொழும்பிலிருந்து வெளிவரும் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அப் பத்திரிகை, நடந்த குண்டுத் தாக்குதல் பற்றிக் கூறுகையில் சிறீலங்கா எவ்வளவுதான் இராணுவத்தினரை அங்கு குவித்தாலும், தமிழ் உளவாளிகளை செயற்படுத்தினாலும் விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களையோ அல்லது அவர்களது ஆதரவாளர்கள் பற்றிய தகவல்களையோ பெற்றுக் கொள்ள முடியாதது மட்டுமல்ல அங்குள்ள மக்கள் என்றுமே விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட மாட்டார்கள் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது என தனது கட்டுரையில் கூறியுள்ளது.

# நாங்கள் தொடர்ந்தும் ஏமாறத் தயாராக இல்லை

## தமிழ்ச்செல்வன் -

*(விடுதலைப் புலிகளின் அரசியல் பீடப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் கொழும்பு 'சண்டே லீடர்' வார ஏட்டிற்கு வழங்கிய செய்தியின் தமிழாக்கம். சென்றவாரத்தின் தொடர்ச்சியை இங்கே தருகின்றோம்)*

**கேள்வி: நீங்கள் நம்பிக்கையைப் பற்றிப் பேசுகின்றீர்கள். ஈழப்போர் வரலாறு பூராவும் நீங்கள்தான் நம்பிக்கையை உடைத்தவர்களாக இருக்கின்றீர்கள். பேச்சுவார்த்தை தொடர்பான வரலாறு 1984 திம்பு பேச்சுவார்த்தைகளின்போது ஆரம்பமாகியது. அன்றிலிருந்து ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரேமதாச மற்றும் சந்திரிகா விஜயகுமாரதுங்க ஆகியோரது அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. சிங்கள மக்கள் அமைதியின் மீது நம்பிக்கை வைத்தனர். உங்கள் மீது நம்பிக்கை வைத்தனர். ஆனால் நீங்கள்தான் அவர்களுடைய அரசாங்கங்களை எப்போதும் ஏமாற்றியதாக சிங்கள மக்கள் சொல்கிறார்கள். சமாதானம் என்ற வார்த்தையை அவர்கள் வெறுக்கும் அளவிற்கு அவர்களுடைய நம்பிக்கையை நீங்கள் உடைத்துவிட்டீர்கள். அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பான விடயத்தில் உங்களோடு பேசுவதற்கு அஞ்சுவதற்கான காரணம் அதுவேயாகும். அவர்கள் சிங்கள மக்களிடம் ஆதரவை இழந்துவிடுவார்கள் என அஞ்சுகிறார்கள். நீங்கள்தான் சிங்கள மக்கள் இவ்வாறு எண்ணுவதற்கான பின்னணியை தோற்றுவித்தீர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?**

பதில்: நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். விடையளிப்பீர்களா? முன்னைநாள் தமிழ் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு சமாதான பாதையில் இணைந்தனர். ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு அரசியல் மீது நம்பிக்கைவைத்து ஜனநாயக வழியிலான அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்றனர். அரசாங்கத்தினால் இவர்களை திருப்திப்படுத்த முடிந்ததா? அவர்கள் எதிர்பார்த்த தீர்வை அரசாங்கத்தினால் வெற்றிகரமாகக் கொடுக்க முடிந்ததா? ஆயுதங்களைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்தில் கலந்த இவர்களை அரசாங்கம் ஏமாற்றியது என்பது உண்மையல்லவா?

என்னிடம் மற்றுமொரு கேள்வியும் உண்டு. எந்தவொரு தீர்வுக்கும் இந்தநாட்டின் பிரதான அரசியல் கட்சிகளும் சம்மதிக்க வேண்டும். இன்று இவ்விரு கட்சிகளும் எங்களை மறந்துவிட்டன. ஆயுதங்களைக் கைவிட்ட முன்னாள் ஆயுதக் குழுக்கள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து அவர்கள் தமிழர்களது பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்படுகின்றார்கள். இவர்களுக்கேனும் திருப்திதரக்கூடிய தீர்வொன்றை மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் ஒன்றிணைந்து தர முடிந்ததா? யாரை ஏமாற்றினார்கள்? யார் ஏமாற்றப்பட்டார்கள்?



வரலாறு பூராவும் இந்த நாட்டின் இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளாலும் நாம்தான் ஏமாற்றப்பட்டோம். எதற்காக இளைஞர்கள் விடுதலைப் புலிகளின் அங்கத்துவத்தை கோருகின்றார்கள்? பிற இளைஞர்களும் யுவதிகளும்போல் சாதாரண வாழ்வு வாழக்கூடிய சூழ்நிலை இருந்தால் எதற்காக அவர்கள் ஆயுதங்களைத் தூக்கினார்கள்? ஏனெனில் வரலாறு பூராவும் அவர்கள் அடக்கப்பட்டு வந்தார்கள். ஏனெனில் வரலாறு பூராவும் அவர்கள் ஏமாற்றப்பட்டு வந்தார்கள். யாருக்கு அநீதி விளைவிப்பதற்காக யாரால் மொழிச்சட்டம் கொண்டுவரப்பட்டது? யாருக்கு அநீதி விளைவிப்பதற்காக சிங்களவர்களால் குடியேற்றத் திட்டங்கள் தொடக்கப்பட்டன. யாருக்கு அநீதி விளைவிப்பதற்காக பல்கலைக்கழக அனுமதிகளில் இன ரீதியான பாகுபாடுகளைக்கொண்ட அனுமதிமுறை கொண்டுவரப்பட்டது. இந்நாட்டில் தமிழர்களுக்கு அநீதி இழைப்பதையே நோக்காகக் கொண்டு அதனைக் கொண்டு வந்தார்கள். நான் இன்று ஒரு அரசியல் பிரிவில் தலைவனாக உள்ளேன். அநீதிக்கு எதிராகப் போராடுவதற்காகவே இன்று ஆயுதமேந்தினேன். என்னை ஆயுதம் ஏந்தும்படி எவரும் கேட்கவில்லை. இரு பிரதான அரசியல் கட்சிகளுமே எங்களை ஆயுதம் தூக்குவதற்கு தூண்டின. அவர்கள்தான் எங்களுக்குத் தரப்பட்ட ஒரே மாற்றுத் தீர்வு ஆயுதங்களே எனக் காட்டினார்கள். அவர்கள்தான் இந்த நிலைக்கு எங்களைத் தள்ளினார்கள்.

**கேள்வி: இது எமது கேள்விக்கு தெளிவான பதில் இல்லையே?**

பதில்: பொறுங்கள். அந்த விடயத்திற்கு வருகின்றேன். நீங்கள் ஏமாற்றுவது பற்றி என்னிடம் கேள்வி எழுப்பினீர்கள். பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தைக்காட்டித் தமிழர்களை இந்த நாட்டில் ஏமாற்றியவர்கள் யார்? தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் நீதியான தீர்வை வழங்குவதாக உறுதி கூறி அதிகாரத்திற்கு வந்த பின்னர் தமிழர்களை அவர்கள் ஊடாக ஏமாற்றியது யார்? சேனநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்தைக்காட்டி தமிழ் மக்களை ஏமாற்றியது யார்? தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உறுதி மொழிகளை வழங்கிய பின்னர் அவர்களூடாக தமிழர்களை ஏமாற்றியது யார்? ஆம்! நாங்கள் சிங்கள அரசாங்கத்தினால் ஏமாற்றப்பட்டோம். நாங்கள்தான் ஏமாற்றப்பட்டவர்கள். எப்போதுமே ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது என்பதற்காகவே நாங்கள் ஆயுதங்களைத் தூக்கினோம்.

வரலாற்றை திரிபுபடுத்தாதீர்கள். ஏமாற்றும் வரலாறானது இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளினதும் பாரம்பரியமாகும். எங்களது வரலாறு ஏமாற்றப்பட்டவர்களின் வரலாறாகும். நாங்கள் மட்டும் ஏமாற்றப்படவில்லை. எவ்வளவு தூரம் வரலாறு பூராவும் சிங்கள வாக்காளர்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். போலி வாக்குறுதிகளைக் கொடுத்து சிங்கள மக்களுடைய வாக்குக்களை இவர்கள் களவாடவில்லையா?

தயவு செய்து இந்தச் செய்தியை எமது சகோதர சிங்கள மக்களிடம் சொல்லுங்கள். தயவு செய்து இந்தப் பிரச்சினையை இனம் காணுமாறு அவர்களைக் கேளுங்கள்! இராணுவத்தில் இணைந்த எமது சிங்கள சகோதரர்கள் பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களாவர். எதற்காக இந்தச் சண்டையில் அவர்கள் எங்களின் இரையாக்கப்படுகின்றார்கள்? ...... அவர்களால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். தொழிற்கூடங்களையும், கட்டடங்களையும் அவர்களால் கட்டமுடியும். வேலைவாய்ப்பின்மை இன்று அவர்கள் எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சினையாகும். அவர்களுக்கு தங்குமிடமில்லை. வரவுக்கான எந்த ஆதாரங்களும் இல்லை. எமது தமிழ் சகோதரர்களும், சகோதரிகளும் இதே பிரச்சினையை எதிர்கொள்ளுகின்றார்கள். நாம் ஒரே தாயின் பிள்ளைகள். இது எமது நாடு. இது எமது தாய்நாடு. நாங்கள் ஒன்று சேர்ந்தால் இந்த நாட்டை வளர்ச்சியடையச் செய்ய முடியும். எங்களைப்போன்று அப்பாவிச் சிங்கள இளைஞர்களிடம் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான அரசியல் அதிகாரம் உண்டா? இல்லை. எங்களைப்போன்று அவர்களும் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுக் கொண்டு வந்தார்கள்.

நாம் எமது சுதந்திரத்தைப் பெற்று 50 வருடங்களாகிவிட்டது. எப்படியான ஏராளமான வாக்குறுதிகளை அரசியல்வாதிகள் இக் காலப் பகுதியில் எமக்குத் தந்தார்கள். மக்கள் முன்னணி அரசும் இவ்வாறான வாக்குறுதிகளைத் தரவில்லையா? சிங்கள மக்களுக்கு ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடிந்ததால் இவ்வாறு வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமைக்கு என்ன காரணத்தை அவர்கள் சொல்கிறார்கள்? வாழ்க்கை செலவீனம் அதிகரித்து வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினை ஏற்பட்டமைக்கு தொடர்ச்சியான போரே காரணம் எனச் சொல்கிறார்கள். நிறைவேற்ற அதிகாரமுடைய ஜனாதிபதி முறை முதல் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாமைக்குக் காரணம் போர்தான் எனச் சொல்கிறார்கள். சிங்கள மக்கள் சிந்திப்பதற்கான நேரம் இது. நாங்கள் ஏமாற்றப்பட்டதுபோது நீங்களும் ஏமாற்றப்படுகின்றீர்கள். எங்களுக்கும் உங்களுக்கும் பிரதான பிரச்சினை போரல்ல. நாங்களும், நீங்களும் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை நாட்டை அபிவிருத்திகொள்வதே. ஆனால் அரசு சிங்கள மக்களிடம் ஒரு தவறான படத்தைக் காட்ட முற்படுகின்றது. போர்தான் பிரதான பிரச்சினை என அரசாங்கம் காட்ட முற்படுகின்றது. போரிலே அரசாங்கம் வாழ முற்படுகின்றது. போரினை அரசியல் மயப்படுத்துவதன் மூலம் தமது அரசியல் இலக்குகளைச் சாதிக்கின்றார்கள். சிங்கள மக்கள் இதனை உணரவேண்டும். சிங்கள மக்கள் விழித்தெழ வேண்டும். நாம் இரு தரப்பினரும் ஒன்று திரண்டு எம்மை ஏமாற்றும் அரசியல்வாதிகளுக்கு சரியான பாடம் படிப்பிக்க வேண்டும். சிங்கள வாக்காளர்களால் இதனைச் செய்யமுடியும். இந்த நாட்டின் மண்ணானது நாங்கள் விவசாயம் செய்வதற்கும், தொழிற்கூடங்களைக் கட்டுவதற்குமானது. சண்டை முடிவதற்கானதல்ல. இந்தக் கருத்தை தயவுசெய்து சிங்கள மக்களிடம் சொல்லுங்கள். ஆயுத வியாபாரிகள் இந்த மண்ணை தமது விளையாட்டுத் திடலாக்குவதற்கு அனுமதிக்காதீர்கள். அரசியல்வாதிகள் ஆயுத வியாபாரிகளின் கைகளில் உள்ள ஆயுதங்கள்தான். இந்த யதார்த்தத்தை நாம் அறியவேண்டும்.

*(மிகுதி அடுத்த வாரம்)*

> *சிங்கள மக்கள் சிந்திப்பதற்கான நேரம் இது. நாங்கள் ஏமாற்றப்பட்டதுபோது நீங்களும் ஏமாற்றப் படுகின்றீர்கள். எங்களுக்கும் உங்களுக்கும் பிரதான பிரச்சினை போரல்ல. நாங்களும், நீங்களும் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை நாட்டை அபிவிருத்திகொள்வதே.*

AUDIO - CD களில்
மனங்கவர்ந்த
பழைய, புதிய பாடல்கள்....

டென்மார்க்கில்

தரமான பிரதிகளில்
பழைய, புதிய
திரைப்படங்கள்
வாடகைக்கும்
விற்பனைக்கும்...

இசையமைப்பின் சங்கமம்

HAPPY ENTERPRISE

நவீன டிசைன்
தங்க நகைகள்...

VIJAYAKANTHAN
Ostervold-5
8900 Randers
Tlf: 86422094, 86438027
Mob: 30407266

சிங்கப்பூர், பாங்கொக் இந்தியா
போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட நவீனரக ஆடைகள்...

நம் நாட்டு
கடல் - மரக்கறி உணவு வகைகள்...
மளிகைப் பொருட்கள்....


முத்துமணி மணவறை
திருமணங்களுக்கு வேண்டிய
அலங்காரப் பொருட்கள்...

WESTERN UNION
20 நிமிடங்களில்
நாணயமாற்று சேவை

# வெளிவருகிறார் 'கவிஞர்' வாஜ்பாய் ஒலிநாடாத் தொகுப்பில் அவரது கவிதைகள்!


இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஒரு கவிஞர் என்பது பலருக்குத் தெரியாது. முன்னாள் பிரதமர் வி.பி. சிங்கும் ஒரு கவிஞர்தான். பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இதுவரை 51 கவிதைகள் எழுதியுள்ளதாக கூறப்படுகின்றது. அக்கவிதைகளில் எட்டு கவிதைகள் இசையமைக்கப்பட்ட பாடல்களாக வெளிவருகின்றன. இப்பாடல்களை பிரபல மராத்தி மொழி பாடகி பத்மஜா பினானி ஜொலேகர் இசையமைத்துப் பாடியுள்ளார். இந்தப் பாடல்கள் அடங்கிய ஒலிநாடாவை வாஜ்பாய் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியொன்றில் வெளியிடப்பட உள்ளது. இந்த ஒலி நாடா விற்பனையில் கிடைக்கும் உரிமைப்பணம் பிரதமர் நிவாரண நிதிக்கு அளிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 9-ம் திகதி நிகழ்ச்சியொன்றில் பிரதமரைச் சந்தித்த பாடகி பத்மஜா இவரது கவிதைகளை இராகத்துடன் பாடல்களாக்க விரும்புவதாக கூறியுள்ளார். இதற்கு வாஜ்பாய் இது முடியாத காரியம் ஏனெனில் எல்லாம் உரை நடையாகவுள்ளன என்றிருக்கி




றார். ஏன் முடியாது நான் பாடிக் காட்டுகிறேன் என்று கூறி சில வரிகளை இராகத்துடன் பாடிக் காட்டியுள்ளார்.

இதைக் கேட்டு வாஜ்பாய் ஆச்சரியப்பட்டு போய்விட்டார். பிறகுதான் தனது கவிதைகளை பாடல்களாக்க வாஜ்பாய் ஒப்புக்கொண்டார். அவசரநிலைக் காலத்திலும் சிறையில் இருந்த போதும் மிகவும் கவலையுடன் எழுதப்பட்ட இக் கவிதைகள் சோக இசையில் பாடப்பட்டுள்ளன. மராத்தி மொழி பாடகியான பத்மஜா, இந்தியில் ஒலிப் பதிவு செய்யும் முதல் இசைத் தொகுப்பு இதுவாகும்.




## பாரதியார் வேடத்தில் கமல் நடிப்பதற்கு மத்திய அரசு உதவ வேண்டும்! விருதுநகரில் உண்ணாவிரதம்!

பாரதியாரின் வாழ்க்கையை சினிமாவாக எடுக்க நடிகர் கமலஹாசனுக்கு உதவவேண்டும் என மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்து விருதுநகரைச் சேர்ந்த



இரத்தினம் என்பவர் உண்ணாவிரதத்தை தொடக்கியுள்ளார்.

இது குறித்து அவர் பத்திரிகையாளரிடம் கூறியதாவது: பாரத அரசை தனது அரசாகத் தான் நினைத்தான் பாரதி. பாரதியின் தலைமறைவு காலத்தில் புதுச்சேரியில் வாடியபோது வீட்டுக்கார உரிமையாளரைப் பார்த்து, 'ஓய் செட்டியாரே சுயராஜ்யம் வரப்போகிறது. உமது வீட்டு வாடகைக்கு பாரத அரசுக்கு செக் தருகிறேன்' என்று கூறி பாரத சுதந்திரத்திற்காக பட்டினி கிடந்து உடுத்த வேட்டியும் இல்லாமல் பட்டினத்தார் போல் துண்டு மட்டும் கட்டி வீரத்துடன் வாழ்ந்து மடிந்தவன் பாரதி. அந்த மகா தியாகி மகாகவி பாரதியின் வாழ்க்கையை இன்றைய இளைய பாரதத்தினர் கண்டு புதிய மகா பாரதத்தைக் கட்டுவதற்கு மகாகவி பாரதியாக நடிப்பதில் பெருமைப்படுகிறேன் என்று சென்ற ஆண்டு பிரகடனம் செய்திருக்கிறார் நடிகர் கமல்.

மகாகவி பாரதி திரைப்படத்திற்கு பாரத அரசின் உதவியை அவருக்கு வழங்கக் கோருகிறேன். அதற்காக தேசிய திரைப்படக் கழகத்திற்கு முன்னால் இன்று முதல் உண்ணாவிரதத்தை தொடங்குகிறேன் என அறிவித்தார்.

## வைகோவுக்கு தீரன் கோரிக்கை

ஈழத்தமிழர் பிரச்சினை தீர நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் வாஜ்பாயை வைகோ நிர்ப்பந்திக்க வேண்டும் என்று பா.ம.க. இன் தலைவர் தீரன் கேட்டுக் கொண்டுள்ளார். ஈழத் தமிழர் பிரச்சினையை மத்திய அரசு தீர்க்கவேண்டும் என்று கோரும் மனுவை அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்டுப் பிரதமரிடம் அளித்தார்கள். அதன் பிறகு சார்க் மாநாட்டுக்காக கொழும்பு சென்ற வாஜ்பாய் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை. பிரதமரான பின்னர் முதல் முறையாகத் தமிழகம் வரும் வாஜ்பாயிடம் ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களின் ஆதரவையும், தொண்டர்களின் ஈடுபாட்டையும் வை.கோ வெளிப்படுத்தவேண்டும் என்றும் தீரன் தெரிவித்துள்ளார்.

## 109 ஆயுள் கைதிகள் விடுதலை

அறிஞர் அண்ணாத்துரையின் தமிழக முதல்வர் அறிவித்த 90—வது பிறந்த நாளை முன்னிட்டு 10 ஆண்டுகள் தண்டனையை முடித்த 109 ஆயுள் கைதிகளை முதல்வர் கருணாநிதி விடுதலை செய்யும்படி உத்தரவிட்டுள்ளார்.

அண்ணாவின் பிறந்த நாள் செப்டெம்பர் 15—ம் திகதி கொண்டாடப்படுகிறது. அந்த நாளில் தமிழகத்தின் பல்வேறு சிறைகளில் நன்னடத்தையுடன் 10 ஆண்டு காலம் தண்டனையை முடித்தவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.




# ‘அணுக்கொள்கையில் எவ்வித சமரசமுமில்லை; இந்தியாவை யாரும் நிர்ப்பந்திக்க முடியாது’

## இந்திய குடியரசுத் தலைவர் அறிவிப்பு!

இந்திய குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அரச முறைப் பயணமாக ஐரோப்பாவை வந்தடைந்தார். முதலில் ஜேர்மன் நாட்டிற்கு வந்தடைந்த இந்தியக் குடியரசுத் தலைவர் அந்நாட்டின் அதிபர் ஹெல்மெட் கோல் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நட்ாத்தினார். அப்போது இந்திய குடியரசுத் தலைவர் இந்தியாவின் அணுக்கொள்கை பற்றிய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

இந்தியா நடாத்திய ‘சக்தி - 98’ என்னும் 15 கிலோ டன் அணுகுண்டு பரிசோதனை உலக அரங்கில் மிகப்பெரிய எதிர்ப்பை தோற்றுவித்திருந்தது. இப் பரிசோதனையை ஜேர்மன் நாடும் கடுமையாக கண்டித்திருந்தது. பொருளாதாரத் தடையெல்லாம் விதிக்கப்பட்டிருந்தன. இந் நிலையில் இந்தியா மீண்டும் தன் நிலையை உறுதிசெய்துள்ளது. ஜேர்மன் அதிபருடனான பேச்சுக்களின் போது இந்திய குடியரசுத் தலைவர் அணுக் கொள்கையில் இந்தியா எவ்வித சமரசத்தையும் மேற்கொள்ளாது என்றும், ஒட்டுமொத்த அணு ஆயுத சோதனை தடைச் சட்டத்தில் கையெழுத்துப்போடு என்று எந்த நாடும் இந்தியாவை நெருக்கமுடியாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். ஜேர்மன் பயணத்தை முடித்துக் கொண்டு இந்திய குடியரசுத் தலைவர் போர்த்துக்கல் நாட்டிற்கு பயணமாகின்றார்.

இதேவேளையில் இந்திய அணுசக்தி கமிஷன் தலைவர் சிதம்பரம் அவர்கள், அணுகுண்டு வெடிப்பிற்கு பிறகு உலக நாடுகள் மத்தியில் இந்தியாவுக்கு தனி மரியாதை கிடைத்துள்ளது என்றும் இந்தியாவின் வலிமையை வெளிநாடுகள் புரிந்துள்ளன என்றும் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் அணுகுண்டு வெடித்ததை காரணம்காட்டி அமெரிக்கா பொருளாதாரத்தடை விதித்துள்ளது. ஒரு வகையில் நன்மை அளிப்பதாகவே உள்ளது. நாட்டின் சுயதேவைகளை நாமேபூர்த்தி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவில் அமைக்கப்பட்ட அணு உலைகள் மூலம் 10 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் இந்தியாவில் 300 மெகாவாட் மட்டுமே உள்ளது. அறிவியல் தொழில் நுட்ப திறமைகளை பரிமாறிக்கொள்வதில் எல்லா நாடுகளும் சமமாக நடத்தப்படவேண்டும். ஆனால் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளை கேவலமாக நடத்துகின்றன. இது விரும்பத்தக்கதல்ல என்றார்.

# தமிழகத்தில் ரூ.95 கோடியில் இரு கப்பற்துறைகள் கட்ட அனுமதி

தமிழகத்தில் எண்ணூர் அருகேயுள்ள காட்டுப்பள்ளியிலும் நாகப்பட்டினம் தறைமுகத்திலும் ரூ 95 கோடியில் இரு கப்பல் துறைகள் கட்ட தமிழ்நாடு கடல் வாணிபக் கழகம் அனுமதி அளித்துள்ளது. நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் தா. கிருட்டிணன் தலைமையில் சென்னையில் புதன்கிழமை நடந்த கழகத்தின் 9-வது கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து வரும் பெரிய கப்பல்களை நிறுத்தி, அதிக அளவில் எண்ணெய் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்யும் வகையில் திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பள்ளியில் ரூ.40 கோடியில் கப்பல் துறை கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எம். ஏ.சிதம்பரம் குழுமம், தமிழ்நாடு தொழிற்சாலை வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்து நெதர்லாந்து நாட்டின் வான் ஓம்மெரன் மாக் டாங்க் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனம், இந்த கப்பல் தளத்தைக் கட்டவுள்ளது. எண்ணூரில் அமைக்கப்படவுள்ள பெரிய பெட்ரோகெமிக்கல் தொழில் பூங்காவின் ஒரு பகுதியாக இக் கப்பல்துறை கட்டப்படவுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்திலும் ரூபா 55 கோடியில் கப்பல்துறை கட்டப்படவுள்ளது. சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திற்குச் சொந்தமாக பனங்குடியில் உள்ள ஆலைக்கு குரூட் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு இக் கப்பல்துறை கட்டப்படவுள்ளது. இராமேஸ்வரம் - கோதண்டராமன் கோயிலுக்கு இடையே பயணிகள் படகுப் போக்குவரத்து தொடங்கவும் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு தனியார்களை ஈர்க்க பெரிய அளவில் விளம்பரம் செய்வது என கூட்டத்தில் முடிவானது. கடலூர் அருகே திருச்சோபுரத்தில் ரூ.330 கோடியில் அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன் சிறிய துறைமுகம் அமைக்க பெண்ணார் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக அந் நிறுவனம் சமர்ப்பித்த திட்டத்தின் மீதான தொழில் நுட்ப மற்றும் நிதி துணைக் கம்பெனியின் பரிந்துரைகளை கடல் வாணிபக் கழகம் ஏற்று ஒப்புதல் அளித்தது.

# தமிழகத்தில் அண்ணா பிறந்தநாள் விழாக்கள்!

## கட்சிகளிடையே போட்டாபோட்டி! ம.தி.மு.க. முன்னணியில்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவியவர் சி.என். அண்ணாத்துரை அவர்கள். அவர் தமிழ்மக்களால் அறிஞர் அண்ணா என அழைக்கப்பட்டார். அறிஞர் அண்ணா பெரியார் ஈ.வெ.ரா அவர்களின் திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து தி.மு.க.வை தோற்றுவித்தார். தி.மு.க 1967-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று தமிழ்நாட்டின் மாநில ஆட்சியை கைப்பற்றியபோது அறிஞர் அண்ணா முதலமைச்சராக பதவியேற்றார். ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவர் பதவியிலிருந்த போதே மரணமானார். பின்னர் தி.மு.க.வின் தலைமையை கலைஞர் கருணாநிதி கைப்பற்றினார். கட்சியிலேற்பட்ட பூசல்களினால் கட்சி பல துண்டுகளாய் உடைந்தது. அவைதான் அதி.மு.க, ம.தி.மு.க. என்னும் கட்சிகளாகும். அண்ணாவின் இந்த பிறந்த நாளை கட்சிகள் கொண்டாடுவதன் மூலம் தம் பலங்களை பரிசோதித்து பார்ப்பதுண்டு.

இம்முறை அண்ணா பிறந்த நாளை வைகோவின் ம.தி.மு.க. சென்னையில் கொண்டாட இடம்பிடித்து விட்டது. அந்த விழாவில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்வதால் தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. இதன் மூலம் அண்ணா பிறந்தநாளைக் கொண்டாடுவ



தில் ம.தி.மு.க. முன்னணி வகிக்கின்றது. ம.தி.மு.க.வின் அண்ணா பிறந்தநாள் கொண்டாட்ட பேரணியில் 20 இலட்சம் பேர் கலந்து கொள்வார்கள் என்றும், 20 ஆயிரம் வாகனங்கள் வரும் என்றும் ம.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதி.மு.க. தன் கொண்டாட்டங்களை திருச்சியில் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. இது முன்னரே திட்டமிடப்படாத ஒரு நிகழ்வாகும். இதற்கு பல்வேறு அரசியல் காரணங்கள் உண்டு. ஏறத்தாழ ம.தி.மு.க.வுக்கு போட்டியாகவே இவ் விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தி.மு.க. தனது கொண்டாட்டங்களை நெல்லையில் நடாத்துகின்றது.

# ☺ வாய் மொழிகளும் ☹ கொசுறுச் செய்திகளும்

☺ ‘நமக்கு ம.தி.மு.க. எப்படி போட்டியாக முடியும்? நமக்கு போட்டி தமிழ்நாட்டில் தி.மு.க.தான். தி.மு.க. வைத்தான் நாம் போட்டியாக கருதுகின்றோம். ம.தி.மு.க. என்பது ஐந்து வயதுக் குழந்தை’

*– அ.தி.மு.க. தலைவர் செல்வி ஜெயலலிதா கூறியதாக பத்திரிகைகளில்*

❀ ❀ ❀

☺ ‘எங்களுக்கு ஜெயலலிதா அம்மா ஒரு போட்டியே அல்ல. சோனியா அம்மாதான் எங்களுக்குப் போட்டி. காங்கிரசைத்தான் எங்களுடைய சரியான எதிர்க்கட்சியாக கருதுகின்றோம்’

*– பா.ஜ. தலைவர் வெங்கையா நாயுடு கூறியதாக பத்திரிகைகளில்*

❀ ❀ ❀

☺ ‘சிலருக்கு நிலை மாறினால் நினைப்பும் மாறுகின்றது. பிறரை அரசியல் பச்சோந்திகள் என்பார்கள். அதையே தாங்கள் செய்யும்போது ராஜதந்திரம் என்று வர்ணித்துக்கொள்வார்கள்’

*– ம.தி.மு.க. தலைவர் வைகோ தமிழன் எக்ஸ்பிரஸ் பேட்டியில்*

❀ ❀ ❀

☺ ‘வாஜ்பாய் ஜெயலலிதாவால் அவதிப்பட்டு வருகிறார். வாஜ்பாய் எதற்காக கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. இப்படி எல்லாம் பிரச்சினை பெண்ணால் வரும் என்பதை தெரிந்து, மாட்டிக் கொள்ளக்கூடாது என கல்யாணம் பண்ணாமல் இருக்கலாம். அப்படி இருந்தும் இந்தப் பெண்ணிடம் மாட்டிக்கொண்டார்.’

*– தமிழக அமைச்சர் துரைமுருகன்*

❀ ❀ ❀

☺ ‘எப்படிக் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் சோனியா காந்தி பிரதமராக வர முடியாது. ஆனால் கட்சிக்கு தற்போது தலைவராகி உள்ளார் என்பது இயற்கை. எப்படியெனில் கடந்த 1885-ம் ஆண்டு ஒரு அந்நியரால் காங்கிரஸ் தொடங்கப்பட்டது. காங்கிரசின் கடைசிப் பிரதமர் ராவ் என்பது முடிவு செய்யப்பட்ட நிலையில் அதனுடைய கட்சி முடிவும் ஒரு அந்நியரால் முடியும் என்பது இயற்கையானது. ஒரு அந்நியரால் தொடங்கப்பட்ட காங்கிரஸ் ஒரு அந்நியன் தலைமையிலேயே மறைந்துவிடும்.’

*– பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவரான இல.கணேசன்*

❀ ❀ ❀

☺ ‘ஆட்சி அமைப்பில் நீதி மன்றங்களில் கோயில்களில் இவ்வளவு ஏன்? இசையில் கூட தமிழுக்கு இடமில்லை. இதை எதிர்த்துக் கேட்டாலோ பேசினாலோ தீவிரவாத சட்டங்கள் பாய்கின்றன. இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் தீர்வு தென்திசையில் ஏற்படுகின்ற விடியலாகத்தான் இருக்கும்.’

*– தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாட்டில் கவிஞர் இன்குலாப் பேசியதாக நக்கீரன் இதழில்*


❀ ❀ ❀



நன்றி: இந்தியா டுடே

# நிலத்தின் கீழ் பழமையான சுரங்கம்! மதுரையில் கண்டுபிடிப்பு

மதுரையில் குடிநீர் குழாய் அமைக்க நிலத்தைத் தோண்டிய போது சுரங்கம் கண்டுபிடிக்கப் பட்டது. மதுரையில் நிலத்தின் கீழ் குழாய்கள் பதிக்கும் வேலை நடைபெறுகின்றது. கூடலழகர் பெருமாள் கோயிலருகே இந்தப் பணி நடந்துகொண்டிருந்தது. குழிகளைத் தொழிலாளர் தோண்டும் பொழுது திடீரென குழியில் பள்ளம் ஏற்பட்டது. பள்ளம் விழுந்த இடத்தில் தோண்டிப்பார்த்தபோது செங்கல்லால் கட்டப்பட்ட சுவர் தெரிந்தது. அதையும் தோண்டிப் பார்த்த போது சுரங்கப்பாதை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சுரங்கப் பாதையில் இருந்து கடும் வெப்பக் காற்று அடித்தது. பிரபு என்பவர் சுரங்கப்பாதையில் இறங்கி சிறிது தூரம் நடந்து பார்த்தார். சிறிது தூரத்தில் சுரங்கப் பாதை இரண்டாகப் பிரிந்து சென்றது. சுரங்கப் பாதைக்குள் அழகாக வடிவமைக்கப்பட்ட விளக்கு ஏந்திய பாவைச்சிலைகள் காணப் பட்டன. தமிழ் எழுத்துகள் போன்ற எழுத்துகளும் காணப் படுகின்றன. சுரங்கப்பாதைகள் சுற்றிலும் கருங்கற்கள் செதுக்கப் பட்டு அமைக்கப்பட்டுள்ளன. ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.




## கியூபா

# 'மொகமட் அலி' கியுபா விஜயம் காஸ்ட்ரோவையும் சந்தித்தார்

உலகின் முன்னாள் குத்துச் சண்டை சம்பியனான மொகமட் அலி கடந்த வாரம் கியுபாவுக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். அதன்போது கியுபத் தலைவர் திருபிடல் காஸ்ட்ரோவையும் வெள்ளியன்று சந்தித்து பேச்சுக்களை நடாத்தினார்.

அமெரிக்க குத்துச்சண்டை வீரர் மொகமட் அலி, மற்றும் திரைப்பட நடிகர் அட்வர்ட் அஸ்னர் போன்றோரைக்கொண்ட உதவி நிறுவன அமைப்பின் குழுவொன்று கடந்த சனியன்று கியுபாவுக்கு விஜயமொன்றினை மேற்கொண்டது. இவ் விஜயத்தின்போது 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்து வகைகள் இவர்களால் ஹவானாவின் மருத்துவ நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதன் பின் இக் குழு கியுபத் தலைவர் பிடல் காஸ்ட்ரோவையும் சந்தித்தது இச் சந்திப்பின்போது பிடல் காஸ்-ட்ரோ கியுபாவுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்திவரும் வேளை, இவ்விதமான மனிதாபிமான உதவிகள் அங்கிருந்து வருவது ஒரு மாற்றத்தின் அறிகுறி என்றார்.

இவ் வருடம் ஜனவரி மாதம் பாப்பரசர் கியுபாவுக்கு விஜயம் செய்திருந்தபோது 'அமெரிக்க நிறுவனங்கள் கியுபாவுக்கு மருந்து வகைகளை விற்பனை செய்யலாம் என்று கிளின்டன் நிர்வாகம் அறிவித்தது. அமெரிக்கா, கியுபாவுடன் அமெரிக்க நிறுவனங்கள் வர்த்தக தொடர்புகளை வைத்திருக்க தடை விதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*1991*—ம் ஆண்டு சோவியத் யூனியன் சிதைவடைந்ததைத் தொடர்ந்து கியுபா கல்வித்துறை, மருத்துவத்துறை உட்பட்ட பல பொதுத்திட்டங்களில் பற்றாக் குறையை அடைந்தது. இதே வேளை உலகின் பல உதவி நிறுவனங்கள் கியுபாவின் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்யும் வகையிலான உதவிகளை புரிந்து வருகின்றன. இவ் வகையில் தற்போது `Disarm Education Fund' எனும் அமெரிக்க உதவி நிறுவனம் மருத்துவ உதவிகளை புரிந்துள்ளது. இதன் நிர்வாகி பிடல் காஸ்ட்ரோவிடம், தனது நிறுவனம் அமெரிக்காவின் வேறு உதவி நிறுவனங்களுடன் இணைந்து கியுபாவுக்கான உதவிகளைத் தொடர இருப்பதாக கூறினார்.

## கம்போடியா

# ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன

கம்போடியத் தலைநகர் ப்னொம்பென்னில் கடந்த சில வாரங்களாக தொடரும் ஆர்ப்பாட்டங்கள் சில தினங்களாக உச்ச நிலையை அடைந்துள்ளன. அங்கு நடைபெற்ற தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாகவும் ஹுன்சென் தலைமையிலான அரசு வெற்றிபெற்றது செல்லாது என்றும் தேர்தல்களை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரியும் பல்லாயிரம் மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை கடந்த சனியன்று சுமார் 10,000 வரையிலான அரச ஆதரவாளர்கள் ஏராளமான வாகனங்களில் தலைநகரில் இறக்கப்பட்டனர். அவர்களின் கைகளில் மூங்கில் தடிகள், இரும்புக் கம்பிகள், மற்றும் சிலர் துப்பாக்கிகளையும் கொண்டிருந்தனர். பொலிஸ் பாதுகாப்புடன் இவர்கள் ப்னொம்பென் வீதிகளூடாக அரச ஆதரவு ஊர்வலம் சென்றார்கள். வாகனங்களில் ஒலிபெருக்கிகளில் எதிர்க்கட்சித் தலைவர் சாம்ராயின்சியையும் இளவரசர் ரனட்ரிச்சையும் கைதுசெய்ய வேண்டும் என்றும் கோஷம் எழுப்பினர். 1993-ம் ஆண்டு இளவரசர் ரனட்ரிச் தேர்தலில் வெற்றிபெற்றிருந்த போதும் கடந்த வருடம் கூட்டரசில் இருந்து அவர் தூக்கியெறியப்பட்டார். ரனட்ரிச் பத்திரிகையாளரிடம், 'நான் எனது மக்களுக்கு துரோகியாக ஒருபோதும் இருக்கமாட்டேன். அமைதியையும் ஜனநாயகத்தையும் தேடிநிற்கும் எமது மக்களின் விருப்புக்களுக்கு நான் பாதுகாவலனாக இருந்தேன். நான் கைது செய்யப்பட்டால் இங்கு ஓடும் இரத்த ஆறுக்கு முடிவே இருக்காது' என்றார்.




ப்னொம் பென்னில் அரச ஆதரவு ஆர்ப்பாட்டம் முடிவடைந்தபின் சுமார் 5000 வரையிலான அரசு எதிர்ப்பாளர்கள் அமெரிக்க, அவுஸ்திரேலிய பிரித்தானிய, ஐ.நா.சபை போன்றவற்றின் கொடிகளுடன் நகரின் அரசு மாளிகைநோக்கி ஊர்வலமாக சென்றார்கள். அவ் ஊர்வலத்தில் பொலிசாரின் அடக்குமுறை குறித்து எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதற்கிடையே நகரின் பொலிஸ் அத்தியட்சகர் வானொலியில், இங்கு தொடரும் வன்முறைகள் அரச எதிர்ப்பு நடவடிக்கையாக இருக்கவேண்டுமே தவிர இங்குள்ள சாதாரண பிரஜைகளையோ அல்லது வெளிநாட்டினரையோ பாதிக்கக் கூடாது. ஆனால் இங்கு நடப்பவையோ அப்படியல்ல எனக் கவலைதெரிவித்தார்.




விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

PYRAMID








பிரமிட்டின் ஒறிஜினல் CDக்களும், ஓடியோக்களும் தற்போது கிடைக்கின்றன.

## பாலஸ்தீனம்

# பாலஸ்தீன - இஸ்ரேல் ஒஸ்லோ ஒப்பந்தம் ஐந்தாண்டு நிறைவு

பாலஸ்தீனியர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையே பல தசாப்தங்களாக தொடரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக ஒஸ்லோவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் ஐந்தாண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் இவ் இரு நாடுகளுக்கிடையேயான பிரச்சினைகள் தான் இன்னமும் முடிவுக்குவரவில்லை. இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ராபின் 95-ம் ஆண்டு நவம்பர் மாதம் யூத தீவிரவாத இளைஞனொருவனால் சுடப்பட்டு மரணமானார். உடன்பாட்டுக்குக் காரணமாய் இருந்த அமெரிக்க அதிபர் பாலியல் குற்றச்சாட்டுக்களால் செயலிழந்து போயுள்ளார். மறுபுறம் பாலஸ்தீன அதிபர் தனது தற்காலிக இராச்சியத்தில் எதையுமே செயற்படுத்த முடியாதவராய் தொடர்கிறார்.



ஒஸ்லோவில் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட ஐந்தாவது வருடத்தை ஞாபகப்படுத்தும் மாபெரும் பேரணியொன்று கடந்த சனிக்கிழமை டெல் அவிவ் நகரில் இடம்பெற்றது. சுமார் 40,000 பேர் வரை இப் பேரணியில் கலந்துகொண்டதாக சொல்லப்படுகிறது.

"PEACE NOW" எனும் அமைப்பு ஏற்பாடு செய்த இவ் ஊர்வலத்தில், பிரதமர் நெத்தன்யாகுவிற்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன. பிரதமர் நெத்தன்யாகு இராஜினாமாச் செய்யவேண்டும் என ஊர்வலத்தில் குரலெழுப்பப்பட்டது. அவரது கொள்கைகள் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு இஸ்ரேலை இட்டுச் செல்கிறது என ஊர்வலத்தினர் கூறினார்கள். முன்னாள் பிரதமர் யிட்சாக் ராபின் கொலையுண்ட ராபின் சதுக்கத்தில் ஊர்வலத்தினர் கூடியபோது அவரது மனைவி லேயா அதில் கலந்து கொண்டார். அமெரிக்க விசேட தூதுவர் டென்னிஸ் ரொஸ் தேக்கமடைந்துபோயுள்ள இஸ்ரேலிய — பலஸ்தீன பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கு முகமாக இரு தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்களை நடத்தி வரும் வேளையில் இப் பேரணி இடம்பெற்றுள்ளது.

இப் பேரணியின் பின்னர் பிரதமர் நெத்தன்யாகு பத்திரிகையாளரிடம், திரு.ராபின் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் எமக்கு எந்த நன்மையுமே கிடைக்கவில்லை. நாட்டிற்கு உண்மையான அமைதியை அது கொண்டு வரவில்லை. ஒப்பந்தம் மேற்கொண்டநாள் முதல் ஒரு நாள் கூட இஸ்ரேலில் அமைதி நிலவவில்லை எனக் கூறினார்.

## ரஷ்யா

# ரஷ்ய புதிய பிரதமரின் வாக்குறுதிகளால் நாட்டில் மீண்டும் நம்பிக்கை

ரஷ்யாவின் புதிய பிரதமராக பதவி ஏற்றுள்ள யேவ்கேனி பிரிமகோவ் தனது முதல் நடவடிக்கை, நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றுவதே என்றும் தனது நாட்டிற்கு கடன் கொடுத்துள்ள மேற்கு நாடுகள் எந்த விதத்திலும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறியுள்ளார். பொருளாதார ஸ்திரப்பாட்டையும் நிதித்துறை வளர்ச்சியுமே தனது முதல் கட்ட நடவடிக்கையாக அமையும் என அவர் கூறியுள்ளதானது ரஷ்யாவிற்குக் கடன் கொடுத்துள்ள மேற்கு நாடுகளை சிறிது ஆசுவாசப்படுத்தியுள்ளது. ரஷ்ய செய்தியாளர்களின் உயர் மட்டக் குழுவை சந்தித்த பிரிமகோவ், ரஷ்யாவுக்கு இன்று ஏற்பட்ட நிலை மீண்டும் ஒருபோதும் ஏற்படாது. எமது நாடு இன்று அடைந்த நிலை ஓர் இக்கட்டான சூழ்நிலையே. இதனை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டோம் என அவர் மேலும் கூறினார்.

கடந்த மாதம் பதவியிலிருந்த பிரதமர் கிரியன்கோவ் ஜனாதிபதி யெல்சினால் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டிருந்த அரசியல் பொருளாதாரச் சிக்கல்கள் புதிய பிரதமராக பிரிமகோவ் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் ஸ்திரம் அடையத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே ஜனாதிபதி ஜெல்சின் பிரதம மந்திரிப் பதவிக்கு விக்டர் செர்னமைடினை நியமித்திருந்தார். ஆனால் அவரது நியமனத்தை ரஷ்யப் பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. நிறைந்த அனுபவத்தைக் கொண்டிருந்த செர்னமைடின் ஏற்கனவே ஐந்து ஆண்டுகள் ரஷ்யாவின் பிரதமர் பதவியை வகித்துள்ளார். ஆனால் மீண்டும் புதிதாக அவர் நியமிக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியினர் அவரது நியமனத்தை நிராகரித்தனர். இதற்குக் காரணம் அவர் ஏற்கனவே பதவியில் இருந்தபோது சரியான முறையில் ரஷ்யாவை நிர்வகிக்கவில்லை எனச் சொல்லப்பட்டது. இந்நிலையில் முன்னாள்




சோவியத் உளவுத்துறையின் முக்கியஸ்தரும் தேர்ந்த இராஜதந்திரியும் வெளிநாட்டமைச்சருமான பிரிமகோவ் யெல்சினால் பிரதமராக நியமிக்கப்பட்டார். இவரது நியமனத்தை உடனடியாக ரஷ்யப் பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டது. தற்போது தனது அமைச்சரவையை நியமிக்கும் நடவடிக்கையை பிரிமகோவ் மேற்கொண்டுள்ளார். பிரிமகோவின் அமைச்சரவையில் கம்யூனிஸ்ட் கட்சியினர் உட்பட மற்றைய கட்சியின் அங்கத்தவர்களும் இடம் பெறுவார்கள் என நம்பப்படுகிறது.

பிரிமகோவின் நியமனத்தை அடுத்து ரஷ்ய மக்களிடையே மீண்டும் நம்பிக்கை தோன்றியுள்ளது. பல மாதங்களாக சம்பளங்கள் வழங்கப்படாதிருந்த பல இலட்சம் தொழிலாளர்களுக்கு சம்பளங்களை உடனடியாக வழங்கும் நடவடிக்கையினையும் பிரிமகோவ் மேற்கொண்டுள்ள அதேவேளை வரிஏய்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான நடைமுறைகளை அவர் அமுல்படுத்துவார் என்றும், சோவியத் முறையிலான உடனடியான சில தீர்வுத் திட்டங்கள் அவரால் அறிவிக்கப்படும் என்றும் சொல்லப்படுகின்றது.

## ஆப்கானிஸ்தான்

# பமியாம் நகர் தலிபான்களால் கைப்பற்றப்பட்டது

ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளர்களான தலிபான்கள் மத்திய ஆப்கானிஸ்தானில் எதிரணி ஆட்சியாளர்களான ரபானி அவர்களின் கூட்டணியின் கட்டுப்பாட்டில் இருந்த பமியாம் நகரையும் கைப்பற்றியுள்ளார்கள். கடந்த சில வாரங்களாக எதிரணியின் கட்டுப்பாட்டில் இருந்த மசார் ஈ செரிப் நகரம் உட்பட பல நகரங்கள் மீது தொடர் தாக்குதல்களை மேற்கொண்டுவந்தனர். இதன்போது இரண்டு வாரங்களிற்கு முன் மசார் ஈ செரிப், தலிபன்களால் கைப்பற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரபானி உட்பட எதிரணித் தலைவர்கள் அண்டை நாடுகளுக்கு தப்பி தலைமறைவாகினர். இந்நிலையில் இறுதியாக சியாட் இன முஸ்லீம்களை பெரும்பான்மையாகக் கொண்ட பமியாம் நகர் தலிபான்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. கடந்த ஞாயிறன்று இந்நகரைக் கைப்பற்றிய தலிபான்கள் நகர மக்களை சுதந்திரமாக வெளியேறுமாறு கோரிக்கை விடுத்தனர். இந்நகரை தலிபான்கள் கைப்பற்றினால் இன ரீதியான மோதல்கள் ஏற்படும் என்றும், ஈரானிய சார்பு மதப்பிரிவினை கொண்ட சியாட் முஸ்லீம்கள் தலிபான்களின் பழிவாங்கல்களுக்கு உள்ளாவார்கள் என்றும் கூறப்பட்டது. ஏற்கனவே மசார் ஈ செரிப் நகரை தலிபான்கள் கைப்பற்றிய போது அங்கிருந்த ஆயிரக்கணக்கான சியாட் மற்றும் ஹசாரா, தஜிக் இன மக்களும் கொலை செய்யப்பட்டார்கள் என்று ஈரானும் மனித உரிமை அமைப்புக்களும் குற்றம் சாட்டினர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் தலிபான்களின் பிரதான தலைவர் முல்லா முகமட் ஓமார் கடந்த ஞாயிறன்று ஆப்கான் இஸ்லாமிய செய்தி ஸ்தாபனத்திற்கு விடுத்த அறிக்கையில் பமியாம் நகரின் சகல பாதைகளும் திறக்கப்பட்டே உள்ளன. வெளியேறுபவர்கள் வெளியேறலாம். அதேவேளை உதவி நிறுவனங்கள் தமது உதவிகளை அங்கு வழங்கலாம். ஏற்கனவே தலிபான்கள் பெண்களையும், சிறுவர்களையும் கொல்வதாக ஒரு பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. இதில் எந்தவித உண்மையும் இல்லை. தலிபான்கள் அப்படியானவர்களும் அல்ல என அவர் கூறியுள்ளார்.



இதே சமயம் ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதியில் சுமார் இரண்டு இலட்சம் துருப்புக்களை ஈரான் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நகர்த்தியுள்ளது. ஈரானின் 9 ராஜதந்திரிகள் மசார் ஈ செரிப் நகர் கைப்பற்றப்பட்டபோது தலிபான் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இரு நாடுகளிற்குமிடையே இருந்துவந்த கொந்தளிப்பு நிலை மேலும் அதிகமாகியுள்ளது. ஆனாலும் தமது படையினர் எக் காரணம் கொண்டும் ஆப்கானிஸ்தானின் எல்லையை ஊடுருவி தாக்குதல்கள் நடாத்தமாட்டார்கள் என ஈரானிய தளபதி கூறியுள்ளார்.

## அமெரிக்கா

# கிளின்டனுக்கு எதிராக மேலும் குற்றச்சாட்டுக்கள்


அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் பாலியல் ரீதியான குற்றச்சாட்டிற்கு உள்ளாக அதன் விசாரணை முடிவுகள் வெளியிடப்பட்டு பெரும் தலைகுனிவையும் சிக்கல்களையும் சந்தித்துள்ளது தெரிந்ததே. தற்போது மேலும் பல பாலியல் குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன. இது பற்றிய வீடியோ காட்சிகள் அமெரிக்க செய்தி நிறுவனங்கள் சிலவற்றால் வெளியிடப்பட்டுள்ளன.

அதேவேளை ஏற்கனவே கென்ஸ்ராறினால் வெளியிடப்பட்ட விசாரணை முடிவுகள் சர்வதேச ரீதியில் பெரும் பரபரப்பாக பேசப்படுகின்றன. இந்நிலையில் கிளின்டன் மீண்டும் நாட்டு மக்களிடையேயும் மொனிக்கா லெவின்ஸ்கியிடமும் மன்னிப்பு கோரியுள்ளார். அத்துடன் அவரது வழக்கறிஞர்களும் ஆதரவாளர்களும் இக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதில் மிகவும் வேகமாக தொழிற்படுகின்றனர்.

தொலைக்காட்சியிலும், வானொலியிலும் அவர்களது உரைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மக்கள் ஆதரவை இதன் மூலம் திரட்டுவதே தங்களது நோக்கம் என இவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை அங்கு மேற்கொள்ளப்பட்ட கணிப்பொன்றின்படி 59 முதல் 67 வீதமான அமெரிக்க மக்கள் ஜனாதிபதியின் பின்னாலேயே நிற்கின்றனர். அவர்கள் ஜனாதிபதியின் தனிப்பட்ட நடவடிக்கையே இது என்றும் நாட்டு நலன்களில் அவர் தவறிழைக்கவில்லை என்றும் கூறுகின்றனர்.


# ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள்
தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

Pub



SFR

*Promotion*

*இரண்டு மாத*

*Abonnement*

*Gratuits**

** Hors Packs SFR*

**O L A**

Coffret OLA

**Philips - 90^Frs^**

**Alcatel - 290^Frs^**

**Nokia - 690^Frs^**

இலவசம் Frais de dossier

**A partir du 21 août 1998**

**PRIX DES PACKS SFR**



PROMOTION 290F

PROMOTION 590F

690F

1490F

புதிய பழைய தொலைபேசிகள்

வாங்க — விற்க — திருத்த

**ஆர்த்தி ஸ்ருடியோ**

**15 RUE CAIL, 75010 PARIS.**

**M°: GARE DU NORD - LA CHAPELLE**

**Tel: 01 40 34 20 90**




Pub

# S K M T E L E C O M

மேலதிக தொடர்புகளுக்கு முகுந்தன் (Raja) 01 42 05 19 09

**விநியோகஸ்தர்கள் தேவை**





மிகவிரைவில்

லண்டன்,

சுவிஸ், ஜேர்மனி,

நோர்வே, இத்தாலி

நாடுகளில்




# S K M N E T T E L E C O M

**SKM TELECOM**
**24 RUE DU DEPARTEMENT**
**75018 PARIS,**
**Tél: 01 42 05 19 09**
**Fax: 01 42 05 21 42**
**/ M°: La chapelle**
பாரீஸ் முத்துமாரியம்மன் கோவிலுக்கு அருகாமையில்

| | | |
|---|---|---|
| இலங்கை | 62 | Mn |
| இந்தியா | 50 | Mn |
| பாக்கிஸ்தான் | 50 | Mn |

**SKM TELECOM**
**VEDERSGADE 13**
**7000 FREDERICIA, DANEMARK**
**Contact: Seelan**
**Tél/ Fax: 00 45 64 42 29 63**
**Mobil: 00 45 21 60 83 35**



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# சந்திரிகாவுக்கு வீழ்ந்த பேரிடி

யாழ் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் யாழ் நகரசபைத் தலைவர் பொன். சிவபாலன் கொல்லப்பட்டதற்கு அனுதாபம் தெரிவித்து சிறீலங்கா ஜனாபதி சந்திரிகா விடுத்துள்ள அறிக்கையானது பெரும் வேடிக்கையானது. அவர் தனது அறிக்கையில் சிவபாலன் குண்டு வெடிப்பில் இறந்ததை ஒட்டு மொத்த தமிழ் மக்கள் மேல் விழுந்த பேரிடி எனக் கூறியுள்ளார். ஆனால், சந்திரிகா கூறும் தமிழ் மக்கள் என்பவர்கள் யாழ் குடாவை மட்டும் சேர்ந்தவர்களா? அப்படியானால் யாழ் குடாநாட்டிற்கு வெளியே வன்னி மண்ணில், தென்தமிழீழத்தில் வாழ்பவர்கள் தமிழர்கள் இல்லையா? சரி, சந்திரிகாவின் கூற்றுப்படி யாழ் மக்களையே எடுத்துக் கொண்டால் குறிப்பிட்ட ஒரு சிறு தொகையினரின் வாக்குக்களைப் பெற்று வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியின் மேயர் பதவிக்கு நியமன ரீதியாக அமர்த்தப்பட்ட சிவபாலன் என்ன விதமான நன்மைகளைப் புரிந்துள்ளார்? அவரது பதவிக் காலத்தில் யாழ் குடாவில் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தால் அழிக்கப்படவில்லையா? செம்மணியில் பாரிய புதைகுழி இருப்பதாக கூறப்பட்டு அதுபற்றிய செய்திகளும், அறிக்கைகளும் சிறீலங்காவின் செய்திகளில் அடிபட்ட போது யாழ் நகர மேயரான சிவபாலன் அது பற்றி என்ன நடவடிக்கையை மேற்கொண்டார்? யாழ் குடாவில் அவர் புரிந்ததெல்லாம் சிறீலங்கா அரசின் குடாநாட்டு பேச்சாளர் என்ற பணியைத்தான். சிறீலங்கா அரசின் விருந்தினரான இந்தச் சிவபாலன்தான் வெளிநாட்டு பிரமுகர்கள் யாழ் வந்தபோது அவர்களை வரவேற்று உபசரித்து சிறீலங்கா ஜனாதிபதியினதும் அவரது ஆட்சியினதும் புகழ் பாடியவர். அப்படியானால் சந்திரிகாவிற்கே சிவபாலனின் இழப்பு பேரிடியே என்பதில் இரு கருத்துக்கள் இல்லை.

யாழ் குடாவிற்கு வெளியே பல இலட்சம் தமிழர்கள் உணவின்றி, உறைவிடமின்றி துன்பப்படுகின்றனர். சிறீலங்கா ஜனாதிபதி நிவாரண வெட்டு என்கின்ற வகையில் அவர்களை பட்டினியின் விளிம்பிற்கே கொண்டுபோய் உள்ளார். வன்னி மண்ணில் உணவுக்காக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுகிறது. யாழ் தமிழ் மேயர் இதற்காக குரல் எழுப்பவே இல்லை. ஏன் அவர் அந்த தமிழர்களுக்காக குரலெழுப்பவில்லை? எஜமான விசுவாசமா காரணமா?

தமிழர்களைப் பொறுத்தவரையில் இதனை சிறீலங்கா அரசு தனது யாழ் குடா இராணுவ இருப்பை மறைத்து அங்கு ஏற்படுத்திய பொம்மை ஆட்சியின் ஒரு குறியீடு அழிக்கப்பட்டதாகவே எண்ணுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரை சிவபாலன் என்பவர் சிறீலங்கா அரசின் தமிழர்களுக்கு எதிரான போரின் ஒரு கருவி மாத்திரமே. அவரது இழப்பு சந்திரிகா கூறுவது போல தமிழர்களுக்கு விழுந்த பேரிடியல்ல. தென்னிலங்கையில் தனது குரலை வடக்கில் ஒப்புவிக்கும் ஒரு பொம்மையின் இழப்பு நிச்சயமாக சந்திரிகாவுக்கு விழுந்த பேரிடி தான்!

# தமிழ்ச்செல்வன் ஏற்படுத்திய பீதி

'மக்கள் முன்னணி அரசை (சந்திரிகா அரசை) கவிழ்ப்பதற்காக விடுதலைப்புலிகளும் ஐ.தே.க.வும் ஒரு உடன்பாட்டிற்கு வந்துள்ளமை ஆதாரங்களுடன் வெளிச்சத்திற்கு வந்துள்ளது'

*- சந்திரிகா விஜயகுமாரதுங்க*
(The Hindu *09.09.98*)

என்னை அவர்கள் (அரசு) சுட்டுக் கொன்றுவிட்டு பழியை புலிகள் மேல் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

*- டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன*
(The Hindu *09.09.98*)

விடுதலைப் புலிகளின் அரசியல்பீட பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் பேட்டி சிறீலங்கா அரசியல்வாதிகளை அச்சத்திற்கும் குழப்பத்திற்கும் ஆளாக்கிவிட்டது. புலிகளையும் தமிழ் மக்களையும் பொது எதிரிகளாக - பயங்கரவாதிகளாக - சமாதான விரோதிகளாக குற்றம்சாட்டுவதே தமது 'பிழைப்புக்கு' வழி என்பதை உணர்ந்திருந்த சிங்கள அரசியல்வாதிகள், தமிழ்ச்செல்வனின் பகிரங்கமான தாக்குதல்களால் நிலைதடுமாறியுள்ளதை சந்திரிகாவினதும் ஐ.தே.க. பிரமுகர்களினதும் தலைகீழான அறிக்கைகள் நிரூபிக்கின்றன.

தமிழ்ச்செல்வன் சிறீலங்காவினது போர்த் திட்டத்தை பிறிதொரு கோணம் ஊடாக தாக்கியுள்ளார். புலிகளை தீவிரவாத அல்லது அதிதீவிரவாத சக்திகள் என விபரிக்கும் சக்திகள் தமிழீழத்திற்கு மாற்றான தீர்வு உள்ளதாக பாசாங்கு செய்கின்றன. இந்த பாசாங்குகளை தமிழர்களுக்கு எதிரான போரின் பரப்புரை நோக்கத்திற்காக சிறீலங்கா பாவிக்கின்றது. வரலாற்று பூர்வமான நியாயத்தை மறைத்துவிட்டு அந்தந்த நேரத்திற்கு ஏற்ப தீர்வுபற்றியும் புலிகள் பற்றியும் சிங்கள அரசு பரப்புரைகளை மேற்கொள்கிறது.

இதனைத் தேர்ந்தெடுத்து தாக்கியுள்ள தமிழ்ச்செல்வன் தமிழர்களின் போராட்டம் பற்றிய வரலாற்று பூர்வமான கேள்வியொன்றை பேட்டி பூராவும் எழுப்பியுள்ளார்.

சிங்கள அரசியல்வாதிகளை பகிரங்கமாகவும் - கடுமையாகவும் விமர்சித்த தமிழ்ச்செல்வன், சிங்கள மக்களை 'ஏமாற்றப்படும் வாக்காளர்கள்' என விபரித்திருந்தார்.

ஆனால், தமிழ்ச்செல்வனின் பிரதான செய்தியானது சிங்கள மக்களை போராட அழைக்கும் வேண்டுதல் ஆகும். இதுதான் அரசியல்வாதிகளை கிலிகொள்ளவைத்துள்ளது. ஐ.தே.க உடன் பேசினோம் - ஏமாற்றப்பட்டோம்; சு.க. உடன் பேசினோம் - ஏமாற்றப்பட்டோம். இனிமேல் இத் தலைமைகள் தீர் வைத் தரக்கூடியவை அல்ல. ஈற்றில் உள்ள ஒரே சாத்தியமான வழி, தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமையை அங்கீகரிக்கும் புதிய சிங்களத் தலைமை ஒன்றை உருவாக்குவிப்பதே என்பது புலிகளின் நிலைப்பாடாகும்.

புதிய சிங்களத் தலைமை பற்றி புலிகள் பேசுவதை இன்றைய சிங்கள சக்திகள் மட்டுமல்ல, உலக அரசியல் அவதானிகளும் ஆழமாக ஆராயத் தொடங்கியுள்ளனர். ஐ.தே.க., சு.க. என்பனவற்றினை ஒன்றிணைத்து அதனுடன் புலிகளை பேசவைக்க வேண்டும் என பிரித்தானியா விரும்புகிறது. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் சிறீலங்கா தொடர்பான தமது கோட்பாடுகளில் இவ் இரு பிரதான கட்சிகளையும் பிரதான பாத்திரங்களாக கருதுகின்றன. இவற்றிற்கு அப்பால் புதிய சிங்கள தலைமை பற்றி இவை சிந்திக்கவில்லை. அப்படி ஒரு புதிய தலைமை தோன்றுவதை இச் சக்திகள் அச்சத்துடன் தான் நோக்குகின்றன. எனினும் புலிகள் புதிய சிங்கள தலைமைபற்றி பேசுகின்றனர். இது ஒரு இராஜதந்திர மொழியா? அல்லது இராணுவ உள்நோக்கு கொண்ட அறிவிப்பா? என கொழும்பு குழம்பிப்போயுள்ளது.


இது ஒரு அரசியல் பொறி எனவும் கருதப்படுகின்றது. சிங்கள அரச இயந்திரம் வரையறைசெய்யப்பட்ட குணாம்சங்களுடன் உருவான இனவெறி அமைப்பாகும். இனவெறி, இவ் அமைப்பின் பிரதான நகர்வு சக்தியாகும். இக் குரோதத்தை சிறீலங்காவின் இரு பிரதான அரசியல் சக்திகளும் பற்றிபிடித்து தாங்கி நிற்கின்றன. பௌத்த மதவாத அமைப்புக்கள் இவ் அரசியல் கட்சிகளை சார்ந்தே நிற்கின்றன. இந் நிலையில் இவ்விரு பிரதான அரசியல் சக்திகளும் இல்லாதாக்கப்பட்ட புதிய சிங்கள அமைப்பு தன் சமச்சீரை இழந்துவிடும். பூதாகரமான இராணுவம், போர் தோற்றுவித்த பொருளாதாரச்சுமை என்பன இச் சமச்சீரற்ற தளம்பலுக்கு பிரதான காரணங்களாக அமையும். இந்தச் சூழ்நிலை இன்றைய சிங்கள அமைப்பை தலைகீழாக்கி பலவீனப்படுத்திவிடும். ஆனால் தமிழ் சிங்கள தேசியங்களுக்கு இடையேயான தீர்வு, இவ்வாறான பின்னணியில்தான் சாத்தியமாகும். தமிழ்ச்செல்வன் பேட்டி இதனை கணித்தே ஒரு புதிய கோட்பாடொன்றை சிங்கள மக்களுக்கு முன்மொழிந்துள்ளது. சிங்கள மக்கள் இவ் உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தால் தமிழர்கள் தமிழீழத்தை பிரகடனப்படுத்துவர். அதனை உலகம் அங்கீகரித்தே ஆகவேண்டும்!

**பார்வை**

- ராஜா




நன்றி: தினக்குரல்




# மண்வாசனை

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

காலையில் பளீர் என்று மென் பச்சையாக இருந்த செவ்வந்தியின் இலைகள் தளர்ந்துபோய்க் காணப்பட்டன. மதிலோடு சரிந்திருந்த குறோட்டன்கள் சோம்பி இருந்தன.

வேப்பமரக் கிளையில் இரண்டு காகங்கள் கவலையுடன் பதுங்கியிருந்தன. சம கால நிகழ்வுகளைப் போலவே வெய்யில் கோரமாக இருந்தது.

சைக்கிளை எடுத்துக்கொண்டு கேற்றடிக்கு வர வெய்யிலில் வெம்மை உடலைச் சுட்டது. தகதகவென்று தெரு மின்னியது.

நேரம் பகல் பதினொருமணி இருக்குமா? வெய்யில் இப்போது இப்படிப் பொசக்கினால் திரும்பி வரும்போது எப்படியிருக்கும்.

வெளி விறாந்தைக் கதவடியில் நின்ற சின்ன மகன் தளர்ந்து விழும் காற்சட்டையை இழுத்துப் பிடித்துக்கொண்டு டாட்டா காட்டினான்.

வெளி உலகத்து வெய்யிலைவிட எத்தனையோ மடங்கு வெம்மையைத் தினமும் அலட்சியமாக நெஞ்சில் தாங்கிக்கொண்டு வாய்க்கு ருசி படைக்கும் மனைவியும், அவனோடு கூட நின்றாள்.

அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் முகிழ்ந்திருந்தன. 'என்ன யோசிக்கிறியள்?' என்றாள் அவள்.

'ம்... வெய்யிலாய் இருக்குதப்பா...'

'எத்தனை தரம் சொல்லிப் போட்டன், குடையைக் கொண்டு போங்கோவன் என்று' என்றாள் பதிலுக்கு.

'குடை பிடிச்சுக்கொண்டு சைக்கிள் ஓடுவது கஷ்டம் அப்பா'

'என்னண்டு மழை காலத்தில ஓடுறீங்கள்' என்ற அவளின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

அவளுக்குத் தெரியும் என் மனதைப்பற்றி. ஒரு ஆண் வெய்யிலுக்கு குடை பிடித்துக் கொண்டு போவதென்பது? எல்லா ஆண்களும் குடையுடனா போகிறார்கள். நான் மட்டும் குடையுடன் றோட்டால் போனால்? எத்தனைபேர் விண்ணாணமாகப் பார்ப்பார்கள்? கொடுப்புக்குள் சிரிக்கமாட்டார்களா?

'என்ன மனிசரப்பா நீங்கள்? ஏன் மற்றவர்களுக்காகப் போகுறீர்கள்? ஒன்றில் நீங்கள் வெய்யிலில் போய் பழகவேண்டும். அல்லது குடையைத் தொப்பியைத் தன்னும் கொண்டுபோக வேண்டும்.'

அவள் சொல்லுவது நியாயம்தான், எல்லாப் பிரச்சினைகளையும், விளைவுகளையும் இறுதியாக சுமைதாங்கியாகச் சுமப்பவள் அவள்தான்.

வெய்யிலுக்குள் போய் வந்தால் அன்று முழுக்கத் தலை வலிக்கும். தலையைத் தூக்க முடியாது. தொடர்ந்து விடாமல் இரண்டு மூன்று நாட்களுக்கு இதே பல்லவிதான்.

நான் படும்பாட்டை உணர்ந்து துணைக்கு வருபவள் அவள்தான். பின் தூங்கி முன் எழுவது மட்டுமல்ல சகல வேலைகளுக்கும் 'ததுங்கிணத்தோம்' போட்டுக் கொண்டு என் தலைவலிக்கும் துணை வருவதென்றால் இலேசான காரியமா?

யாழ்ப்பாணத்து சுற்றுப் புறத்துச் சூழ்நிலை நாள் ஒரு தன்மையும், பொழுதொரு தோற்றமுமாக இருக்கையில் வெளியில் போகும் அலுவல்களை இயன்றவரை குறைத்துவிட்டேன் என்றாலும் பரீட்சை ருபத்தில் வந்துவிட்டது உபத்திரவம்.

'தொடர்ந்து ஒரே கதிரையில் இருக்கிறியே.... அலுக்கேல்லையே...' என்று நண்பர்கள் கிண்டல் செய்ய 'என்னப்பா உங்களுக்கு புறமோசன் ஒன்றும் இல்லையே' என் மனைவி கணைகள் எறிய, கடைசியில் களத்தில் இறங்கியாகினேன்.

பிரதிவாரமும் மாதம் கடந்துவரும் அரசாங்க 'கசற்' பார்த்து உயர் பதவிக்காக பரீட்சைக்கு விண்ணப்பித்தாகி விட்டது.

அந்தப் பரீட்சைத் திகதி இந்தா இந்தா என்று பூதமாக வெருட்ட.... பரீட்சைக்குத் தயார் செய்யவே இந்த சனி ஞாயிறு பயணங்களில் வெய்யில் பிரச்சினையும், பஸ்சில போகலாம்தான். ஆனால் பஸ்சில் போகும் பழக்கத்தைக் கைவிட்டு கனகாலம் ஆகிவிட்டது. பரீட்சைக்குப் படிக்கப்போகும் இடத்திற்குப் போய்ச் சேர இரண்டு பஸ் மாறவேண்டும். பிறகும் இறங்கி நடக்கவேண்டும். வெய்யிலுக்குள் சைக்கிளில் போவதே சங்கடமாக இருக்கும்போது நடப்பதெப்படி?

தற்போதைய காலத்திய நிலையில் பஸ்சை நம்பிப் போகமுடியாது. றோட்டால் போய்வரும் மினி பஸ்கள் சிலவேளை ஒழுங்கைகள் வழியாகவும் சுழன்றடிக்கமுனையும். பஸ்சேயில்லாமல் நடைக்குத் தாவவேண்டி வரும். இப்படி எத்தனையோ சிக்கல்கள் இருக்கும்போது பஸ்சில எப்படிப் போகமுடியும்? ஒவ்வொரு சனி ஞாயிறு அல்லது விடுமுறை நாட்களில்தான் இந்தப் பிரச்சினை களைகட்டும். ஏனைய நாட்களில் காலையில் வேலைக்குப்போய் மாலையில் வேலையால் திரும்பும் வரை வெய்யில் பிரச்சினை இல்லை.

இரட்டை மாடிக் கட்டடத்தில் சிமெந்துக் கூரை கொண்ட கீழ் மாடியில் ஃபான் காற்று கச்சிதமாக வீச கிளுகிளுவென்று ஜன்னல்வழியே வேப்பங்காற்று சுகமாய் வர பைல்கள் நகராவிடினும் பொழுது கரைந்துவிடும். பிறகு எப்படி வெய்யில் பிரச்சினை வரப்போகிறது?

ஒரு தடவை துணித்தொப்பி சகிதம் புறப்பட்டால், அது கல்லாகத் தலையை அழுத்திற்று. தலையை யாரோ அமத்தி பிசைவது போன்ற உணர்வு.

தலை வேறு வியர்த்து பேன் கடிப்பதுபோல கடித்துத்துளைத்து தலையைப் பிய்த்துப் பிடுங்க வேணும் போல இருந்தது.

தொப்பியைப் போட்டுக் கொண்டு போங்கோ என்று ஆலோசனை சொன்ன மனைவியை ஒரு வாட்டம் திட்டித் தீர்க்க முனைந்தது மனம்.

ஒரு வழியாகத் தொப்பியையும் பிடுங்கிக் கொண்டாகி விட்டது. திடமென ஒரு வகை சுதந்திர உணர்ச்சி வெம்மையாக இருந்தாலும் காற்றுப் பட்டவுடன் இதமாக இருந்தது. ஆனால் மறுபடியும் வெய்யில் தலையை பொசுக்கியது.

வீடு வந்து சேர தலையிடி களைகட்டிவிட்டது. சகல பக்கவாத்தியங்களும், துணைசேர



நாளைவரை வேறு தொந்தரவுகள் தேவையில்லை.

தொப்பி இல்லாமலே வந்து சேர்ந்துவிட்ட என்னைக் கண்டதும் கோபமாகவே வந்த மனைவி 'கண்டறியாத நாகரிகம் பார்க்கிறியள், தொப்பியைப் போட்டுக்கொண்டு வந்தால் என்னவாம். எப்படித்தான் கழுதையாய் கத்தினாலும் உங்களைத் திருத்த ஏலாது' என்று வார்த்தைகளைத் தாளித்தாள்.

தலையிடி வருத்தம் ஒருபக்கம். அவளின் திட்டுதல் மறுபுறமாகச் சேர்ந்து கோபத்தை உண்டாக்கியது. அவளைக் கோவித்து என்ன பிரியோசனம் என்று சமாளித்துக்கொண்டு படுக்கையில் சரிந்தேன்.

நான் கோபத்தைக் கைவிட்டாலும் மனைவி கைவிடுவதாக இல்லை. கோபத்தை மாத்திரமல்ல வார்த்தையால்கூட என்னைத் துளைத்து எடுக்கத் தொடங்கி விட்டாள். 'குடை பிடிக்க வெட்கம், தொப்பி போடுவது நாகரிகம் இல்லையென்றால் இனிமேல் காலமை போய் பின்னேரம் வாங்கோ....நான் இரண்டு நேரச் சாப்பாட்டையும் சமைத்துத் தாறன் கட்டிக்கொண்டு போய்ச் சாப்பிட்டுவிட்டு ஆறுதலாய் வாங்கோ. மனிசர் ஒன்றில் தங்கடை சொந்தப் புத்தியில் நடக்கவேண்டும். அல்லாட்டி ஆரும் சொல்லுறதைத் தன்னும் கேட்கவேணும்.... இரண்டும் இல்லாட்டி பிறகென்ன மனிசர்?'

கட்டில் தலைமாட்டில் நின்று அவள் புறுபுறுத்தாள். எழும்பி ஒரு தடவை அவள் வாயைப் பொத்தி இரண்டு அடி கொடுத்தால் என்ன? என்ற ஐடியாவும் வந்தது. அண்டைக்கு மாத்திரம் அல்ல, அவள் வாய் நீளும் அனேக தடவைகளில் இப்படியான ஒரு யோசனை வருகிறதுதான் என்றாலும் செய்யமுடிவதில்லை. மனம்வராது.

தலையணையில் முகம் புதைத்துக்கொண்டு பதில் சொல்லாமல் படுத்திருப்பதை சிறிது நேரம் பார்த்துக்கொண்டு நின்ற அவள் போய் குளிசையுடனும், கோப்பியுடனும் வந்தாள்.

அதற்கிடையே என்நிலையை அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும். என் கோபத்தைக் கரைக்க அவளும் கரையத் தொடங்கினாள்.

'இஞ்சருங்கோப்பா.... எழும்புங்கோ' என்றபடி தலைமாட்டில் வந்து அமர்ந்தாள். அவளின் மிக நெருங்கிய அண்மை நன்றாகத் தெரிந்தது. இயல்பாக அவள் மேனி வாசம் சற்றுப் புளிசலான வாடை கொண்ட அவளது உடையின் மணம் சேர்ந்து இம்சைப்படுத்தியது.

'இஞ்சை... குளிசையும் கோப்பியும் கொண்டு வந்திருக்கிறன் எழும்புங்கோ.... நீங்களும் எங்கடை சின்னவன் மாதிரித்தானப்பா...' என்றபடி கையினால் தலைமயிரைக் கோதினாள்.

அவள் விரல்கள் நெற்றியில் அலைந்தன.

சட்டென்று நிலை குலைந்து போனேன். பஞ்சாய்ப் பறந்த கோபத்தைத் தேடி நான் ஓடவில்லை. அவள் கைகள் தந்த சுகமான தழுவலினால் மெய் மறந்து போனேன். நிமிர்ந்து பார்த்தேன். அவள் விழிகள் பிரகாசமாக ஜொலித்தன. பரவசம் கொப்பளித்தது.

அதன் பின்னர் இன்றைக்குத்தான் வெய்யில். நேரத்தில் புறப்பட்டது மாத்திரமல்ல, குடைச் சங்கதியும் வேதாளமாக மீண்டும் முளைத்துள்ளது.

சைக்கிள் கேற்றைத் தாண்டவில்லை. தலையைச் சொறிந்தபடி மனைவியையும் தெருவையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டுநிற்க, யாரோ ஒரு வயதான மனிதன் குடை பிடித்துக்கொண்டு நடந்துபோனார்.

'அங்கே பாருங்கோவன், வெய்யிலுக்குக் குடை பிடித்துக் கொண்டு ஆட்கள் போகினம்தானே. நீங்கள்தான் கண்டறியாத வீண் கதை கதைத்துக்கொண்டிருக்கிறியள்.

நான் எதுவுமே பேசவில்லை.

'நில்லுங்கோ வாறன்' என்றபடி வீட்டிற்குள் ஓடினாள்.

'அம்மா அம்மா' என்றபடி சின்னவனும் தாயும் பின்னால் விரைந்தான்.

வெய்யிலில் காப்பாற்றக்கூடிய ஒரு பெரிய குடையை கொண்டுவந்து நீட்டினாள்.

'உதையே கொண்டுபோறது'

'பின்னை வேறை எதைக் கொண்டு போகப் போறியள், இது எண்டால்தானே வெய்யிலுக்கு நல்லது'

'இந்தப் பெரிசைக் கொண்டு போறதைவிட பேசாமல் போகலாம்.'

'அப்ப சின்னக் குடையைக் கொண்டு வாறதே'

'ம்..' என்றேன் அரை மனத்துடன்

மீண்டும் ஓடியே போனாள், சின்னக் குடையுடன் திரும்பி வந்தாள்.

'பிடியுங்கோ'

அரைமனத்துடன் வாங்கியாகிவிட்டது.

'சரி.... கவனமாய்ப் போட்டுவாங்கோ' என்றாள் மனைவி.

ஆனால் நான் அசையவில்லை. ஏதோ ஒன்று மனதை சங்கடப்படுத்திக் கொண்டிருந்தது.

'பிறகு ஏன் மினக்கெடுறியள்... போட்டுவாங்கோ' என்ற வார்த்தைகளால் தள்ளினாள்.

வேறு வழியில்லை. கையில் குடையுடன் கேற்றைத் தாண்டி தெருவுக்கு வர வெய்யிலின் வெப்பம் தகிர்த்தது.

(தொடர்ச்சி 22-ம் பக்கம்)

# திலீபனின் 11ம் ஆண்டு நினைவாக...

## அகிம்சையின் ஆயுதம் திலீபன் அண்ணா...!

தமிழின வரலாற்றில்... இல்லை... உலக வரலாற்றில் தமிழினம் பதிந்து கொண்ட அகிம்சை வரிகள் திலீபன்.

1987 செப்டெம்பர் 26.

நினைவைவிட்டு நீங்கா அந்நாளை இன்று நினைத்தாலும் நெஞ்சு கனக்கிறது...

மாணவனாக நாம் பாடசாலை சென்று கொண்டிருந்த காலம்.

ஒப்பந்தம் என்ற பெயரில் இந்திய இராணுவம் தமிழீழ மண்ணில் நிலைகொள்ளத் தொடங்கிய நேரம்.

அப்போதுதான்... தமிழீழ மக்களுக்கு வழங்கிய ஒப்பந்தங்கள் மீறப்படுகின்றன என்று கூறி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து நீர் ஆகாரமின்றி திலீபன் அண்ணா அகிம்சைப்போரை ஆரம்பித்திருந்தார்.

அதனால் இரு வாரங்களாக பாடசாலை தினமும் பெயரளவிலேயே இயங்கிக்கொண்டு... இல்லை திறந்து மூடப்பட்டுக் கொண்டிருந்தது. திரும்பும் திசையெங்கும் திலீபன் அண்ணா பற்றியே பேச்சு..... பாடங்களும் அவர் பற்றியே...

இடைவேளை என்றாலே மாணவர்களால் நிரம்பிவிடும் மைதானம் சோபை இழந்துபோய்க் கிடந்த காட்சி சொல்லும், மாணவர்களின் சோகத்தை.

இந்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டு முறை அருகிலிருந்த இந்திய இராணுவ முகாமின் முன்னால் மறியல் போராட்டம் நடத்தியிருந்தோம்.

அன்றும் திலீபன் அண்ணாவின் அகிம்சைப்போருக்கு ஆதரவு தெரிவித்து இன்னொரு மறியல் போராட்டத்திற்கு எம்மைத்தயார் செய்யவே பாடசாலை வளாகத்தில் கூடி நிற்கின்றோம்...

சொல்லிக்கொள்ளும் இந்தியா, எங்கள் திலீபன் அண்ணாவை காப்பாற்றிவிடும் என்று காத்திருந்த - எஞ்சியிருந்த கொஞ்ச எதிர்பார்ப்பும் நிராசையாகவே போய்விட்டது....

புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல அகிம்சையாலும் போரிடத் தெரிந்தவர்கள் என்று திலீபன் அண்ணா நிரூபித்துவிட்டுச் சென்று விட்டார்.

திலீபன் அண்ணாவின் செய்தி கேட்ட விநாடியில், கூடிநின்ற மாணவர் கூட்டம் எப்படிக் கலைந்தது. எந்த வழியால் இவ்வளவு வேகமாக வந்தடைந்தோம்..? நினைவுபடுத்தி பார்க்கிறேன் இன்னும் முடிய



வில்லை!

இது அதீத கற்பனையல்ல. இன்னும் நினைவுகளால் மீட்க முடியாத விடயங்கள் ஏராளமுண்டு....

அந்த நேரம் ஏற்பட்ட அதிர்ச்சியில் உண்டான உணர்ச்சி வேகம். சில நிமிடங்களிலேயே யாழ். நகரை நெருங்கி விட்டோம்.

நாலா திசையிலிருந்தும் வந்து குவிந்து கொண்டிருந்த மக்களால் போக்குவரத்து முற்றாகவே தடைப்பட்டு விட்டது.

நேரம் மாலை நாலு மணியாகி விட்டது. வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற திலீபன் அண்ணாவின் பூதவுடல் மீண்டும் நல்லூர் வீதிக்கு கொண்டுவரப்படுகிறது.

எங்குமே அழுகையின் ஓலங்கள்... பெண்கள், குழந்தைகள், வயது வந்தவர்கள் ஆண்களென்று எல்லோரும் குரலெடுத்து அழுத அழுகையில் தேரோடிய வீதியெங்கும் கண்ணீரோடிப் பாய்ந்தது.


திலீபன் அண்ணா பிறந்த சில மாதங்களில் அவரது தாயார் இறந்துவிட்டார்கள் என அறிந்திருந்தோம். ஆனால் திலீபன் அண்ணா இறந்தபோது எத்தனை தாய்மார்கள் தம் பிள்ளையை இழந்துவிட்ட சோகத்தில் கதறி அழுதார்கள்....!

'திலீபன் மண்ணை மட்டுமல்ல மக்களையும் எவ்வளவு அதிகமாக நேசித்திருக்கிறான்' என்பதை அப்போதுதான் இந்திய இராணுவமே புரிந்துகொண்டிருக்கும்.

திலீபன் அண்ணா இருபத்தொரு வயதிலேயே தலைவரால் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த இளைஞனால் அரசியல் நிலைகளைப் புரிந்துகொண்டு சரியாக செயற்பட முடியுமா என்ற கேள்வி பலரது மனதில் எழுந்ததுண்டு. அதற்கான விடையை இலட்சக்கணக்கான மக்களின் கண்ணீர் புரிய வைத்திருக்கும்.

மக்களோடு மக்களாய், அவர்களில் ஒருவராய் எவ்வளவு அன்போடு கலந்திருந்தார். அனைத்து மக்களையும் ஓரணியில் இணைக்க 'களத்தில்' என்ற செய்தி ஏட்டை முதன்முதலாக ஆரம்பித்திருந்தார். அதுதான் அவரை தமிழீழ மக்களோடு இன்னும் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தியது.

அஞ்ஞாஸ்தானோ என்னவோ



சனிக்கிழமை. காலை பதினொன்று இருபது அல்லது முப்பது இருக்க வேண்டும்....

காற்றோடு வந்த செய்தியில் கண்களே குளமாகிவிட்டன...

எங்கள் தேசத்தின் விடி விளக்கொன்று எங்கள் கண்கள் முன்னாலேயே அணைந்து போய்விட்டது!

அகிம்சை என்றால் இந்தியா. இந்தியா என்றால் அகிம்சை என்று

வாகனங்களில் தொடர்ந்து செல்ல முடியாது என அறிவித்து விட்டார்கள். சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு ஓட்டமும் நடையுமாக நல்லூரை அடைகின்றோம். கோயில் வீதிக்குள் இறங்குவதென்றால் அப்போதுள்ள நிலைமையில் முடியாத காரியம். நேரம் செல்லச் செல்ல மக்களும் வந்து குவியத் தொடங்கி விட்டார்கள்.

யாழ். குடா மட்டுமல்ல தமிழீழ பகுதிகள் எங்குமிருந்தும் மக்கள் வந்து குவிந்துகொண்டிருந்தார்கள்.

திலீபன் அண்ணாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் வரிசைகட்டி நிற்கின்றார்கள். வரிசை எங்குவரை நிற்கிறதென்பது தெரியவில்லை. மணிக்கணக்காக ஊர்ந்து, ஊர்ந்து அருகினில் நெருங்குகின்றேன்.... விம்மி வந்த அழு

கையை கட்டுப்படுத்த முடியவில்லை...

அவர் முகத்தைப் பார்க்கிறேன்.... திலீபன் அண்ணா உண்ணா விரதம் இருந்தபோது பேசிய வார்த்தைகள் நினைவில் வருகின்றது.....

'நான் மீட்க முடியாத இடத்திற்கு சென்று கொண்டிருக்கிறேன்... உங்களைவிட்டு செல்லும் நிலைக்கு கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கிறேன்.... நான் வாழ்நாள் பூராவும் நேசித்த மக்களே....! நீங்கள் என் முன்னே நிற்கிறீர்கள். சாகும் வேளையிலும் நான் மகிழ்ச்சியுடனே சாகிறேன்.'

அவர் சொன்னபடியே நடந்து விட்டது.

திலீபன் அண்ணா ஒரு போராளி மட்டுமல்ல, மக்களின் வழி காட்டியும் கூட... அதனால்தான் ஒரு பத்திரிகை வெளியிட்டிருந்த செய்தியில்... 'திலீபன் ஒரு விடயத்தை மக்களிடம் அழுத்தி திரும்பத் திரும்பச் சொல்லுவான். அதனால் அது மக்களின் காதில் விழவில்லை. அவர்களின் நெஞ்சில் விழுகின்றது' என்று குறிப்பிட்டிருந்தது.

உண்மைதான்.

இல்லாவிட்டால் தசாப்தம் ஒன்று கடந்தும் அவர் நினைவுகள் மட்டுமல்ல, அவர் உதடுகள் உச்சரித்த வார்த்தைகள் கூட இன்னும் மக்கள் மனதில் எப்படி அழியாமல் நிலைத்து நிற்கமுடிகின்றது..

– ச.சித்திரா
பாரிஸ்

## எங்கள் மண்ணின் தாய் நீ !



திலீபன் அண்ணா...
உன்னை அண்ணா
என்று சொல்வது தவறு...!

தாய்தான் பிள்ளையை
நேசிப்பது அதிகம்
நீ மக்களை நேசித்தாய்....
ஆகவே
நீயும் எங்கள் மண்ணின்
தாய்தான்.

உன்னைக் கவிபாட
எமக்கேது தகுதி

அகிம்சைக்கு பெயர் போன
பாரதத்திற்கே
அகிம்சையின் தத்துவத்தை
கற்றுக் கொடுத்தவன் நீ!
புத்தன் பிறந்த பூமிக்கே
அமைதியின் தாற்பரியத்தை
உணர்த்தியவன்
நீ மட்டும்தான்...!

உன்னைக் கவிபாட
எமக்கேது தகுதி

பதினொரு ஆண்டுகளா
நீ எம்மை விட்டு
பிரிந்துசென்று....!
கடைசி மூச்சு நிற்கும்வரை
நீ
உறுதி தளராது
உச்சரித்த வார்த்தைகள்
இன்னும் எம் செவிகளில்

உன்னைக் கவிபாட
எமக்கேது தகுதி

உன் கோரிக்கைகள் வேண்டுமானால்
நிறைவேறாமல் போயிருக்கலாம்
உன் இலட்சியம் தலைசிறந்த
தலைவரின் வழிகாட்டலில்...
உயரிய தற்கொடைகளினால்
மெல்ல மெல்ல
நனவாகி வருகின்றது!

நாளைய விடியலில்
நீ எம்முடன் இல்லைத்தான் - ஆனால்
உன் நினைவுகள்
பூமி சுற்றும்வரை
எம்மையும் சுற்றிக்கொண்டே இருக்கும்

அதுவரை ஆயிரம் ஆயிரம் கவிஞர்களின்
கவிதைப் பூக்களுடன்
எனது வரிகளையும் சிறு மொட்டாக
உன் கல்லறை மீது தூவுகிறேன்....

- [illegible]

# பெற்றோரின் புகலிட மொழியறிவின்மையும் எம்மைப் பாதிப்புக்குள்ளாக்குகின்றது.

**சிறுவயது முதலே தமிழீழத்திலிருந்து புலம்பெயர்ந்து அகதிகளாகவும், பிரான்சில் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்களாகவும் வாழ்ந்துவரும் எம் இளம் பெண்கள் பற்றியதான 'சமூகக் கண்ணோட்டம்' பற்றி, ஈழமுரசு பெண்கள் பகுதியினர் பாரிசில் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகளிடம் கேட்டபோது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்...**

**இவற்றை ஆழமாக ஆராய்ந்து செயற்படும் பொறுப்பு புகலிடத் தமிழ் மக்கள் மீதே சுமத்தப்பட்டிருக்கிறது.**

**கேள்வி:** *நாம் புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் இவ் வெளிநாடுகளில் எம் தமிழர்களின் கலாச்சாரம் சீர்குலைந்து போவதற்கு உங்களைப்போன்ற வளர்ந்து வரும் இளம் சந்ததியினர்தான் அதிகளவில் காரணமாக இருப்பதாக பொதுவான ஒரு குற்றச்சாட்டு நிலவுகிறதே. இதைப்பற்றிய உங்கள் எல்லோரினதும் அபிப்பிராயம் என்ன?*

**பதில்:** (சாந்தினி - 17, கவிதா-17, தர்சினி-19) உண்மையிலேயே இது மிகவும் கவலையான ஒரு குற்றச்சாட்டுத்தான். நீங்கள் சொல்வதுபோல நிறையப்பேர் இப்படியான ஒரு மனப்பாங்குடன்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக இந்த எண்ணப் போக்கை எல்லோரும் மாற்ற வேண்டும். எங்களிற்கு எம் தாய் நாட்டிலும் தாய் மொழியிலும், தமிழ் மக்களின் பண்பாடுகள் - பழக்க வழக்கங்களில் நிறைய விருப்பம் உண்டு. இதற்கு வேறு ஒருசில பிள்ளைகள் காரணமாக இருக்கலாம். அதற்காக ஏன் எல்லோரையும் இப்படி பார்க்கிறார்களோ தெரியவில்லை.

**பதில்:** (ஜனனி -21 கிருசாந்தி-19) (இவர்கள் சற்று கோபமாக)

ஏன் எம்மைப்போல இளம் பிள்ளைகளைப் பிழை சொல்கிறீர்கள். இங்குள்ள எவ்வளவு பெரிய பெண்கள் அங்குள்ள தமிழீழத்திலேயே படித்து வளர்ந்து அங்குள்ள பண்பாடு பழக்க வழக்கங்களிலேயே வாழ்ந்திருந்தும் கூட ஏனோ இங்குள்ள வெள்ளையின மக்களின் கலாச்சாரப்படிதானே வாழ விரும்புகிறார்கள். அதுமட்டுமல்ல இங்குள்ள எம் பெரியோர் பலரிடமும் பொதுவாக ஓர் பயம் இருக்கிறது. ஏதோ இங்கு வளர்ந்து வரும் எம்மைப்போல பிள்ளைகளிற்கு, எப்படியும் வெள்ளையின மக்களின் கலாச்சாரத்தின் மேல் பிடிப்புவரும் என்று.

> **எங்கள் ஆசிரியர் வகுப்பில் வைத்து எம் தமிழர்களின் கலாச்சாரத்தை ஏனைய சக மாணவர்களிற்கு எடுத்துக் கூறச் சொல்லிக் கேட்டபோது, தன்னால் முடியாதென மறுத்துவிட்டா. காரணம் எங்களுடைய மூடத்தனமான சில பழக்கங்களைக் கேட்டால் ஏனைய மாணவர்கள் எம்மைக் கேலி செய்வார்கள் என்ற தாழ்வு மனப்பான்மைதான்.**

**பதில்:** (சந்திரவதனா-20, பிரேமினி-19) நீங்கள் கேட்கும் இந்தக் கேள்விக்கு நாங்கள் பொருந்தாவிடினும் எம்மைப் போல வேறு சில பெண்கள் பொருத்தமுடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். என்னோடு படிக்கின்ற எங்கள் நாட்டு பெண் பிள்ளையொன்று உடைகள் அணியும் விடயத்திலும் அம்மா அப்பாவின் சில கட்டுப்பாடுகளைக் கேட்க வேண்டிய காரணத்தாலும் அடிக்கடி எம் கலாச்சாரத்தைப் பற்றிக் குறை கூறிக்கொண்டிருப்பா. ஒரு முறை எங்கள் ஆசிரியர் வகுப்பில் வைத்து எம் தமிழர்களின் கலாச்சாரத்தை ஏனைய சக மாணவர்களிற்கு எடுத்துக் கூறச் சொல்லிக் கேட்டபோது, தன்னால் முடியாதென மறுத்துவிட்டா. காரணம் எங்களுடைய மூடத்தனமான சில பழக்கங்களைக் கேட்டால் ஏனைய மாணவர்கள் எம்மைக் கேலி செய்வார்கள் என்ற தாழ்வு மனப்பான்மைதான்.

**கேள்வி:** *பொதுவாக நீங்கள் எல்லோரும் இங்கு படித்துக்கொண்டிருப்பதால் வீட்டிலும் வெளியிலுமாக இரண்டுவிதமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். எனவே இதன்போது உங்களிற்கு எப்படியான பிரச்சினைகள் தோன்றுகிறது?*

**பதில்:** (எல்லோரினதும் பதில் அனேகமாக ஒத்த கருத்துடையவையே)

முதலாவதாக ஒன்று எம் பெற்றோர்களின் பயத்தை எவ்வாறு போக்குவது அல்லது எப்படி அவர்களிற்கு புரியவைப்பது என்று விளங்கவில்லை. உதாரணமாக எங்கள் எல்லோரினது அம்மாக்களிற்கும் ஏதோ நாங்கள் சற்று தங்களிலிருந்து விலகியே இருக்கிறோம் என்றே நினைக்கிறார்கள். ஏனெனில் இங்குள்ள வேற்றுநாட்டுப் பிள்ளைகளைப் போல் நாமும் தாய் தந்தையிடம் பெரியளவில் பாசமில்லாமல் வளர்ந்துவிடுவோம் என்று கடுமையாக யோசிக்கிறார்கள். உதாரணத்திற்கு இந்த உடையை இன்று எனக்குப் போட விருப்பமில்லை. இருந்தும் இதையே இன்று போட வைத்துவிட்டார்கள். காரணம் தங்கள் சொற்படிதான் நாங்கள் எந்த முடிவையும் எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. அடுத்தது அவர்களிற்குள்ளேயே பயம். என்னதான் நாங்கள் அவர்களின் சொற்படி நடந்தாலும், எங்கே வேற்றுநாட்டைச் சேர்ந்த எம்மோடு படிக்கும் பிள்ளையோடு நாம் நட்பு வைத்தால் அவர்கள் நிச்சயம் எம்மை தவறான வழிக்கே அழைத்துச் செல்வார்கள் என்ற ஒரு தவறான அபிப்பிராயம் உண்டு. சில வேளைகளில் நாம் பிழையேதும் செய்யாவிடினும் எங்கள் பெற்றோரினது இத்கைய தேவையற்ற கவலைகளைப் போக்க பொய் சொல்லி மற்றும் நடிக்கவும் வேண்டிய சந்தர்ப்பங்களும் அமைந்துவிடுகிறது.

**கேள்வி:** *உங்களோடு இங்கு கற்கும் பாடசாலை மாணவர்களிடையே போதிய சுதந்திரம் உண்டு. அத்தகைய ஒரு சூழ்நிலையில் நீங்கள் பாலியல் ரீதியாகவோ அல்லது வேறுவகையில் ஏதும் துன்புறுத்தல்களிற்கு ஆளாகின்றீர்களா?*

**பதில்:** பெரிதாக இல்லை. காரணம் இங்குள்ள வேற்று நாட்டு இளைஞர்கள் சிலவேளைகளில் எம்மைக் காதலிப்பதாகச் சொன்னாலும் நாங்கள் மறுத்தால் மீண்டும் மீண்டும் வந்து வற்புறுத்தமாட்டார்கள். அதைவிட சிலசமயம் எம்மைத் தம்மோடு சேர்ந்து (மாணவிகள் உட்பட) உல்லாசமாக சிகரெட் புகைக்க, தேநீர் விடுதிகளிற்கு




அழைத்துச் செல்லக் கேட்பதுண்டு. அதற்கும் நாம் செல்ல மறுத்ததுண்டு. ஆனால் இப்பொழுது அநேக எம் சகமாணவர்களிற்குத் தெரியும் நாம் தங்களிடமிருந்து நிறைய வேறுபட்டுள்ளோம் என்று. அதனால் எமக்கு வகுப்பில் நல்ல மதிப்பளிப்பார்கள்.

**கேள்வி:** *என்னதான் இங்கு நீங்கள் உங்கள் சக மாணவர்களோடு நட்பாக இருந்தாலும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் உங்களைப் பிற நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் ஓரங்கட்டியுள்ளார்களா?*

**பதில்:** (சாந்தினியைத் தவிர எல்லோரும் தமக்கு அப்படியான நிலை இல்லை. என்றும் தங்களை ஏனோ இங்குள்ள மாணவர்கள் ஆசிரியர்களிற்கு மிகவும் பிடித்துள்ளதாகக் கூறினார்கள்.)

சாந்தினி: ஆம்! என் வகுப்பில் இப்படியான பாகுபாடு உள்ளது. ஒருமுறை என் வகுப்பாசிரியர் ஏதோ ஒரு பாடத்தில் என் திறமைபோதாமல் உள்ளதென்பதற்குக் காரணம் எங்கள் பெற்றோர் பொரிஜனவில் படித்திருக்க மாட்டார்கள் என்பதுதான் என்றார். அதற்குக் காரணம் என் தந்தை இங்கு செய்யும் தொழில் உணவு விடுதியில் பாத்திரங்கள் கழுவுவதுதான் என்று என் மூலம் அறிந்து வைத்திருந்தார். உண்மையிலேயே இங்குள்ள பலரும் எம் தமிழீழத்தில் நன்கு படித்துவிட்டுத்தானே இங்கு வந்துள்ளார்கள். ஆனால் புதிதான மொழி காரணமாகத்தானே இங்கு வெள்ளையர் முன் படிக்காதவர்கள்போல் எதுவும் விளங்காமல் வாழவேண்டி உள்ளது. இன்று எம் நாட்டில் நான் இருந்திருந்தால் இப்படியான கீழ்த்தரமான பேச்சை ஆசிரியரிடம் வாங்கியிருப்பேனா? சொல்லுங்கள்... என்று கண் கலங்கினார்.

**கேள்வி:** *அனேகமாக நீங்கள் எல்லோரும் சிறு வயதிலிருந்தே இங்கு வாழ்ந்து வருவதாகக் கூறுகின்றீர்கள். இப்படியான ஒரு சூழ்நிலையில் எம் தாய்நாடான தமிழீழத்தைப் பற்றியும் அங்கு இடம் பெறும் பிரச்சினைகளும் உங்கள் மனநிலையில் ஏதும் பாதிப்பை உண்டுபண்ணுகின்றனவா?*

**பதில்:** இல்லாமல் இருக்குமா? நாங்கள் என்னதான் இங்கு படித்தாலும் சந்தோஷமாக வாழ்ந்தாலும் எங்கள் சொந்தத் தாய்நாடு எது என்று யாரும் கேட்டால் தமிழீழத்தைப் பற்றித்தானே சொல்கிறோம். எம்மால் பெரிதளவில் வாசித்து எங்கள் தாய்நாட்டுப் பிரச்சினையை அறிய முடியாது என்பது உண்மைதான். ஆனால் நிறைய வீடியோப் படங்களில் பார்க்கிறோம்.

**பதில்:** (சாந்தினி, கவிதா, தர்சினி) நாங்கள் உண்மையிலேயே எங்கட நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் நடக்கும் போது இங்கு ஏதாவது எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேணுமென்று யோசிப்போம். அதற்காகத்தான் அங்குள்ள பிரச்சினைகளை இங்கு எங்கள் நடனங்கள் மூலம் மக்களிற்கு தெரியப்படுத்தி வருகிறோம். ஏனெனில் இப்பொழுதுதான் நாம் படிப்பதால் நிதி உதவியும் செய்ய முடியாதே. அதுமட்டுமல்ல எங்கட வகுப்பிலுள்ள ஆசிரியர், மாணவர்களிற்கு எம் நாட்டில் இன்று என்ன நடக்குதோ அதைத் தெரிந்ததும் முதலில் எல்லாருக்கும் சொல்லிவிடுவோம். அதனால் எங்களிற்குத் தெரிந்த பல பிறநாட்டு மக்கள் எங்கள் தமிழ் மக்களிற்காக அனுதாபப்படுவார்கள். அது மட்டுமல்லாமல் இங்கு நடைபெறும் ஊர்வலங்கள் ஒன்று கூடல்களில் தவறாமல் பங்கு பற்றுவோம்.

**கேள்வி:** *நீங்கள் உங்களிற்குத் தேவையானவற்றை சிந்திப்பதையோ அல்லது ஆழமான ஆராய்வுகளையோ எந்த மொழியை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கிறீர்கள்?*

**பதில்:** (ஓரிருவர் தவிர மற்றோர்கள் எல்லாம்) நாம் பிரெஞ்சுமொழி மூலம்தான் எமக்குத் தேவையானவற்றை அறிந்துகொள்கிறோம்.

**கேள்வி:** *நீங்கள் இங்கு பல நவீன வசதிகளுடன் படித்துவருகிறீர்கள், உங்களது இந்த கல்வியின் பயன்பாடு நாளை எம்நாட்டை நோக்கியதாக இருக்குமா?*

**பதில்:** (சிலர்) எங்களால் இப்பொழுது சரியாகத் தீர்மானிக்க முடியாது. காரணம் மொழிப் பிரச்சினைதான். மற்றும் முழுக் குடும்பமும் இங்கு இருக்கையில் நாம் எப்படி தனியே அங்கு செல்லப்போகிறோம் என்றதும் ஓர் காரணம் தான்.

> **நான் ஊர் செல்ல விரும்புவதை என் அக்கா அண்ணாவிற்கு கூற அவர்கள், எங்கே நான் அங்கு போகப் போகிறேன். ஏதோ இப்பொழுது ஒரு கதைக்காகச் சொல்கிறேன் என்று இருவரும் விளையாட்டாக நினைத்துச் சிரித்தார்கள்.**

தர்சினி, கவிதா: எங்களிற்கு அங்கு செல்லச் சரியான விருப்பம். (தர்சினி) நான் வைத்தியராக வரவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். அது நிறைவேறினால் எங்கட தாய்நாட்டிற்காகத்தான் பயன்படுத்துவேன். அண்மையில் கூட எங்கள் வீட்டில் கதைத்தார்கள். அங்கு வைத்தியர்கள் இல்லாததாலேயே நிறையக் குழந்தைகள் இறக்கின்றனர் என்று. நான் ஊர் செல்ல விரும்புவதை என் அக்கா அண்ணாவிற்கு கூற அவர்கள், எங்கே நான் அங்கு போகப் போகிறேன். ஏதோ இப்பொழுது ஒரு கதைக்காகச் சொல்கிறேன் என்று இருவரும் விளையாட்டாக நினைத்துச் சிரித்தார்கள். ஆனால் நிச்சயம் நான் அங்கு செல்வேன்.


கவிதா: உண்மையில் எனக்கு அங்கு செல்லவிருப்பமாக உள்ளதற்குக் காரணம், அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள என்னைப்போல பிள்ளைகளைப் பார்க்கத்தான் என் சகோதரனும் கூட இவர்களுடன் இருந்து அண்மையில் வீரமரணம் அடைந்துவிட்டார். ஆனால் நான் கவலையே கொள்ளவில்லை. ஏனெனில் என் அண்ணாவைப்போல அங்கு சீருடை அணிந்துள்ள அத்தனைபேரும் ஏனோ எனக்கு சகோதரர்களைப்போலவே உள்ளனர். ஆனால் உங்களிற்குச் சொல்ல கூச்சமாக இருக்கிறது. அங்குள்ள அவர்கள் நாளை என்னையும் தங்களில் ஒருவராக நினைப்பார்களோ தெரியாது. ஏனெனில் அவர்கள் அங்கு கடினமாகப் போராடும்போது நாங்கள் இங்கு வசதியாக தப்பி வந்துவிட்டோமே.

**புலம்பெயர்ந்த பாதையில் பெண்களின் இடர்பாடுகள்...**


**(இத் தொடர் அடுத்த வாரம் வெளிவரும்)**

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
**யோன்மத்தியூஸ் யோன்மரி, சு.கிரிஷோத், ந.யனுஜா**
ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



**பெயர்:** தாரணி
**வயது:** 12 (18.08.86)
**இடம்:** 93600 Aulnay Sous Bois, France.
**பொழுதுபோக்கு:**
புத்தகம் வாசித்தல், படம் வரைதல், வர்ணம் தீட்டுதல்




### கிளி

1. கிளி அழகான பறவை.
2. கிளி கூடுதலாக காட்டில் மரப்பொந்துகளில் வசிக்கும்.
3. கிளி கனதூரம் பறந்து செல்லும்.
4. வீட்டில் வளர்க்கின்ற சில கிளிகள் கதைக்கும்.
5. கிளிகளில் பல நிறங்கள் உண்டு.
6. கிளிகளில் பல இனம் உண்டு.
7. சில கிளிகளின் கழுத்தில் ஆரம் உண்டு.
8. கிளியின் சொண்டு வளைந்து கூராக இருக்கும்.
9. கிளி பழங்களும் தானியங்களும் சாப்பிடும்.
10. கிளி அனேகமாக வீடுகளில் வளர்பார்கள்.

## கவிதை முற்றம்

### தனிமரம்




தனிமரமே கனிமரமே
தவித்திருப்பதேன்?
தனிய உம்மை வாட விட்டு
தவிக்கச் செய்தது யார்?

அழகாக இருந்து மும்மை,
அரவணைக்க யாருமில்லை!

நிலவாக நான்வந்து
நெருங்கிடலாமா?

செல்வி வலஜி சிவஞானராஜா,
ஆண்டு: 05
உடுவில்,
தமிழீழம்.




## விடுமுறைநாள் கட்டுரை



**அனுப்பியவர்:**
**சுபாஜினி துரைராசா**
**வயது:** 11 (07.05.1987)
**இடம்:** Rodey, France.

<u>எனது கோடைகால விடுமுறை.</u>

எனது கோடைகால விடுமுறைக்கு எனது பெற்றோருடனும் இரண்டு சகோதரிகளோடும் பரிசுக்குப் போனேன்
பரிஸ் போகும் போது லூட்ஸ் மாதா கோயிலுக்கும் போனோம்
இது மிகவும் சக்தி வாய்ந்த கோயில்
ரொலோஸ்சி [illegible] பரிஸ் 650 கிலோமீற்றர்
பரிசில் சிலஇடங்கள் போய் பார்த்தோம் எனக்கு மிகவும் பிடித்தது யூ. ரோஷினி அங்கு நிறைய விளையாட்டுக்கள் இருந்தன
அங்கு மிகவும் சந்தோசமாக விளையாடினோம்
சிவிள்ரவல் பார்க்கப் போனோம் உலக அதிசயங்களில் இதுவும் ஒன்றென எனது பெற்றோர் கூறினார். சிவிள்ரவலின் உச்சிவரை ஏறிப்பார்த்தோம்.
இத்துடன் எனது கோடைகால விடுமுறை பயணத்தை முடித்துக் கொள்கின்றேன்

## குட்டிக் கதை படிப்போம்

### ஓவியனின் சோம்பல்

கோவிற் சுவரில் சித்திரம் தீட்டிக்கொண்டிருந்தான் ஓவியக் கலைஞன். அந்த ஓவியத்தைக் காலை முதல் மாலை வரையில் உணவு உண்ணாமல் வரைந்து கொண்டிருந்தான். பிறகு திடீரென்று அந்த ஓவியத்தைப் பார்த்த வண்ணம் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் சும்மா நின்றுகொண்டிருந்தான். அதன் பின்னர் பல நாட்கள் அந்தப் பக்கமே போகாமல் இருந்துவிட்டான்.

மாதா கோவில் குரு, அந்த ஓவியக் கலைஞனின் விந்தைச் செயல்களைக் கவனித்தார். அந்தக் கோவிற் சுவரில் அக்கலைஞன் தீட்டி வந்த சித்திரம் 'கடைசி இராப் போசனம்' என்னும் பெயருடையது. மறுநாள் கிறிஸ்து பெருமானைச் சிலுவையில் அறையப் போகின்றார்கள்; அதற்கு முந்தின நாள் இரவில் தம்முடைய சீடர்களுடன் அப்பெருமான் உணவு உண்ணும் காட்சிதான் அந்தச் சித்திரம்.

அதைச் சித்திரத்தில் சித்திரிப்பதில் அக்கலைஞன், தான் உணவு உண்ணும் நேரத்தையும் மறந்து செயல் புரிந்தது, அக்குருவுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் ஏன் செயல் மறந்து ஓவியன் அரை குறையாக இருந்த அந்தச் சித்திரத்தை அப்படி உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்? மேலும் நாட்கணக்கில் அந்தச் சித்திரத்திடம் அவன் செல்லாமல் சோம்பியிருந்தது அக் குருவுக்குப் பிடிக்கவில்லை.

அவ்வோவியக் கலைஞனிடம் சென்று, 'ஏன் இப்படிக் காலத்தை வீணாக்குகின்றீர்? தொடர்ந்து வரைந்து கொண்டேயிருந்தால் சித்திரம் விரைவில் பூர்த்தியாகிவிடும் அல்லவா?' என்று கேட்டார்.

அதற்குமேல் அவ் ஓவியக் கலைஞன், 'நான் அதிக நேரம் சோம்பியிருப்பதாகத் தாங்கள் சொல்லுகின்றீர்களே. அந்த நேரத்தில்தான் நான் அதிகமாக வேலை செய்கிறேன் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்' என்று பதில் கூறினான்.

கலைஞர்கள் 'வாழும் சோம்பர்கள்'. அவர்கள் சோம்பியிருப்பது போலத் தோன்றும் போதே உள்ளொளி பெற்று, கலைப்படைப்பைச் செய்து கொண்டிருப்பவர்கள். அத்தகைய அவ் ஓவியக் கலைஞன்தான் இத்தாலியப் பெருங் கலைஞரான லியோனார்டோ-டா-வின்சி ஆவார்.

## விளையாட்டு முற்றம்

### ஒலிம்பிக் 2000

பிரான்சில் நடைபெற்று முடிந்த பிரமாண்டமான உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி நினைவுகள் தற்போதும் உங்கள் மனங்களில் நிலைத்திருக்கும் என எண்ணுகிறோம். இந்தவேளையில் அடுத்து நடைபெறப்போகின்ற பிரமாண்டமான உலக விளையாட்டைப் பற்றி எண்ணிப்பார்ப்போமா?

உலக நாடுகள் அனைத்தும் பங்குகொள்ளும் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 2000-ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் தலைநகரமான சிட்னியில் நடைபெறவுள்ளது. 'சிட்னி-2000' என அழைக்கப்படும் இப்போட்டிகளுக்கான ஒழுங்குகள் இப்பொழுதே நடைபெற்று வருகின்றன. ஒலிம்பிக் போட்டிகளுக்காக விசேட ஒலிம்பிக் கிராமம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. ஒலிம்பிக் 2000 போட்டிகளை நடாத்துவதற்காக பலநாடுகள் போட்டியிட்டு இறுதியில் அவுஸ்திரேலியா தெரிவு செய்யப்பட்டுள்ளதால் அந்நாட்டு மக்கள் மிகவும் பெருமிதத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப்படுகின்றனர்.

இந்த ஒலிம்பிக் போட்டிகளுக்காக புதிதாக 50,000 இற்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 28வது உலக ஒலிம்பிக் போட்டியை நாங்களும் ஆவலுடன் எதிர்பார்ப்போமாக.

# இருத்தலை வெளிப்படுத்துங்கள்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரிடமும் புதையல் போன்ற வற்றாத செல்வம் இருக்கிறது. இப்புதையல் அவர்களுக்குள்ளேயே இருக்கிறது என்பதை புரிந்து கொண்டவர்கள் வாழ்நாள் முழுமையும் மகிழ்ச்சியும் குறைவில்லா செல்வமும், பேரும், புகழும் பெற்று வாழ்கிறார்கள்.

தங்களுக்குள்ளே இருக்கின்ற இந்தப் புதையலைப்பற்றி அறிந்து கொள்ளாமலே பெரும்பாலான மனிதர்கள் வாழ்க்கையில் வறுமையும் - துன்பமும் நிறைந்து வாழ்கிறார்கள்.

பிச்சைக்காரர் ஒருவர் குளிரிலும், கொடும் பசியிலும் வாடி இறந்து விட்டாராம். அவரை அடக்கம் செய்யமுற்பட்டபோது அவர் அணிந்திருந்த கிழிந்து போன பழைய கோட்டுப் பையிலிருந்து விலைமதிக்க முடியாத வைரக்கல் ஒன்று கீழே விழுந்ததாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள கோடிக்கணக்கான செல்வத்தை ஈட்டித்தரும் மாபெரும் சக்தி தனக்குள்ளேயே இருந்தும் அதனை உணராமல் வெளியில் அலைந்து தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

> பலர் இதுவாக இருக்குமோ, அல்லது அதுவாக இருக்குமோ என்று பல்வேறு குழப்பத்தில் தங்களை உட்படுத்திக் கொண்டுள்ளார்கள். 'ஆழ்மனம் — கற்பனைக்கோபுரம் — குண்டலினி சக்தி — ராஜயோகம் — தியானம்' என்று பல பயிற்சிகளில் கலந்து கொண்டிருந்தாலும் அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த பாடில்லை.

இல்லாத இடம் தேடி, எங்கெங்கோ அலைகிறார் ஞானத் தங்கமே' என்ற பாடலுக்கு ஒப்பதனுள்ளே இருக்கின்ற சக்தியினை புரிந்து கொள்வதிலேயே இன்று பல்வேறு குழப்பங்கள். இதனை இப்படி செய்தால் அதனை சுலபமாக அடைந்து விடலாம் என்பது போன்ற குறுக்கு வழிகள் இன்று பரவலாக கற்பிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நம்பிக்கை வளர்க்கக்கூடிய பயிற்சிகள் தவறு என்று நான் சொல்ல மாட்டேன். நிச்சயமாக இதில் சில உண்மைகளும் இருக்கலாம். ஆனால் இத்தகு பயிற்சிகள் எல்லோருக்கும் பலனளிக்கவில்லையே! அது ஏன்? பல காலமாக என்னுள்ளே இடித்துக் கொண்டிருக்கிற கேள்வி இது!

இன்றைய உலக மாற்றங்களுக்குப் பின்னால் விஞ்ஞானிகளின் அற்புதமான கண்டு பிடிப்புகளே காரணமாக இருக்கின்றன என்பதை எவராலும் மறுக்க முடியாது. புதிய கண்டுபிடிப்புகளை இவ்வுலகிற்கு வழங்கிய அறிவியல் மேதைகள்: 'என்னால் முடியும்' என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்களா? அல்லது நம்பிக்கை வளர்க்கும் பயிற்சிகளில் பங்கெடுத்துக் கொண்டிருந்தார்களா?

இவர்களின் அரிய - பெரிய கண்டு பிடிப்புகளுக்கு உந்துதலாக - உறுதுணையாக இவை ஏதேனும் இருந்ததா?

தாமஸ் ஆல்வா எடிசன், கலீலியோ, நியூட்டன் போன்ற இன்னும் பல்வேறு அறிவியல் மேதைகளின் சுயசரிதையை புரட்டிப்பார்த்தால் இவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு உந்து சக்தியாக இருந்தது ஆர்வமும் விடாமுயற்சியும், சளைக்காத மனமும், அயராத உழைப்பும் மட்டுமே.

இவர்களுக்கு இதனை இப்படித்தான் செய்யவேண்டும் என்று வழிகாட்ட முன்னோடிகள் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றி பெற முடியும் எனும் நம்பிக்கை இருந்ததாகவும் தெரியவில்லை. இவர்களிடம் இருந்ததெல்லாம் சாதிக்க வேண்டும் எனும் உணர்வின் உந்துதலும், தொடர் முயற்சிகளும் மட்டுமே.

மாபெரும் கண்டுபிடிப்புகளுக்கு சொந்தமானவர்கள் தங்களின் கண்டுபிடிப்புகள் எதிர்பாராத நேரத்தில் திடீரென பதில் கிடைத்ததாக கூறியிருக்கின்றனர்.

மின் விளக்கினை கண்டு பிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் ஏறத்தாழ 999 தடவைகளுக்கு மேல் முயற்சித்து எதிர்பாராத விதமாக தமக்கு விடை கிடைத்ததாகக் கூறி இருக்கிறார். இவ்வாறே ஆய்வாளர்கள் அனைவருமே கூறி இருக்கின்றனர். இவர்களிடம் இருந்ததெல்லாம் இடையறாத முயற்சி என்பது மட்டும் புலனாகிறது.

தோல்வி மேல் தோல்வி ஏற்படினும் அதனை ஒரு பொருட்டாக கருதாமல் கருமமே கண்ணாய் இருந்திருக்கிறார்கள் என்பது மிகத்தெளிவாக தெரிய வருகிறது. இங்கே வெற்றி பெற்று விடுவோம் என்கின்ற நம்பிக்கையை விட கண்டுபிடித்து விடவேண்டும் என்ற ஆர்வமே அதிகமாக ஆட்கொண்டிருந்தது.

ஆர்வத்தின் உந்துதலால் தோல்வியைக் கண்டு தளராமல் சளைக்காத மனம், விடாமுயற்சியோடு அயராது உழைத்தவர்களுக்கு எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கின்றன என்பதும் புலனாகிறது.

இத்தகைய எதிர்பாராத சம்பவங்களே அதிர்ஷ்டமாக கருதப்படுகிறது. இத்தகைய அதிர்ஷ்டங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்ல சராசரி மனிதர்களுக்கும் அயராது உழைக்கும் போது மட்டுமே கிட்டுகிறது என்றும் புலனாகிறது.

'மனம், உடல், ஜீவன்' ஆகிய மூன்றும் வேறெந்த உணர்வுகளுக்கும் இடம் கொடாமல் ஒரு குறிப்பிட்ட காரியத்தில் மட்டும் ஆழ்ந்திருக்கின்ற பொழுது ஏதோ ஒரு 'சக்தி' நம்மை அறியாமலேயே நமக்கு சாதகமாக இயங்குகிறது என்பது மட்டும் தெரிகிறது.

கடல் அலையில் சிக்கித் தவிக்கும் கப்பலை அதன் தலைவர் வழிநடத்திச் சென்று கரை சேர்ப்பது போல் ஆர்வமும் - விடாமுயற்சியும் உள்ள மனிதர்களுக்கு கப்பல் தலைவர் போன்று நமது நோக்கத்துக்கு உதவும் வகையில் புதிய வாய்ப்புக்களும், மனிதர்களும் வந்து சேருகிறார்கள்.

இத்தகைய உதவிகளை சுலபமாக பெற்றுவிட முடியும் என்று பயிற்சிகளில் பல்வேறு வழிமுறைகளில் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. என்னுடைய பார்வையில் இவ்வளவு சுலபமாக இந்த உதவி கிட்டும் என்பதில் மிகுந்த குழப்பமிருக்கிறது.

மனிதனுக்கு உதவுவதற்கு இந்த 'பிரபஞ்சம்' தயாராக இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் அந்த உதவியை மனிதன் வேண்டுதல்கள், தியானம், குண்டலினி சக்தி, கற்பனை கோபுரம், ராஜயோகம் என்று சொல்லி தான் இருக்குமிடத்திலிருந்தே சுலபமாகப் பெற்று விடலாம் என்று நினைப்பது இயற்கை நியதிக்கு புறம்பான ஒன்றாக நான் கருதுகிறேன்.

நான் குறிப்பிட்ட 'பிரபஞ்ச மூல'த்தின் இயக்கம், மனிதனின் மனம், உடல், ஜீவன் ஆகிய அனைத்தையும் ஒரே காரியத்தில் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும்போது மட்டுமே அதிர்ஷ்டமாக, வாய்ப்பாக, சந்தர்ப்பமாக, உதவிக்கரமாக அமைகிறது என்று நினைக்கிறேன்.

கோட்டுப் ஸ்பையில் விலைமதிக்க முடியாத வைரம் இருப்பது தெரியாமல் பிச்சைக்காரனாய் வாழ்வது போன்று நம்மவர்கள் தன்னுள்ளே இருக்கும் விலைமதிக்க முடியாத வைரங்களாகிய உண்மையான ஆர்வம், அயராத உழைப்பு, சளைக்காத மனம், விடாமுயற்சி ஆகிய ஆற்றலை வெளிப்படுத்தும் மனிதருக்கு மட்டுமே இவ்வுலகை ஆளும் 'பிரபஞ்ச சக்தி' உதவ வரும் எனும் உண்மை தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

## மனிதனின் மகத்தான சக்திகள்


இவர் கடும் குளிரிலும், பசியிலும் வாடிக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டு ஒரு கோடீஸ்வரர் 'பாவம் பிழைத்துப் போகட்டும்' என்று தன்னுடைய கோட்டை கொடுத்துள்ளார்.

பல கோடி மதிப்புள்ள வைரத்தை மறதியாக கோட்டு பைக்குள்ளெயே வைத்திருக்கின்றார். இந்த விபரம் புரியாமல் பிச்சைக்காரனாக அலைந்து திரிந்து போனான் என்று எங்கோ படித்தது என் நினைவுக்கு வருகிறது.

இது போலவே இவ்வுலகில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் இயற்கையினால் - இறைவனால் தங்களுக்கு

மனிதனுக்குள்ளே இருக்கின்ற அந்த 'மகத்தான சக்தி' எது என்பது பற்றி பல்வேறு நூல்கள், விளக்கங்கள், பயிற்சிகள், பட்டறைகள், சர்ச்சைகளும் இருப்பதை நான் உணர்ந்துள்ளேன். பலர் இதுவாக இருக்குமோ, அல்லது அதுவாக இருக்குமோ என்று பல்வேறு குழப்பத்தில் தங்களை உட்படுத்திக் கொண்டுள்ளார்கள். 'ஆழ்மனம் - கற்பனைக்கோபுரம் - குண்டலினி சக்தி - ராஜயோகம் - தியானம்' என்று பல பயிற்சிகளில் கலந்து கொண்டிருந்தாலும் அவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த பாடில்லை.

'இருக்கும் இடத்தை விட்டு



### தன்னம்பிக்கை பாலசுப்பிரமனியம்


**Radio Asia Canada**

24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு

**ஐரோப்பிய நாடுகளில்:**

Astra Satellite Video Channel 7 இல்
Audio Frequencey : 7.38 mhz
Video Carrier: 11.303 Ghz

**சிற்றலை வரிசை ஒலிபரப்பு:**

Gmt 20:00 -22:00 -15,245 Mhz
GMT 22:00 -24:00-11.960 Mhz
GMT 24:00 -02:00 -9.560 Mhz
GMT 02:00 -04:00 -9:855 Mhz

**அவுஸ்திரேலியா:** 24 மணிநேரம்

Stereo -173.6 Mhz

**தலைமையகத் தொடர்புகளுக்கு:**

**Radio Asia Canada**
680 Progress Avenue. Unit 1
Scarborough, Ontario, M 1H 3A5, Canada.
Tel: 416-289-1522 / Fax: 416-289-1840

# சிட்னியிலிருந்து வன்னிக்கு - 10

*அவுஸ்திரேலியாவில் தற்போது இருக்கும் திரு. பொன்னி வேந்தன் அவர்கள், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று அதன் பின் வன்னிக்கும் சென்றிருந்தார்.*

*அங்கு தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் ஒரு பயணக் கட்டுரையாக வடித்திருக்கிறார்.*

*இக் கட்டுரை தொடராக ஈழமுரசில் வெளிவருகின்றது.*

*— ஆர்.*

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எதையும் கேட்காதவனாய் என் பயணம் மல்லாவி துணுக்காய் வழியாக மாங்குளத்தைச் சென்றடைந்தது. மாங்குளத்திலிருந்து முருகண்டி செல்ல முடிந்தது. போகும் வழி அதாவது கண்டி வீதி வெறும் ஆபத்து நிறைந்ததாக இருந்தது. சிறீலங்கா இராணுவம் கனகராயன் குளம் பகுதிக்கு அண்மையிலும், அதாவது சுமார் மாங்குளத்திலிருந்து எட்டு பத்து மைல்கள் தொலைவில் மேலும் கிளிநொச்சியை அண்டிய பகுதிகளிலும் நிலைகொண்டிருந்தது. சன நடமாட்டம் இல்லாத பாதை. விடுதலை வீரர்கள் தம் பணிகளில் தம் சுயநலன்களையெல்லாம் மறந்து உற்சாகத்துடன் கொட்டும் மழையிலும் வீறுநடை போடுவதைப் பார்த்து மனம் பூரிப்படைந்தது. மறுகணம் எனை நினைத்து என் போன்ற கோழைகளை நினைத்து சுயநல கும்பல்களை சந்தர்ப்ப வசதிகளை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டேன். இவர்களுள் இடையிடையே அனாதையாய் விடப்பட்ட ஆடு மாடுகள் கூட்டம், சில பாதசாரிகள், சில சைக்கிள் வண்டிகள், சில வாகனங்களும் இவ் வழிகளில் இல்லாமல் இல்லை. மரணத்தை வென்ற வல்லவர்கள் இவர்கள்.

முருகண்டிப் பிள்ளையாரின் கற்பூர தீபம் எரிந்துகொண்டே இருந்தது. அதே முருகண்டி தேத்தண்ணிக்கடை கச்சான் கொட்டகை இரண்டு ஒரு லொறிகள் சில பொது மக்கள் மனதுக்குள் ஒரு மகிழ்ச்சி. முருகண்டியர்களை இந்த ஜெயசிக்குறுவால் ஒன்றும் செய்ய முடியவில்லையே. எனக்குள் சிரித்தவாறு என் பயணம் தொடர்கிறது.

கண்டிவீதி வழியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம். என் நெஞ்சு ஒரு தரம் நெறுக்கென்று இருந்தது. எப்படியெல்லாம் கனவு கண்டோம். பீரங்கித் தாக்குதல்களாலும், விமானத் தாக்குதல்களாலும் அழிக்கப்பட்டு எந்த ஒரு கட்டடமும் நிமிர்ந்து நிற்பதைச் சகிக்க முடியாதவர்கள் குண்டுகளைப் பொழிந்து நசுக்கி சின்னாபின்னமாக்கி எடுக்கலாம். பற்றைகள் முளைக்கவிட்டு அழகு பார்த்திருக்கிறார்கள். அறிவுச் செடிகள் முளைத்து மலரவேண்டிய அந்தப் புனித அறிவுக்கூடம் எருக்கலம் பற்றைகளையும் சுத்தாளைகளையும் முளைக்கவைத்து சூனியப்படுத்தியிருக்கிறார்கள் மகாபாவிகள். என்ன கொடுமை, என்ன அரக்கத்தனம்.

கண்டி வீதியில் இருந்து விசுவமடு வீதி வழியாக திரும்பிய என் பயணம் பல வயல் வழிகளையும் நிறைந்து வழியும் விசுவமடு குளத்தின் அணைக்கட்டுகளையும் தாண்டி முள்ளியவளை நோக்கி தொடர்கிறது. நண்பர் வாகனத்தை வேகமாக ஓட்டியது பயத்தைத் தந்தாலும் நிதானமாக ஓட்டியது ஆறுதலாக இருந்தது. விசுவமடு மிகவும் பிரபலியம் வாய்ந்த குடியேற்றத் திட்டப் பகுதி. பாரிய அணைக்கட்டுக்கொண்டு கட்டப்பட்ட குளம். பல ஆயிரக் கணக்கான நிலப்பரப்புகளுக்கு நீர் வழங்கும் வாவியது. இலட்சக் கணக்கான தமிழ் மக்களுக்கு வயிற்றுப் பசி தீர்த்த அமுத சுரபி அது. தொடர்ந்து பெய்த அடை மழையால் நிறைந்து வழியும் காட்சி கண்கொள்ளாக் காட்சிகளாக மனம் நிறைந்த ஒன்றாக இருந்தது. அணைக்கட்டு வழியாக பயணம் செய்தபோது ஒரு புறம் நிறைந்து வழியும் தண்ணீர், மறுபுறம் பயிர் செய் நிலங்கள். உழவர் கூட்டம், பறந்து செல்லும் பறவைகள். வானம்பாடிகள் ஓடு மீன் ஓடி உறுமீன்களாக ஒற்றைக் காலில் காத்து நிற்கும் கொக்கு பழைய நினைவுகளை ஒரு தரம் நீட்டிவிட்டன. மேலும் பள்ளிப் பராயத்தில் படிக்கும் போது ஐரோப்பிய சிறுவன் ஒருவன் அவன் பெயர் கான்சு என்று நினைக்கின்றேன். ஒரு நாள் தன் கடமைகளை முடித்து விட்டு மாலை நேரம் வீடு திரும்பும்போது அதிக மழை பெய்ததால் அந்த ஊரில் இருந்த ஒரு வாவி நிரம்பிய காரணத்தினால் அணைக்கட்டின் ஒரு மெதுமையான பகுதியில் தண்ணீர் அலைத்தாக்குதலினாலும் அமுக்கத்தினாலும் ஒரு சிறு உடைவு ஏற்படும் நிலையில் காணப்பட்டது.

> *சந்தித்து கலந்துரையாடிய நிகழ்வுகளில் சிலவற்றை மறக்கவே முடியவில்லை. எமது நிரந்தர அமைதிக்காக நிம்மதிக்காக தற்காலிகமாக இவைகளைத் தாங்கிக்கொள்வது தவிர்க்க முடியாது என்ற ஆழமான அர்த்தத்தில் அவர்கள் பொதுவாகப் பேசியது மகிழ்ச்சியாக இருந்தது. பெருமைப்பட்டுக்கொள்கிறேன்.*

மேலும் இத் தாக்குதல்களினால் அதில் பெரிய வெடிப்பு ஏற்பட்டு அந்த ஊர் மக்களையும், விளை நிலங்களையும் அழித்துவிடும் அபாயம் காணப்பட்டது. அச் சிறுவன் இந்த அனர்த்தம் நடைபெறக்கூடாது என்று உறுதியாய் நினைத்து மாலை நேரம் ஆகி விட்டதால் யாரையும் உதவிக்கு அழைக்க முடியாத நிலையில் பொது நன்மை கருதி தன் உடம்மை அந்த உடைவின் குறுக்காக வைத்து சரிப்படுத்திக் கொண்டான். அதிகாலை மட்டும் யாராவது வரும் மட்டும் அவ் வாவி உடைக்காதவாறு அதைப் பாதுகாக்கவேண்டும் என்ற தேசப்பற்று, நாட்டுப்பற்று சிறியவன் வீடுவந்து சேராமை கண்டு தாய் தந்தையர் உறவினர் உட்பட அவனைத்தேடி கவலையுடன் சென்றபோது கான்சு அணைக்கட்டிற்கு அரணாகப் படுத்திருப்பது கண்டு ஆச்சரியப்பட்டு அவனை வினாவ அவன் அணையுடையும் ஆபத்தைக் காட்டி அதனால் ஏற்படும் விளைவுகளைக் கூறி நிற்க பெற்றோர் ஊரவர் உறவினர் அவனின் தேச பக்தியை சுயநலம் அற்ற தொண்டைப் பாராட்டினர். இது பாலபோதினியில் பாடமாக வந்தது.

அன்று நம் ஆசான்கள் நமக்கு போதித்தார்கள். எமக்கு அதைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு ஒன்றுமே இருக்கவில்லை. ஆனால் ஒரு இரவு மட்டுமல்ல; ஒருநாள் மட்டுமல்ல- கிழமைகளாக, மாதங்களாக, ஏன் வருடங்களாக எமது நாடு காக்கும் மன்னர்கள் நாம் பயணம் செய்த அந்த விசுவமடு அணைக் கட்டை அலைகளாலும் அன்னியர்களாலும் உடைந்துவிடாதபடி தேச பக்தியோடு, கடமை உணர்வோடு காத்திருக்கிறார்களே!

யாருக்கு இது புரியப் போகிறது. யார் இதை எழுதப் போகிறார்கள். யார் போற்றப் போகிறார்கள். எந்தப் போதினி இதனைப் பிரசுரிக்கப் போகிறது என்று மனம் நொந்தபடி பயணம் தொடர்கிறது. இடையிடையே விவசாய முயற்சிகள். ஏற்கனவே பயிரிடப்பட்ட வயல் வெளிகள். சில உடைந்து சிதைந்த கட்டடங்கள். மக்கள் நடமாட்டம். ஆடு மாடுகள் கூட்டம் மேலும் முள்ளியவளைப் பகுதிகளை அண்மிக்க, சனச் சந்தடி மிகவும் அதிகரித்துக் கொண்டு போவதைக் காணமுடிகிறது. மல்லாவிப் பகுதியுடன் ஒப்பிடும்போது இங்கு அதிக மக்கள் வாழ்வதாகவே காண முடிகின்றது. சரியாகக் கணிக்கப்பட முடியாததல்லவா?

தண்ணீரூற்று, முள்ளியவளையை குட்டி யாழ்ப்பாணம் என்று சிலர் கூறுவது வழக்கம். தென்னஞ்சோலை, பனைமரம், பாரிய விருட்சங்கள், கிடுகுவேலி, ஓட்டு வீடுகள், சின்னச்சின்ன ஒழுங்கைகள், மணற்தரை, படித்தவர்கள், அதிக பண்பாளர்கள், கடவுள் வழிபாடு உள்ளவர்கள். ஆம் குட்டி யாழ்ப்பாணம் தான். சரி தான் என்று பழைய

> **ஒரு இரவு மட்டுமல்ல;**
> **ஒருநாள் மட்டுமல்ல—**
> **கிழமைகளாக, மாதங்களாக,**
> **ஏன் வருடங்களாக எமது**
> **நாடு காக்கும் மன்னர்கள்**
> **நாம் பயணம் செய்த அந்த**
> **விசுவமடு அணைக் கட்டை**
> **அலைகளாலும்**
> **அன்னியர்களாலும்**
> **உடைந்துவிடாதபடி தேச**
> **பக்தியோடு, கடமை**
> **உணர்வோடு**
> **காத்திருக்கிறார்களே!**

நினைவுகளை ஒரு தரம் இறை மீட்டுக்கொள்கிறேன். இனம் தெரியாத மகிழ்ச்சி. பல மணி நேரம் பயணம் ஒருவாறு முடிவிற்குவர என்னுடன் பிறப்புக்களை நண்பர்களை சந்திக்கும் முயற்சியில் ஈடுபடுகிறேன்.

யாரையெல்லாம் சந்தித்துப் பேச முடியுமோ சந்தித்துப்பேசி பல்வேறு விஷயங்களைப் பற்றி கலந்துரையாட நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தண்ணீரூற்று, முள்ளியவளைப் பிரயாணமும் அதன் அனுபவங்களும் தனித்துவமானவை. சுகமானவை. பல்வேறு நிலைகளிலும் மட்டங்களிலும் உள்ளவர்களுடன் சந்தித்துப்பேசி கலந்துரையாடிய அனுபவம் வன்னிப் பிரதேசத்தின் முக்கிய பாகங்களில் கால் பதித்து நடந்து திரிந்த அனுபவங்கள் பல கலந்துரையாடல்கள் மனதில் மனநிலைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தியதாக ஒரு உணர்வு.

சந்தித்து கலந்துரையாடிய நிகழ்வுகளில் சிலவற்றை மறக்கவே முடியவில்லை. அனேகர் மத்தியில் ஒரு பொதுவான உணர்வு மேலோங்கியிருப்பது ஒரு நல்ல சைகையாக இருந்தது. எமது நிரந்தர அமைதிக்காக நிம்மதிக்காக தற்காலிகமாக இவைகளைத் தாங்கிக்கொள்வது தவிர்க்க முடியாது என்ற ஆழமான அர்த்தத்தில் அவர்கள் பொதுவாகப் பேசியது மகிழ்ச்சியாக இருந்தது. பெருமைப்பட்டுக்கொள்கிறேன்.

(பயணம் தொடரும்)

திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா
இசை மழையில் நனைந்து மகிழ
ஐரோப்பா புகழ்
பாரிஸ்
ஈழநிலா
தொடர்புகட்கு: இயக்குநர் S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை
60, Rue Louis Blanc, 75010 Paris
Tel & Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்
தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
20 Rue Labat, 75018 Paris
M°: Marcadet Poissonniers
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
Pub




# உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம்...?

ஏறச்சொன்னா முடவனுக்கு கோபம். இறங்கச்சொன்னா எருதுக்கு கோபம். உள்ளதைச் சொன்னா உரியவைக்குக் கோபம். அதுக்காக சொல்லாமல் இருக்க முடியுமோ? சொல்ல வேண்டியதை சொல்லித்தானே ஆகவேணும்... முன்னூறு நானூறு வருசமா போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எண்டு எங்கட மண்ணை மாறிமாறி அடிமைப்படுத்தி, ஆண்டு அனுபவிச்சுப் போட்டு வந்திட்டினம். ஒவ்வொருத்தரும் ஆளேக்கை சனங்களிட்டை தங்கட மதம், கலாச்சாரம், மொழி எண்டு கன விசயங்களை அழிஞ்சொழிஞ்சு போகாம கட்டிக்காப்பத்துற மாதிரித்தான் பரப்பி விட்டுட்டு வந்தவை. அந்த நேரத்திலை மதம் மாறாதவை வாழை இலையிலை சாப்பிட்டது தெரிஞ்சா பிரச்சினையாகும் எண்டு பயந்து, சாப்பிட்டாப்பிறகு இலையை மடிச்சு வீட்டு கூரை இறப்புக்கை செருகிவைக்கிறவை எண்டு கேள்விப்பட்டதோட, கதையளிலை படிச்சும் இருக்கிறம். ஆனா அவங்கள் போயும் இப்ப ஐம்பது வருசத்துக்கு மேலையாகுது. இப்பவும் சில இடங்களிலை விரதத்திலை இதுவும் ஒரு சம்பிரதாயம் எண்டு நினைச்சு இறப்புக்கை செருகிறது தொடந்து கொண்டுதான் இருக்குது. உப்பிடி கனக்க... அதுகளைப் பற்றி சொல்லப் போனா இன்னும் நிறைய சொல்லிக் கொண்டு போகலாம். அதுகளை விட்டுட்டு விசயத்துக்கு வருவம்.

நாங்கள் இப்ப கொஞ்சக் காலம் தான் நாடுவிட்டு நாடு, கண்டம்விட்டு கண்டம் எண்டு பாயத் தொடங்கினனாங்கள். ஆனா, வெள்ளையன் வெளியேறின கையோடையே எங்கட சில பெருங்குடியள் பாயத் தொடங்கிவிட்டினம். ஆங்கிலத்திலை கொண்டிருந்த விசுவாசத்தினாலையோ என்னமோ மெல்ல மெல்ல குடும்பமா ஆங்கில நாடுகளாப் பாத்துத்தான் விமானமேறினவை. கனடாவிலையும் குடியேறத் தொடங்கி மூண்டுநாலு தலைமுறையாகுது. பிள்ளையள், பேரப்பிள்ளையள், பூட்டப் பிள்ளையள், இனம்சனமெண்டு நிரந்தரக் குடியளா தலைமுறை தலைமுறையா அங்கை வாழ்ந்து கொண்டு வருகினம். எத்தனை தலைமுறை எத்தனை நாடு, மொழி மாறினாலும் கலாச்சாரங்களை கட்டிக்காப்பத்தி கொண்டு வாறம் எண்டுதான் சொல்லுறம். ஆனா எத்தனையோ நல்ல விசயங்கள் இருக்க, இன்னும் நாங்கள் பன்னாடையள் மாதிரி நல்லதுகளை வடிய விட்டுட்டு தேவையில்லாத விசயங்களைத் தானே பிடிச்சு வைச்சுக் கொண்டு வாறம். அதுவும் கலியாண விசயங்களிலை எழுதாத சட்டவிதியள் நிறைய வளர்த்து வைச்சிருக்கிறம் பாருங்கோ. நாய்க்கு எங்கை அடிச்சாலும் காலைத் தூக்கிற மாதிரி நாங்கள் எங்கை போனாலும் அந்த விதியளை 'மட்டும்' மீறவே மாட்டம் எண்டுதானே நிக்கிறம்.

காதலிச்சு செய்யிறதை விட தாங்கள் பேசுறதைத்தான் பிள்ளையள் செய்யவேணும். அதுதான் பெத்தவைக்குப் பெருமையெண்டு இப்பவும் சில தாய்... தேப்பன் நினைச்சுக் கொண்டிருக்குதுகள். பேசிச் செய்துவைச்சென்ன, விரும்பிச் செய்தென்ன இப்ப

மைக்கல் ஜக்சன் மாதிரி நிறத்தை மாத்தினாலும் முகமெல்லோ அச்சொட்டா அடையாளம் காட்டிக் குடுக்குது. இதை எங்கை கொண்ட மோதிறது....? படிச்ச படிப்புக்கு பேருக்கு பின்னாலை எம்.ஏ., பீ.ஏ., எண்டு பெருமையா போட்டுக்கொண்டா மட்டும் காணாது. அதுக்கேற்ற மாதிரி எப்பனெண்டாலும் நடக்கப் பழகுறதும் நல்லதுங்கோ.

கட்டினாப்பிறகு 'ஓடுற ஓட்டங்களைப்' பாக்க எப்பிடிச் செய்தா என்னெண்டு தான் கிடக்குது. இதுகளை பாத்துத் தான் இப்ப தாய்தேப்பன் வயசு வர முதலே அவசர அவசரமா கட்டி வைச்சு விடுகினம். அதுக்குப் பிறகு ஓடினாலும் நடந்தாலும் அவையளுக்கு பழி வராது கண்டியளோ. இதுகளாலைதான் இங்கை எங்கட பொம்பிளைப் பிள்ளையளோட திருமண வயசே பதினேழா இறங்கியிருக்குது! நடக்கிற நடப்புக்களைப் பாக்க இது இன்னும் குறையலாம் போலதான் கிடக்குது. சின்ன வயசிலை கட்டி வைக்கிறது இந்தியாவிலை சில மாநிலங்களிலை இப்பவும் நடக்கிறதா கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறம். ஆனா அடுத்த நூற்றாண்டிலை எங்கட புலம்பெயர் நாடுகளிலை உப்பிடியான நிலைமையள் உருவானாலும் ஆச்சரியப் படுறதுக்கில்லை. எல்லாம் பெத்தவைக்கு ஒரு தற்காப்புத்தான்!

சரி இப்பிடியொரு நிலமை இருக்க, இதுக்கு எதிர்மாறா கனடாவிலை கொஞ்சப் பொம்பிளைப் பிள்ளையள் வயசு வந்தும் இன்னும் கட்டிக் கொள்ள முடியாமல் இருக்குதுகள். படிச்ச படிப்புக்கும் (மொழியைப் படிச்சாலே அது பட்டப்படிப்பு படிச்ச மாதிரித்தான்) வைச்சிருக்கிற பணத்துக்கும் ஏத்த மாதிரி வரன் தேடுறதெண்டா சும்மாவே? அதால நிறைய புறோக்கர்மார் இவையளுக்கு மாப்பிள்ளையள் தேட வெளிக்கிட்டிருக்கினம். அவையளிட்டை குறிப்புக் குடுக்கேக்கை வழமையா பாக்கச் சொல்லுற பொருத்தங்களோட, இப்ப எந்த நாடெண்டும் குறிப்பிட்டு சொல்லி விடுகினமாம். இவையளின்ரை தகுதியளுக்கு ஏற்றமாதிரி பாக்கிறதெண்டா இலண்டன், அவுஷ்ரேலியா நாட்டிலை வாழுறவைதானாம் சரிவரும்!

தமிழர்தான் ஆனா தமிழ் தெரியாத ஆங்கிலம் தெரிஞ்சவையாக இருக்க வேணும். அதுசரி தமிழ் தெரியாதவை எப்பிடி தமிழரா இருக்க முடியும் எண்டு றியளாக்கும்? ஏன் பிரெஞ்சு தெரியாத எங்கட ஆக்கள் பிரெஞ்சுக்காரரா இருக்கேக்கை இது முடியாதே? சரி இப்பிடியொரு பொம்பிளைக்குத்தான், இப்ப கிட்டடியிலை மாப்பிளை தேட புறோக்கரிட்டை குறிப்புக் கொடுத்திருக்கினம். அவவின்ரை தேப்பனும் தமிழிலை ஒரு பெரிய 'லெக்சரர்' எண்டு வையுங்கோவன். அவர்ரை மகளுக்குத்தான் இப்பிடியொரு கண்டிசனோட மாப்பிள்ளை தேடுகிறார். வெள்ளையன் வெளியேறி ஆண்டுகள் எத்தனை ஆகியென்ன, எங்கடை வாலாட்டுற விசுவரசம் மட்டும் இன்னும் விட்டுப்போகேலை கண்டியளோ. மைக்கல் ஜக்சன் மாதிரி நிறத்தை மாத்தினாலும் முகமெல்லோ அச்சொட்டா அடையாளம் காட்டிக் குடுக்குது. இதை எங்கை கொண்ட மோதிறது....? படிச்ச படிப்புக்கு பேருக்கு பின்னாலை எம்.ஏ., பீ.ஏ., எண்டு பெருமையா போட்டுக்கொண்டா மட்டும் காணாது. அதுக்கேற்ற மாதிரி எப்பனெண்டாலும் நடக்கப் பழகுறதும் நல்லதுங்கோ.

சரி இங்கை, யூரோப்புக்குள்ளையும் பெரும்பாலும் பொம்பிளைப் பிள்ளையளை விட பெடியள்தானே எக்கச்சக்கமா இருக்கிறாங்கள். அதுகளுக்கும் வயசும் ஏறிக்கொண்டு போகுது... பெத்தவைக்கு இவையளைப்பற்றி சிந்திக்க நேரமுமில்லை, சிந்திச்சாலும் தங்கட வருமானங்கள் பாதிக்குமோ எண்ட கவலை ஒரு பக்கம். சகோதரங்கள் இங்கினை இருந்தாலும், இவையளுக்கு கட்டிக்குடுத்தா தங்கட சமறியிலை விழப்போற துண்டை எப்பிடி சமாளிக்கிறதெண்ட பிரச்சினை அவையளுக்கு. பெடியளும் வாய்விட்டு கேக்க முடியாம ஆர் எப்ப கேப்பினம் தலையாட்டலாம் எண்டு பாத்துக் கொண்டிருக்கிறாங்கள். இப்பிடி எதிர்பாத்துக் கொண்டிருக்கிறதை விட பேசாம இலண்டன், அவுஸ்ரேலியா, கனடா எண்டு ஆங்கில நாடுகளா பாத்துப் போய் அந்த நாட்டு மொழியை எப்பன் படிச்சா, அவங்களைத் தேடியும் புறோக்கர்மார் வரலாம். நாட்டிலை இருந்து பேசி வந்தாலும் இந்தியா, சிங்கப்பூர், பாங்கொக் எண்டு அலையத்தானே வேணும். அதைவிட இது சுகம் போல தான் இருக்குது. எங்களை ஆண்ட மூதாதையரின்ரை மொழியைப் படிச்சதும் ஆகுதெல்லோ?

வேண்டாம்..... நான் எதாவது சொல்லப்போய் பெடியள் நாடுவிட்டு நாடு பாய.... எனக்கேன் சோலியை ஆளை விடுங்கோ சாமி...

**அருமைத்தம்பி**

10வது ஆண்டில் காலடிபதிக்கும்

இமாலயாவின்

தொடரும் சேவையில்.... மற்றுமோர் அறிமுகம்

100 இடியப்பம் 100 பிராங்குகள் மட்டுமே

உங்கள் இல்லங்களையும்; உங்கள் தொழிலகங்களையும் நோக்கிய எமது....

கடுகதி பார்சல் சேவை

பிரியாணி ❀ கொத்துறொட்டி ❀ இடியப்பப்பிரியாணி ❀ தண்டூரி வகைகள் ❀ நாண் ❀ சீஸ்நாண் ❀ சப்பாத்தி ❀ சமூசா ❀ றோள்ஸ் ❀ சோறு - கறி

இவற்றை உங்களின் இல்லங்களில் இருந்தபடியே உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து உண்டு மகிழ்ந்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி: 01 42 06 03 50 / 01 42 03 06 51

றெஸ்ரோறன் இமாலயா

9, Rue Jacques Louvel Tessier, 75010 Paris (M°: Goncourt)

Pub

சாந்தினி

உணவகம்

குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

14, Rue Perdonnet, 75010 Paris.

Métro: La chappelle / Gare du Nord

Tel: 01 42 09 37 99

காலை – 9.00 மணி முதல் இரவு – 11.30 மணிவரை

உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு

காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு

மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.

இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு

மகிழ்ந்திட நாடவேண்டியது


சாந்தினி உணவகம்

Pub

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது
ஜவ்னா இறைச்சிக்கடை

# ஜவ்னா இறைச்சிக்கடை

ஆடு, மாடு, கோழி
இறைச்சி
வகைகளையும்,
தினமும் உயிர்க்கோழி
வகைகளையும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்



திங்கட்கிழமைகளில் சபரியப்பன் மளிகை
நிறுவனத்தில் எல்லா இறைச்சி
வகைகளையும் ஓடர் செய்துகொள்ளலாம்

## Jaffna Boucherie

70, Rue Louis Blanc, 75010 Paris. M°: la Chapelle
Tel: 01 40 35 46 47

விசேட கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவுகள்

Pub



# உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்புச் சேவை

(கிருஷ்ணபிள்ளை மாயவன்)

உங்கள் சகல மொழிபெயர்ப்புத் தேவைகள், பிரெஞ்சு நிர்வாக – நீதிமன்றத் தேவைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றுக்கான சட்ட ஆலோசனைகளுக்கு கடந்த 14 ஆண்டுகளாக அரசாங்க அங்கீகாரம் பெற்று பாரிஸ் நகரில் (பாரிஸ்-18 - மெத்ரோ மார்க்கடே புவசொனியேயில்) சேவையாற்றி வரும் நாம் எமது அலுவலகத்தை தற்போது புதிய முகவரிக்கு இடமாற்றம் செய்துள்ளோம்

எமது மொழிபெயர்ப்புத் தேவைகள் சகல நீதி – நிர்வாக அலுவலகங்களினாலும் வெளிநாட்டுத் தூதரகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படும்

புதிய முகவரி:
39, Bld. de la Chapelle, 75010 Paris.
(Mo: La Chapelle / Gare du Nord)
Tel / Fax: 01 40 34 53 41 - Port: 06 14 89 68 07
(எம்.ஜி.ஆர். வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தினுள்ளே, ஈழநாடு, தமிழாலயம் நிறுவனங்களுக்கு அருகாமையில்)



சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)




இந்தியா 42 நிமிடம்
பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை

| | |
|---|---|
| இந்தியா | 45 நிமிடம் |
| கனடா | 120 நிமிடம் |
| தாய்லாந்து | 28 நிமிடம் |
| ஹொங்கொங் | 62 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் |
| சுவிஸ் | 100 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |
| துனிசியா | 65 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 120 நிமிடம் |
| அமெரிக்கா | 120 நிமிடம் |
| ஜேர்மனி | 100 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 40 நிமிடம் |
| அல்ஜீரியா | 65 நிமிடம் |
| மொரோக் | 65 நிமிடம் |
| பெல்ஜியம் | 100 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 80 நிமிடம் | |

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

## GNANAM Telecom Center

195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.
Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14
M°: La Chapelle / Gare du Nord

சகல நாடுகளுக்குரிய
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

Pub

# விமான நிலைய ஊழியர்களின் அதிசயம்

கூவானா விமான நிலையத்தில் DC 8 என்ற விமானம் பிரதான விமான ஓடுபாதையில் (Runway) பிரயாணிகளை ஏற்றத் தயாராக நிறுத்தப்பட்டிருந்தது. விமானத்தின் பின்புறமாக இரண்டு வாலிபர்கள் சட்டவிரோதமாக மறைதிருந்தனர். பிரயாணிகள் விமானத்தின் உள்ளே ஏறிக்கொண்டிருந்தனர். மறைந்திருந்த இரு வாலிபர்களும் ஓடிச்சென்று சில்லுகள் வழியாக ஏறிச் சென்று விமானத்தின் சில்லின் மேற்பகுதியில் அமர்ந்து ஒளித்துக் கொண்டனர்.

கியூபா நாட்டு Fidel Castro's Communist Regime என்ற குழுவிலிருந்து தப்பியோடிய றெமிறெஸ் (Ramirez), யோர்ஜ் பிளன்கோ (George Blanco) ஆகிய இருவருமே இந்த விமானத்தில் ஒளித்துப் பிரயாணம் செய்தவர்களாவர். இவர்கள் பிரயாணம் செய்கின்ற இந்த இபேரியன் விமானசேவை (Iberian Airways) விமானமான DC 8 ஸ்பெயினின் தலைநகரான மட்றிட்டிற்கு பிரயாணம் செய்து கொண்டிருந்தது.

அந்த இருவரும் எந்தவிதமான பொருட்களையும் தங்களுடன் கொண்டு வரவில்லை. கனம் குறைந்த மெல்லிய துணியில் காற்சட்டையும், கையில்லாத சேட்டும் அணிந்திருந்தனர். றெமிறெஸ் குளிர் தாங்கமுடியாமல் விமானத்தின் கரைப் பகுதியை இறுக்கிப் பிடித்துக்கொண்டு 'இன்னும் எவ்வளவு நேரம் செல்லுமோ தெரியாது' என்று மனதில் நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஜோர்ஜ் தனது முதலாவது விமானப் பயணத்தை ரசித்துக்கொண்டு தனக்கு சௌகரியமான ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

விமானம் பறக்கும்போது சில்லுகள் உள்ளே இழுக்கப்படும். திரும்பவும் விமானம் விமான நிலையத்தில் இறங்கும்போது சில்லுகள் மெதுவாக வெளியே வரும். றெமிறெஸ் தனது இருக்கும் இடத்தை வசதியாக்க உள்ளடங்கிய சில்லில் அமர்ந்தபோது, உடனடியாக விமானிக்கு அபாயகரமான சம்பவம் நடந்ததாக 'விளக்கு' வெளிச்சம் காட்டியது. உடனே விமானி தரையிறக்கும் கருவியை கீழ் இறக்கிய போது, அங்கு சில்லில் அமர்ந்திருந்த றெமிறேஸ் உடனே கீழே விழுந்து இறந்துவிட்டார். திரும்பவும் ஒரு தடவை தரையிறக்கும் கருவியை (Landing gear) ஐ கீழே இறங்க வைத்த போது சில்லில் யாரும் இல்லாததால் அபாயகரமான வெளிச்சம் நின்றுவிட்டது. விமானி நிம்மதியாக விமானத்தை ஓட்டிச் சென்றார்.

றெமிஸ்ஸின் பயணம் ஒரு கனவு போல் தோன்றியது. தனது சினேகிதனைக் காப்பாற்ற முடியவில்லையென்ற கவலையினால் ஜோர்ஸ் வேதனைப்பட்டார். அந்தநேரம் விமானம் 30,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. தாங்க முடியாத குளிருடன், சுவாசிக்க முடியாத நெருக்கடியினால் ஜோர்ஜ் மயக்கமடைந்தார். 4500 மைல் தூரம் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது வெப்பநிலை -40 C ஆக இருந்தது. சுவாசிக்க போதிய ஒக்சிசன் இல்லை. ஜோர்ஜ் மிகவும் ஆரோக்கியமுள்ளவராகையால் மயக்கமடைந்தபோதும் உடல்நிலை சீராக இருந்தது. விமானம் மட்றிட் விமான நிலையத்தில் இறங்குவதற்கு சில்லுகள் வெளியேறும் போது ஜோர்ஜ் உடனே கீழே விழுந்தார்.

அங்கு விமான நிலையத்தில் தொழில் பார்க்கும் எல்லா ஊழியர்களும் அதிசயமடைந்ததுடன், உடனடியாக ஜோர்ஜ்சை வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஜோர்ஜ் மயக்கத்திலிருந்து தெளிவடைந்தார்.

அவர்கள் இருவரும் செய்த தவறினால் ஒருவருக்கு மரணமும், மற்றவருக்கு தண்டனையும் கிடைத்தது.

**வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் தவறுகளும்**

**— கவிதா —**

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

# மண்வாசனை

வீட்டு வாசலில் நின்ற மனைவி விடாமல் பார்வையினால் துளைத்துக்கொண்டிருந்தாள். கடைசியில் அவள் வெற்றியும் கண்டுவிட்டாள்.

நாற்பது வயதை எட்டியும் பார்க்காத நான், குடை பிடித்துக்கொண்டு சைக்கிளில் பயணப்பட்டேன்.

தெருவில் சன நடமாட்டம் இல்லை. நல்லதற்குத்தானோ. சந்தியில்தான் தேத்தண்ணீர்கடை. வாசலில் நாலைந்துபேர் என்னையே பார்த்துச் சிரிப்பதுபோல இருந்தது. ஒருவன் பெரிதாகச் சிரித்துவிட்டு என்னவோ சொன்னதுபோலவும் தெரிந்தது.

அவர்கள் என்ன கதைத்தார்களோ? எதற்காகச் சிரித்தார்களோ? அதை ஏன் தூக்கி என் தலையில் போடவேண்டும். பிரதான தெருவுக்கு சைக்கிள் வந்தது.

நம்பமுடியாத புதினமாக வெய்யிலுக்கு குடையுடன் போவது இருந்தது. ஏதோ ஒரு மாயத்திரை பிடித்துக்கொண்டு போவதுபோல.

என்னைக் கடந்து போன மோட்டார் சைக்கிள் ஒன்று தன் வேகத்தைக் குறைத்தது. 'என்ன மச்சான்' என்றான் அதில் வந்த கந்தசாமி.

பதில் சிரிப்புத்தான்.

'என்ன மழையே பெய்யுது' என்ற அவன் மீண்டும் சிரிப்பு.

'குடையோடு போக நான் ஒரு அம்மான் போறார் என்று நினைச்சன். பிறகுதான் உன்னைக் கண்டன். என்ன விஷேசம்.'

'தெரியாதே வெய்யில்'

'ஓமடாப்பா... சரியான வெய்யில்தான் வரட்டே' என்றான் அவன். உண்மையைச் சொல்லியிருக்கமாட்டான்.

'கட்டாயம் நாளைக்கு இவன் ஒவ்பீசில சொல்லிச் சிரிப்பான் என்ற யோசனையும் சட்டென்று அப்போது எழுந்தது'

திடுமென வெய்யில் குறைவதுபோலத் தெரிந்தது. வானத்தில் சில கருமுகில் கூட்டங்கள் அசைந்தன. எதிரே அடிவானத்தில் இன்னும் திரளாக

சூரியன் பட்டென்று அதனுள் மறைந்திருக்கவேண்டும். வெய்யில் எங்கே போனது.

குடையைச் சுருக்குவதா? விடுவதா என மனப் போராட்டம் வெடித்து என்றாலும் குடையைச் சுருக்கவில்லை. மப்பும் மந்தாரமுமாக இருக்கும் வேளையில் குடை பிடித்தால் பயித்தியக்காரனென்று நினைக்க மாட்டார்களா? கடைசி மழையாவது பெய்யவேண்டும். மழையும் இல்லை வெய்யிலும் இல்லை என்றால் என்ன செய்யலாம்.

மழை பெய்யாதா? அல்லது வெய்யில் வராதா? என்று வானத்தைப் பார்க்க ஆரம்பித்தேன்.

# சொற்சிலம்பம்

## போட்டி எண் – 12

மொ, ழி, மூ, த, டு, ல், மு, த், ம், வா, க், கொ, ப்,
மு, பு, ண், ய், பா, ட, ப, ன், நா, ற, ற், டு, நீ,
சொ, ர், கி, ந், ர, தி, கா, க, ரி, சி, ண, கு, ச, ள

மேலுள்ள எழுத்துக்களைக்கொண்டு 20 சொற்கள் ஆக்கப்பட வேண்டும். சொற்கள் 4 எழுத்தும் அதற்கு மேற்பட்டதாகவும் இருக்க வேண்டும். முதலில் ஆக்கப்படும் சொல், எந்த முத்லிரண்டெழுத்தில் ஆக்கப்படுகிறதோ அதே இரண்டெழுத்திலேயே ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் தொடங்கப்படல் வேண்டும்.

மேலுள்ள எந்த எழுத்தும் விடுபடக்கூடாது.; மேலதிக எந்த எழுத்தும் சேர்க்கப்படக் கூடாது.

| | |
|---|---|
| 1)................................ | 11)................................ |
| 2)................................ | 12)................................ |
| 3)................................ | 13)................................ |
| 4)................................ | 14)................................ |
| 5)................................ | 15)................................ |
| 6)................................ | 16)................................ |
| 7)................................ | 17)................................ |
| 8)................................ | 18)................................ |
| 9)................................ | 19)................................ |
| 10)................................ | 20)................................ |

'சொற்சிலம்பம்' எண்−12 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய **இறுதி நாள்: 25.09.98**

*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)*

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

சொற்சிலம்பம்
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010 Paris, France.

பெயர்: ..........................

முகவரி: ..........................

..........................

..........................

பிறந்த திகதி: ..........................

சந்தாதாரராயின் சந்தா இல: ..........

**சொற்சிலம்பம் போட்டி எண்: 11 இற்கான மாதிரி விடைகள்**

**நல்வரவு, நல்லாசி, நல்குதல், நல்லெண்ணம், நல்லது, நல்லறம், நல்லுறவு, நல்வினை, நல்வழி, நல்லோர், நல்வளம், நல்லெண்ணெய், நல்லவன், நல்லவேளை, நல்குதல் இன்னும் பல...**

*சொற்சிலம்பம் –11 இற்கு சரியான பதில் அனுப்பியவர்களில் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்*

1) N. மன்மதன்
1400 Verdon, Switzerland.
2) G. யசோதா
75019 Paris, France.
3) திருமதி க. புவனேஸ்வரி
5700 Svendborg, Denmark.
4) சூசைப்பிள்ளை மதன்பாபு
5071 Loddefjord, Bergen, Norway.
5) கோமளா விமலேந்திரன்
40213 Düsseldorf, Germany.

*இவர்களுக்குரிய பரிசு காலக்கிரமத்தில் பாரிஸ் மக்கள் கடை நிறுவனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.*

போட்டியில் கலந்துகொண்டு சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்களில், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தெடுக்கப்படும் ஐவருக்கு **பாரிஸ் மக்கள் கடை** தாபனத்தினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

சொற்சிலம்பம் எண்–12 இற்கான விடையும், சொற்சிலம்பம் எண்–13 உம், 24 - 30 செப்டெம்பர் 98 ஈழமுரசில் வெளிவரும்.

**ஆக்கம்: சவேயூ சவுந்தரராஜா**

# 'ரயில் பயணம்' ஒரு அறிமுகம்

*பாரிசில் 23.08.98 ஞாயிற்றுக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட விடுதலைமாலை நிகழ்வின் போது இடம்பெற்றிருந்த 'ரயில் பயணம்' கவிதாநாடகம் வழமையான நாடகப் பாணியில் இருந்து வித்தியாசப்பட்டிருந்ததுடன், கனதியானதொரு நிகழ்வாகவும் இருந்தது. இந் நாடகத் தயாரிப்பில் பங்கேற்றவர்களில் ஒருவரான திரு.பாலகணேசன் அவர்களுடன் ஈழமுரசிற்காக பிரத்தியேகமான ஒரு நேர்காணல்.*

**கேள்வி: இந்த நாடகம் பற்றிய முழுமையான பரிமாணத்தை எங்களுக்குக் கூறுங்கள் பார்க்கலாம்?**

பதில்: முதலில் இரண்டு குழந்தைகளும், அவர்களின் தந்தையும் அரங்கில் தோற்றம் தருகின்றார்கள். குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். வேலைக் களைப்புடன் வீடு திரும்பியிருந்த தந்தையை அவர்கள் கதை சொல்லும்படியும், அதிலும் புதிய கதையைச் சொல்லும் படியும் வற்புறுத்துகின்றார்கள். அப்போது அவர் இந்த ரயில் கதையைச் சொல்லுவதாகக் கூறுகின்றார். அதன்படி குழந்தைகள் ரயிலாகவும், அதற்குத் தந்தை வெளிச்சம்காட்டி, தண்டவாளம் மாற்றி ஓடவிடும் கட்டளைக்காரனாகவும் தன்னை உருவகிக்க இப்போது மேடையில் ரயிலும், கட்டளைக்காரனும் தோற்றம் தருகின்றார்கள். அடுத்ததாக அந்தத் தோற்றத்தில் அந்த ரயிலைப் படைத்தவனாயும், அந்த ரயிலில் பயணிப்பவனாயும் அதே கட்டளைக்காரன் மாறி அந்த ரயிலினை ஓடச் செய்கின்றான். 'கடகட' என்கின்றான். எல்லாத் தடைகளையும் 'கட' என்கின்றான். ரயில் கடகடக்கின்றது. ஆனால் ரயில் சரியாக ஓடவில்லை. அது பல்வேறு ரயில்களாகின்றது. ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளப் பார்க்கின்றது. அதிலும், அவற்றிலும், ஓட்டத்திலும் சீரான அமைவில்லை. இந்த நிலையில் சரியான ரயில் ஒன்றை பயணிகள் வேண்டி நிற்கின்றார்கள். பயணம் தேங்கப் பார்க்கின்றது. ஒரு கட்டத்திற்கு மேல் ரயில் நகர மறுக்கின்றது. இப்பொழுதுதான் கட்டளைக்காரன் ரயிலின் தேக்கத்தை உடைக்க முயல்கின்றான். ரயிலின் எதிரே பெரும் மலையெனத் தடைகள்.

தடையை அகற்ற கட்டளைக்காரனுடன் பயணிகள் முயல்கின்றனர். தடையை ஊடறுத்து ரயில் பயணம் தொடர்ந்தாலும், நம்பிக்கையீனர்களும், பயணத்தில் விருப்பமற்றவர்களும் ரயில் ஓட்டத்தைத் தடை செய்ய முயல்கின்றார்கள். அதையும் தாண்டி ரயில் தன் இலக்கு நோக்கி ஒரே ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக மாறிப் பயணிக்கின்றது. இந்த இலக்குநோக்கிய பயணத்தில் எல்லோருமே ஏதேனும் ஒரு வகையில் பங்கேற்கின்றார்கள். துன்பங்கள் சூழ்கின்றன. ஆனால் அவர்கள் அதைத் தாண்டிச் செல்லத் தயாராகின்றார்கள். என்றாலும் அவர்கள் அந்த ரயிலை விடத் தயாராக இல்லை. வெற்றியின்போதெல்லாம் அவர்கள் பூரிப்படைகின்றார்கள். ஆனால் அந்த வெற்றிகளே தான் தம் இலக்கு என்றும் அவர்கள் திருப்திகொள்ளத் தயாராக இல்லை. தலைமுறைகள் தாண்டியேனும் ரயிலை ஓடச் செய்ய வேண்டும் என்பதே அவர்கள் எண்ணமாய் இருக்கின்றது. இதைச் சொல்வதற்கே நாங்கள் ஆட்டத்தையும், இசையையும், வசனங்களையும், அசைவுகளையும் பயன்படுத்திக்கொண்டோம். ஒளியைப் பயன்படுத்தும் எண்ணம் இருந்த போதும் அந்த மேடையில் அது எமக்கு வெற்றியளிக்கவில்லை.

**கேள்வி: ரயில் பயணம் மூலம் பார்வையாளருக்கு நீங்கள் சொல்ல வந்த செய்தி என்ன? இந்த ரயில் எங்கிருந்து எங்கு சென்றடைந்தது?**

பதில்: பொதுவாகவே வாழ்க்கைக்கு பயணத்தைக் குறியீடாகக் கொள்வதுண்டு. இதிலும் இலக்கியம் நெடுகிலும் வாழ்க்கையை ஒரு பயணத்துடனேயே ஒப்பிட்டுப் பேசப்படுவதைக் காணலாம். அதிலும் பயணங்கள் எப்போதும் முடிவடைவதில்லை. அது தொடர்ந்தவண்ணமே இருக்கும் எனப் பலரும் கூறுவதுண்டு. இந்த 'ரயில் பயணம்' எமது வாழ்க்கையின் மறு பிம்பமாகவே இதில் காட்டப்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களாகிய எமக்கு வாழ்க்கையே ஒரு போராட்டமாக அமைந்துள்ளது. தாயகத்தில் அது விடுதலை நெருப்பாகவும் புலம் பெயர்ந்த வாழ்க்கையில் வேரறுந்த வலியாகவும் தொடருகின்றது. நாம் ஒவ்வொருவரும் புலம்பெயர் வாழ்வில் நாம் நமக்கே முரணானவர்களாகவே வாழ்கின்றோம். இந்த ரயில் பயணத்தில், அந்த விடுதலை நெருப்பின் தொடர்ச்சியையும், புலம்பெயர் வாழ்வின் நம் வீழ்ச்சியையும் செய்தியாகக் கொண்டிருந்தோம். நாடகத்தை ஊன்றிக் கவனிப்பீர்களாயின் இது புலப்பட்டிருக்கக்கூடும்.




ரயில் எங்கு புறப்பட்டது? எங்கு சென்றது? என்பது இதில் ஒரு அருபமாகவே இருக்கின்றது. அது புலம் பெயர் நாட்டில் தொடங்கி தாயகத்தைச் சென்றடைந்திருக்கலாம். அல்லது தாயகத்தின் வரலாறாக கால இடைவெளியையும் அது கொண்டிருக்கலாம். அதாவது 70–இற்கு முன்னான காலத்தில் புறப்பட்டு 2000–ம் ஆண்டை நோக்கி பயணம் செய்திருக்கலாம். அல்லது வெறும் ரயிலாக பாரிசின் சுரங்க ரயிலாகவும் அமைந்திருக்கலாம். நீங்கள் பார்க்கும், பயணிக்கும் அந்த சுரங்க ரயில்கூட வெறுமையானது என்று சொல்வீர்களா? அதில் நீங்கள் பயணிக்கும் ஒவ்வொரு கணமுமே ஒரு காவியம் போல் தெரிவதில்லையா? ரயிலை நீங்கள் மேடையில் வெறும் மருப் பொருளாக மட்டுமே பார்ப்பீர்களானால், அப்படி ஒரு ரயிலை ஏன் நாங்கள் மேடைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்? ஒரு கலை முயற்சி என்பது வெறும் மருப் பொருள் என்றா நினைக்கின்றீர்கள்?

**கேள்வி: செய்தி சொல்லுபவரை கட்டியக்காரனாக இல்லாமல் கட்டளைக்காரனாக அழைத்ததன் காரணம் என்ன?**

பதில்: அடிப்படையில் இந்த நாடகம் ரயில்பயணம் ஒரு கவிதையில் இருந்தே உருப்பெற்றது. அந்தக் கவிதையே நாடக வடிவத்திற்கு உள்ளாக்கப்பட்டது. அந்தக் கவிதையை உங்களுக்குத் தெரியும். ஒரு கவிஞனின் தன்னிலைக் கூற்றாகவே படைக்கப்பட்டது. இதில் நாங்கள் அந்தத் தன்னிலையான கவிஞனையே கட்டளைக்காரன் என அழைத்துக் கொண்டோம். கவிதையிலும் சரி, நாடகத்திலும் சரி அந்த ரயில் அவனால் படைக்கப்பட்ட கற்பனை ரயில். அந்த ரயிலை அவனே செலுத்துகின்றான். அதனை அழகு பார்க்கின்றான். அதன் துன்பம் கண்டு குமுறுகின்றான். தடைகள் வரும்போது அவனும் தடை அகற்றுபவனாகவே மாறுகின்றான். இங்கே ரயில் அவனாகவும் அவனே ரயிலாகவும் அப்படைப்பாக்கச் செயலில் அவ்வனே கரைந்து போகின்றான். இப்போது நீங்கள் மேடையில் ரயிலை மட்டுமே பார்க்க முடியும். கட்டியக்காரனாக அவனே இருப்பானாயின், அவன் இரயிலுக்கு வெளியே இருந்திருக்க வேண்டும். அப்படி ஒருவனை இருத்த நாங்கள் விரும்பவில்லை. ஆகவே, அவனையே கட்டளைக்காரனாக ஆக்கினோம்.

**கேள்வி: மரபு நாடக முறையை உடைத்துக் கொண்டு இவ்வாறானதொரு உத்தி முறையைக் கையாளும் எண்ணம் எப்படி வந்தது?**

பதில்: நாடகம் என்பதை அவைக்கு ஆற்றும் கலையாக நாங்கள் கருதியுள்ளோம். இதில் மரபா? நவீனமா? என்பதல்ல முக்கியம். அரங்கை எம் கலை ஆளுமைக்குட்படுத்துவதிலேயே நாங்கள் கவனம் கொண்டிருந்தோம். உண்மையில் நீங்கள் பார்த்த இந்த ரயில் பயணம் நாங்கள் கருதிய கலை ஆளுமையை முழுமையாகக் கொண்டிருக்கவில்லை; அந்தத் திருப்தியும் எங்களுக்கில்லை. நாங்கள் 'ரயில் பயணம்' என்பதை, அரங்க நிகழ்வாக எண்ணியபொழுதே அதனை ஒரு அனுபவமாகவே கொள்ள நினைத்தோம். இதனை ஒரு கூட்டு முயற்சியாகவே நாங்கள் தயாரித்தோம். இந்த ரயில் பயணத்திற்கான பிரதி ஆக்கப்படும்போது அதன் மேடை எம்மால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. நாம் முழுமையாக எமது மரபுவழி ஆட்டங்களையே இதில் பயன்படுத்த எண்ணியிருந்தோம். எண்ணமிருந்தபோதும் அந்த ஆட்டங்களின் கலை நுட்பங்களை முழுமையாக நாம் அறிந்திருக்கவில்லை. இந்தக் கலை நுட்பங்களை அறிந்தவர்களை நாம் தேடிய போது, சரியான முறையில் அவர்கள் ஒத்துழைக்கவில்லை. இந் நிலையிலேயே முழுமையாக புதியவர்களை, புதிய ஆட்டங்களை இதில் பயன்படுத்தினோம். அந்த வகையிலேயே மேலைநாட்டு நடனமான 'பலே' கூட இதில் இணைக்கப்பட்டது. இந்த நாடகத்தின் முழு ஆட்ட வகைகளிற்கும், பாரிசிற்கு அறிமுகமில்லாத ஒரு வளரும் கலைஞரையே பயன்படுத்தினோம். இந்த நாடகத்தின் நடன அமைப்பும், அதன் வெற்றியும் திருமதி வனிதா கோணேஸ்வரன் எனும் இளம் கலைஞரையே சாரும்.

அவைக்காற்றும் கலையானது, வெறுமனே வசனத்தையும், நடிப்பையும் சார்ந்ததொன்றல்ல. அசைவுகள் ஆட்டங்கள் எனப் பல்வேறான அம்சங்களை உள்ளடக்கியதாக அமையும்போதே அரங்கக் கலை சிறக்கின்றது. நாடகம் என்பது பல்வேறு வடிவங்களைக் கொண்டது. எடுக்கும் கருவும், கருவை எடுத்துக் கொண்டவரது ஆளுமையும் நாடக வகையைத் தீர்மானிக்கின்றது: அந்த வகையில் நாங்கள் ரயிலும் அதன் பயணமும் என்பதை மையக் கருவாகக் கொண்டதால் அதற்கேற்ற நாடக வகையையே நாங்களும் தெரிவு செய்தோம். அதுவே பார்வையாளர்களுக்குப் புதுமையாக இருந்திருக்கக்கூடும். அடிப்படையில் இது ஒரு 'குறியீட்டு நாடகமே'தான். ஆனால் நாங்கள் அதனைக் கவிதா நாடகம் என்றே அழைத்திருந்தோம்.

**கேள்வி: ஏன் நீங்கள் தொழில்நுட்ப ரீதியான பயிற்சியில்லா சிறுவர் சிறுமியர்களைத் தேர்ந்தெடுத்தீர்கள்?**

பதில்: நாங்கள் இந்த நாடகத்தை தயாரிக்கத் தொடங்கிய போது இப்படியான செயற்பாட்டை குழுவாகச் செயற்படுத்தலாம் எனத் தீர்மானித்தபோதே நாங்கள் எதிர்காலத் தலைமுறையையே கவனத்தில் கொண்டிருந்தோம். பொதுவாகப் புலம்பெயர் வாழ்வில் எல்லா விடயங்களுமே வந்து சேர்ந்த தலைமுறையுடன் முடிந்து விடுமோ என்ற அச்சம் உங்களைப் போலவே எங்களுக்கும் இருக்கின்றது. அவ் வகையில் இல்லாமல் அந்தத் தலைமுறையையும் தாண்டியதாய், எல்லாவற்றிலும் அடுத்த தலைமுறையிலும் தயார்ப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியான கருத்தைக் கொண்டிருந்தோம். அத்துடன் எமது இவ்வகையான முயற்சிக்குப் புதியவர்களையே எம் எண்ணப்படி தயாரிக்கலாம் எனவும் கருதியிருந்தோம். இதில் அந்தக் குழந்தைகளின் அபாரமான ஒத்துழைப்பை மறுக்கமுடியாது. எங்களுக்கு வெற்றியும் திருப்தியும் கிடைத்ததென்றே கருதுகின்றோம்.

உதாரணமாக கட்டளைக்காரனாகப் பங்கேற்ற ஜெகன், தொழில்முறைக் கலைஞனாகவோ, மிகப் பெரிய நாடக அனுபவங்கள் இல்லாதவராகவோ இருந்தபோதும், இந்த ரயில் பயணத்தில் நாங்கள் கருதிய பாத்திரப் பரிமாணத்தை துலங்கச் செய்வதில் தொழில்முறை கலைஞரையும் விஞ்சிவிட்டார் என்றே கருதுகின்றோம். நாடகம் புரியவில்லை எனக்கூறிய பலரும் கூட அந்த இளம் கலைஞனை வாயாரப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி: இப் புதிய வடிவத்தின் மூலம் நீங்கள் சொல்ல வந்த செய்தி பரவலாக மக்களைச் சென்றடைந்ததா?**

பதில்: கலைகள் எல்லாம் மக்களைச் சென்றடைய செய்திகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே எங்களது நோக்கம். நாங்கள் கொண்டிருந்த செய்தியை மக்கள் உள்வாங்கிக் கொண்டார்களா என்பது சந்தேகம்தான். இதை நாங்கள் தயாரிப்பின்போதே உணர்ந்திருந்தோம். ஆனாலும் எங்கள் முன் இருந்த கேள்வி புரியவில்லை என்பதற்காக கலையை நாசம் செய்வதா அல்லது புரியும்படியான கலை ஆளுமையை நாங்கள் கைக்கொள்வதா, அந்தக் கலை ஆளுமையை நாங்கள் கைக்கொள்வதானாலும் என்பதே அந்த கலையாளுமையும் ஓர் தடவையில் எங்கீளுக்கு வாய்க்குமா? வெற்றி கிடைக்குமா? என்ற சந்தேகங்கள் இருந்தபோதும் நாங்கள் முயற்சியைத் தொடர்வோம் என்றே உறுதி பூண்டிருந்தோம். இந்தத் தடவை இல்லாவிட்டாலும் இன்னொரு தடவையில் அந்தச் செய்தியை மக்கள் உள்வாங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

**கேள்வி: இந்த நாடகத்திற்காக உங்களுடன் இணைந்து பணி புரிந்தவர்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

பதில்: இந்த நாடகத்திற்கான பங்களிப்பில் தமிழ்ச்சோலை ஆசிரியர்களில் ஒருவரான திருமதி புண்ணியமூர்த்தி அவர்களும், இசையமைத்துத் தந்திருந்த 'ஈழநிலா' இசைக்குழுவின் திரு. தில்லைச்சிவம் அவர்களும், பாடல்களைப் பாடியிருந்த திரு. செல்வலிங்கம் அவர்களும், நடன அமைப்புகளுக்கு உதவியிருந்த திருமதி வனிதா கோணேஸ்வரன் போன்று இன்னும் பலரது முயற்சிகளும் ஒத்துழைப்புக்களும் எமக்குப் பக்கபலமாக இருந்தன.

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 25 – 08 – 1976



இறப்பு: 16 – 09 – 1991

# கல்கத் - கிருசாந்

**மார்க்கண்டு-மதனரூபன் (பெரியபழம்)**

*யா/மத்தியகல்லூரி*

தாயகமண்ணும் தமிழீழ
தாகமும்
தமிழ்த்தாயின் படையணியும்
தமிழீழத்தின்
கருவறைசென்றாய்
தானத்தலைவன் தாரகமந்திரம்

பரிவோடு தமிழீழத்தின்
வீதியில் உலாவந்த
செல்வபுத்திர புலிவீரனே

உமதுவரலாறு ஆயிரமாயிரம்
ஈரேழுவயதினிலே உன்புஜம்
தழுவிய உன் துப்பாக்கிகள்
இன்னமும் கயவர்
குகைநோக்கியே

என் தனையனே உன்தாகம்
வீண்போகாது விலையும்
போகாது

களத்திலிருந்து உன் எழுதுகோல்
செருக்கிய காவியம்

இன்னமும் எங்கள்
கைகளில்தினமும் பக்கம்
புரளுகின்றன
தானைத்தலைவன்
மடிப்பிள்ளையானாய்
நாம் இன்னமும் அகதிகளாய்
அலைகின்றோம் திசைதெரியாது

உங்கள் நினைவோடும்
துணிவோடும்
எம்புலிவீரர் செருக்களம் நோக்கி
தமிழீழ தாகத்தோடு தளராது
துணிவோடு
களமாடி உம்குருதி சுமைதாங்கிய
எங்கள் தேசியக்கொடியும்
வீறுநடைபோடும்
வாழ்கதமிழ் - மலர்க தமிழீழம்!

*உங்கள் நினைவால் தினம் தினம் துயருறும்:*
*அப்பா, அம்மா, அருமை தங்கை, குட்டித் தம்பிமார்கள்.*

ரவீந்திராதேவி மார்க்கண்டு
மதனராஜன் (சின்னப்பழம்)
மயூறதி (நிஷா)மதனாகரன் (பவுணர்)
மகிந்தன் (பாபு)

தகவல்: மார்க்கண்டு (மார்க்கோ)
தொலை.இல. 026.912 74 84 (சுவிஸ்)

புதுவையூர் கிழக்கு
புதுவையூர்
தமிழீழம்.

---

# மறப்பதற்கு அல்ல நினைவுகள்



# பேருழவர்

**உயர்திரு. வைத்திலிங்கம் இரத்தினசபாபதி**
**(பேரினவாதிகளாலும் எட்டப்பராலும் கொய்யப்பட்டது)**

## 18 புரட்டாதி 1992


*அப்பா நீ மெழுகுதிரியாய் எரிந்தபோது உன் ஒளியில் வாழ்ந்தவர்கள் பலர் - ஆனால் உன் மெழுகுதிரியின் நிழலில் வாழ்ந்தவன் நான். எழுத்தறிவித்தவன் நீ - யாழ் இந்துவில் மைந்தனாய் என்னை அழகு பார்த்தவனே. நாட்டு விடுதலையை அறிவுபடுத்திய முதலாசான் தாயையும் தாய்நாட்டையும் காட்டிய நீ இன்றிருந்தால் நான் என்ன அரசியல் அகதியா? மகன் பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் ஆளவும் கனவு கண்டாய். பாசிச சிங்களவன் அனுமதியான் எனக் கண்டு, பாரியிலே திலீபனின் ஆறாவது நினைவுநாளில் நெஞ்சிலே எரிகணை ஏந்தி எனைக் காத்துப் போனாயோ - இருந்தபோதும் இனிவரும் காலம் நெருப்பு நிலவுகளின் காலம் உங்கள் மரணங்களுக்கு நிலவுகள் நெருப்புப் பொழியும்.*

தகவல்: (சுவிஸ்) வி.குணசீலன் (கண்ணன்)
இ. வைத்திலிங்கம் (வைத்தி)

---

# கலங்கரைத் தீபமொன்று வீராஞ்சலியில்...

பிறப்பு: 02 – 06 – 1976



இறப்பு: 19 – 08 – 1997

# இராஜரட்னம் தினேஸ்குமார்

**செந்தமிழ்ச் செல்வன்: இரா. தினேஸ்குமார்**

*(செங்கோட்டன்)*

நீ புதிய தேசத்தைப்
பிரசவிப்பதற்காக
உன் உயிர் துறந்தாய்

அன்றொருநாள்
தினேஸ் குமார் என்பது
பெயராக இருந்தது
இப்போது
செங்கோட்டன் என்பது
பிரமிப்பாய் ஆனது!

தமிழீழ இலட்சியக்
கனவுகளின்
சுமைதாங்கியே!
நீ இறப்பிலும்
நீ உயிர்த்தெழுவாய்

உன்னுடைய
பாதங்கள் நடந்த
பாதைகளிலெல்லாம்
புல்லும் கூடப் புலியாக
மாறும்!
உன்னுடைய
சுட்டும் விழிச்சுடர்
தொட்ட இடமெல்லாம்
ஜோதி உருவாகும்!
அதுவரை என் கண்கள்
கண்ணீரை உனக்கு
என்றும்
காணிக்கையாக்கிக்
கொண்டிருக்கும்.


'புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்'
இங்கே உருவாகும்!

தகவல்: R. Vasanthakumar
Jodoksgasse 586, 84028 Landshut, Germany.
Tel: 0049 -1728549115

---

# ஓராண்டு நினைவஞ்சலி

*தம்பி! வீரத்தின் சின்னமே விடுதலை வேங்கையே*
*விடுதலை பாதையில் விடியலை நோக்கி சென்றவனே*
*விடியலின் ஓசை கேட்குமுன் நீ விடை பெற்றுவிட்டாயோ*
*துடிக்கிறதே நம் இதயங்கள்*
*ஆனாலும் தோற்காது நம் தமிழ் ஈழம்*
*உன்னைப்போல் ஆயிரம் வேங்கைகள் தோன்றுவார்கள்*
*மீட்பார்கள் நம் தமிழ் ஈழத்தை*
*அப்போ நிறைவேறும் உனது இலட்சியக் கனவு!*
*அதுவரை நிம்மதியாய் நீ உறங்கு!!!*



# லெப். பாவேந்தன்

**கைலாசபிள்ளை நித்தியானந்தன் (நித்தி)**

*(கே.கே.எஸ். வீதி, மல்லாகம்)*

*உனது பிரிவால் வாடும்*
*அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்*

வீர ஜனனம்: 03.02.1977

வீர மரணம்: 17.09.1997

தகவல்: அண்ணன்மார் - ஆனந்தன், விஜி, காந்தன் (France)
Tel: 01 69 53 13 01 - 04 75 57 18 40

# சாக்கடைக்குள் மூழ்கியுள்ள அமெரிக்கத் தலைமை

ஒரு நாட்டின் தலைவருக்கு எதிராக பல மில்லியன் டொலர் செலவில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் முடிவுகளை வெளியிட உலகின் அதிநவீன மிக வேகம் கொண்ட தொடர்புத்துறை பயன்படுத்தப்பட்டுள்ளது. நாகரிக உலகின் முன்னோடிகள் என்றும், உலகின் மிகப்பெரும் ஜனநாயக சக்தி எனக் கூறிக்கொள்ளும் அமெரிக்காவில் கடந்த வாரம் வெளியாகிய ஜனாதிபதிக்கு எதிரான விசாரணை முடிவுகளில் பாவிக்கப்பட்டிருந்த வார்த்தைப் பிரயோகங்களும், அது விபரிக்கப்பட்டிருந்த முறைகளும் உலகமே வெட்கித் தலைகுனியும்படி அமைந்திருந்தது. ஒரு நாட்டின் தலைவருக்கு எதிரான விசாரணையில் அவரது தனிப்பட்ட நடவடிக்கை சம்பந்தமான விசாரணை அறிக்கையில், அசிங்கமான அருவருக்கத்தக்க மிகக் கேவலமான வார்த்தைப் பிரயோகங்கள் அந் நாட்டின் மிகப் பிரதானமானவர்களால் பாவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக பில்கிளின்டன் பதவியேற்றது· முதலே அவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் அவர் ஆர்க்கன்சாஸ் மாநில ஆளுனராக கடமையாற்றிய போது நடந்ததாகச் சொல்லப்படும் பாலியல் வரம்பு மீறல்கள் பற்றிய வழக்கு முக்கியமானது. அக்காலகட்டத்தில் கிளின்டனின் உதவியாளராகப் பணிபுரிந்த ஓர் பெண்ணுடன் கிளின்டன் தவறானமுறையில் நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டினை விசாரிக்க ஆரம்பித்த சுயாதீன விசாரணையாளர் கென்ஸ்ரார், அவ்விவகாரம் தொடர்ந்து வேறு வடிவமெடுத்து இறுதியாக மூன்று வருடங்களின் பின்



மொனிக்கா லிவின்ஸ்கி என்னும் பெண்ணூடாக விஸ்வரூபமெடுத்துள்ளது. இவ் விவகாரத்தை விசாரித்து முடித்த ஸ்ரார், 475 பக்கங்களில் விசாரணை முடிவுகளை அமெரிக்க காங்கிரசுக்கு சமர்ப்பித்தார். உடனடியாக இவ் விபரங்கள் ஆரம்பம் முதல் இறுதிவரையான சகல பக்கங்களும் உலகின் மிக வேகமான தொடர்புச் சாதனமான தகவல் வலையினூடாக உலகிற்கு வெளியிடப்பட்டது.

21 வயதுடைய மொனிக்கா லிவின்ஸ்கி வெள்ளை மாளிகையின் தலைமை அலுவலர் அலுவலகத்திற்கு ஊதியம் பெறாத ஊழியராக வேலைக்கு சேர்ந்தார். அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி கிளின்டனுடன் அவர் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார் எனச் சொல்லப்படுகிறது. பயிற்சியாளராக வெள்ளை மாளிகையில் சேர்ந்த அவர், டிசம்பர் மாதத்தில் சட்டத்துறை அலுவலகத்திற்கு ஊதியம் பெறும் ஊழியராக அமர்த்தப்பட்டார். 1996 ஏப்ரலில் அன்றைய வெள்ளைமா

> **ஆரம்பத்தில் தொடர்புகளை முற்றாக மறுத்த ஜனாதிபதி கிளின்டன், ஏழு மாதங்களின் பின் அதனை ஒப்புக் கொண்டதானது, ஒரு நாட்டின் தலைவர் மக்களுக்கு உண்மைகளை மறைத்துள்ளது மட்டுமல்லாது, தான் செய்த 'உறுதி மொழிக்கு எதிராக' பொய் கூறியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

ளிகை தலைமை அலுவலர் எவலின் லியபெர்மென், மொனிக்காவை பென்டகன் பேச்சாளர் கென் பெக்கோனின் உதவியாளராக மாற்றம் செய்

## மூன்றுவருட இரகசியம் வெளிச்சத்துக்கு வருகிறது

தார். நடத்தைகளில் முதிர்ச்சியின்மை, பொறுப்பற்ற தன்மை போன்றவையே அவரது வேலை மாற்றத்திற்கு காரணமாக அப்போது கூறப்பட்டது. பென்டகனுக்கு மாற்றலாகிய இவர் அங்கு ஏற்கனவே கடமையாற்றிகொண்டிருந்த லின்டா றிப் எனும் பெண்ணை சந்தித்தார். இருவருக்கும் இடையே நட்பு வலுவடைந்தது. யூலை 1996ல் முதல் முதலாக தான் ஒரு திருமணமானவருடன் உறவு கொண்டிருக்கும் விடயத்தை தனது நண்பி றிப்பிடம் மொனிக்கா கூறத் தொடங்கியுள்ளார். இதற்கிடையே லிண்டாறிப் தனக்கும் மொனிக்காவிற்கும் இடையே இடம்பெறும் தொலைபேசி பரிவர்த்தனைகளை இரகசியமாகப் பதிவுசெய்ய ஆரம்பித்தார். இதன்போது தனக்கும் ஜனாதிபதி கிளின்டனுக்கும் இடையே பாலியல் தொடர்பு உள்ளதாக கூறிய தகவல்களும் பதிவாகின. அக்டோபர் 1997-ல் நியூஸ் வீக் சஞ்சிகையைச் சேர்ந்த சிலரை லிண்டாறிப் சந்தித்தார். அவ்வேளைதான் பதிவு செய்த ஒலி நாடாக்களை அவர்களிடம் போட்டுக் காண்பித்துள்ளார். இதற்கிடையே டிசம்பர் 1997-ல் மொனிக்கா பென்டகன் வேலையிலிருந்து விலகிச் செல்கிறார். இவ் வேளை கிளின்டனின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்த பெட்டி கியூறி, கிளின்டனின் பாலியல் நண்பனான வர்ணோன் ஜோர்டானிடம் மொனிக்காவிற்கு ஏதாவது நல்ல இடத்தில் வேலை வாங்கிக் கொடுக்குமாறு சிபார்சு செய்தார். இச் சமயம் மறுபுறத்தில் அமெரிக்க அதிபர் கிளின்டனுக்கு எதிராக போலா ஜோன்ஸ் எனும் பெண்மணி தொடர்ந்த வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ் வழக்கை விசாரித்துக் கொண்டிருந்த ஸ்ரார், மொனிக்காவை, ஜோன்ஸ் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைக்காக அழைத்தார். இதே சமயம் லிண்டாறிப் தன்னிடமிருந்த ஒலி நாடாக்களை தனது வழக்கறிஞர் ஜிம் மூடியிடம் ஒப்படைத்தார். அதே மாதம் லிண்டாறிப் சுயாதீன விசாரணையாளர் கென்ஸ்ராருடன் தொடர்புகொண்டு தனக்கும் மொனிக்காவிற்கும் இடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடல்கள் பற்றிக் கூறி, லிவின்ஸ்கிக்கு கிளின்டனுடன் தொடர்பு இருப்பதாக தான் சந்தேகிக்கும் விடயத்தைக் கூறினார். இதனைத் தொடர்ந்து ஸ்ரார் பிரதம நீதியரசர் ஜெனட் றெனோவிடம் தான் விசாரணைகளை விரிவுபடுத்த இருப்பதாகவும் அதற்கான காரணங்களையும் கூறி அனுமதியையும் பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து சி.பி.ஐ அதிகாரிகள் மொனிக்கா லிவின்ஸ்கியை விசாரணைக்கு உட்படுத்தினர்.

1998 ஜனவரி 17-ல் வில்லியம் ஜின்ஸ்பேர்க் என்னும் வழக்கறிஞர் வாசிங்டனுக்கு விரைந்து மொனிக்காவிற்காக நீதிமன்றத்தில் ஆஜரானார். அன்றைய தினம் 'ஜோன்ஸ் வழக்கு' விசாரணையின்போது தனக்கும் மொனிக்காவிற்கும் தொடர்புகள் எதுவும் இல்லை என கிளின்டன் மறுத்தார். இதைத்




தொடர்ந்து அமெரிக்காவின் சஞ்சிகைகள் சிலவும் தகவல் வலையின் சில பக்கங்களும் இத் தொடர்புகள் பற்றிய விபரங்களை மெதுவாக வெளியிடத் தொடங்கின. 21.01.98-ல் செய்தி ஸ்தாபனங்களுக்கு கிளின்டன், தனக்கும் மொனிக்கா லிவின்ஸ்கி என்னும் பெண்ணுக்கும் பாலியல் ரீதியான தொடர்புகள் இல்லை என உறுதியாக மறுத்தார். இதையே 23.01.98 அன்று அமைச்சரவையிலும் மீண்டும் கூறினார். இதே வேளை கென்ஸ்ரார் மொனிக்கா லிவின்ஸ்கியின் வழக்கறிஞருடன் பேச்சுக்களை நடத்தியதில் சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்படும் இடத்து, மொனிக்கா எல்லாவற்றையும் கூற ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவித்தார். இவ்வாறு லிவின்ஸ்கி வழக்கு ஒருபுறம் இறுகிக்கொண்டிருக்க, மறுபுறம் கிளின்டன் ஆதரவாளர்கள் அதனை மறுக்கும் வழிமுறைகளில் ஈடுபட்டனர். ஜனாதிபதியின் மனைவி ஹிலாரி கிளின்டன், பத்திரிகையாளரிடம் பேசும்போது வலதுசாரிகள் தனது கணவரை பணியவைக்கும் முயற்சியாக இவ்வாறான பொய் குற்றச்சாட்டுக்களை கூறுவதாக கூறினார். ஆனால், தனது விசாரணைகள் துரிதகெதியில் முன்னேறிவருவதாக ஸ்ரார் கூறினார். லிவின்ஸ்கி பிரச்சனையில் கிளின்டன் தொடர்புபடுத்தப்பட்டதன் பின் முதல் முறையாக ஏப்ரல் 1998 இறுதியில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றினார். அப்போது சுயாதீன விசாரணையாளர் கென்ஸ்ரார், நிதிப் பின்பலம் கொண்ட சிலரின் பின்பலத்துடன் மிகக் கடுமையாக ஓர் ஜனாதிபதிக்கு எதிரான சதி முயற்சியில் ஈடுபடுகிறார் எனக் குற்றஞ்சாட்டினார். 28.05.98 இல் கென்ஸ்ராரின் கோரிக்கையின்பேரில் தனது கை அடையாளங்களையும், எழுத்து வடிவங்களையும் சிபிஐயிடம் மொனிக்கா ஒப்படைத்தார். கொலைப் பயமுறுத்தல்களுக்கு உள்ளாகிய நிலையில் பாதுகாப்புடன் வசித்த லிண்டாறிப் வழக்கறிஞர்கள் முன் ஆஜரானார். அப்போது அவரால் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட ஒலிநாடாக்கள் போட்டு காண்பிக்கப்பட்டன. இதற்கிடையில் யூலைமாத இறுதியில் மொனிக்கா மற்றும் கென்ஸ்ராரின் வழக்கறிஞர்கள் ஒரு உடன்படிக்கைக்கு வந்தனர். இதேவேளை கிளின்டன் தானும் இப் பிரச்சினையில் சாட்சியமளிக்க ஒப்புக் கொண்டார். ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தப் பிரகாரம் தனக்கும் கிளின்டனுக்கும் இடையே பாலியல் தொடர்பு இருந்ததற்கான ஓர் ஆதாரமான கரு நீலநிற உடையை விசாரணையாளர்களிடம் மொனிக்கா ஒப்படைத்தார். ஆகஸ்ட் 6ம் திகதி மொனிக்கா சாட்சியத்திற்காக விசாரணையாளர் முன் ஆஜரானார்.



அதேபோல் ஒகஸ்ட் 17ம் திகதி கிளின்டன் கென்ஸ்ரார் விசாரணை முன் சாட்சியமளித்தார். வெள்ளைமாளிகையிலிருந்தவாறு சாட்சியமளித்த கிளின்டன், பின்னர் தேசிய தொலைக்காட்சியில் தோன்றி முதல் முறையாக மொனிக்கா லிவின்ஸ்கியுடன் தான் முறையற்ற உறவுகளை கொண்டிருந்ததாயும், மக்களை தவறாக வழிநடத்தியதாகவும் அதற்காக மன்னிப்பையும் கோரினார். ஒகஸ்ட் 20ம் திகதி மீண்டும் மொனிக்கா சாட்சியமளித்தார். சுயாதீன விசாரணையாளர் கென்ஸ்ரார் 18 பெட்டிகளில் விசாரணை முடிவுகளை பிரதிநிதிகள் சபையிடம் செப்டம்பர் 9ம் திகதி ஒப்படைத்தார்.

கென்ஸ்ராரின் விசாரணைகளின் ஆரம்பத்தில் தொடர்புகளை முற்றாக மறுத்த ஜனாதிபதி கிளின்டன், ஏழு மாதங்களின் பின் அதனை ஒப்புக் கொண்டதானது, ஒரு நாட்டின் தலைவர் மக்களுக்கு உண்மைகளை மறைத்துள்ளது மட்டுமல்லாது, தான் செய்த 'உறுதி மொழிக்கு எதிராக' பொய் கூறியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி கிளின்டன் அரசியல் ரீதியான தனது செயல்பாடுகளில் எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் தொடர்ந்து செயற்பட்டுவந்துள்ளார். தன்மீது குற்றம் சுமத்தப்பட்டதன் பின்னர் கூட அவரது செயற்பாடுகளில் மாற்றங்களை காண முடியவில்லை. அவரது பாலியல் விவகாரக் குற்றச்சாட்டு கூட தனிப்பட்ட விவகாரம்தான். ஆனாலும் ஒரு நாட்டின் ஜனாதிபதி என்கின்ற வகையில் தனிப்பட்ட விவகாரங்கள் என எதுவும் இல்லாது போகின்றன. இவ் வகையில் அவர் குற்றவாளிதான். ஆனால், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன. கிளின்டனுக்கு எதிரான இந் நிகழ்வுகளின் பின்னணி மிக ஆழமானது என நம்பப்படுகிறது.

(தொடரும்)

- உதயன் -


**சிவாசினி வாகன சேவை**

***Chivashini Transport***

**வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை**

தொடர்புகட்கு: ஜெயா



0614616984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04

டிஸ்னி றெஸ்றோறன்ட்

# எழுச்சிப்பாடலில் உருகவைத்த பரத நாட்டிய அரங்கேற்றம்

ஏற்கனவே பிரான்ஸின் பல பாகங்களிலும் தனது சலங்கையூடு விடுதலைத் தீயை விதைத்திருந்த சின்ன மயிலொன்று கடந்த 06.09.98 ஞாயிற்றுக்கிழமை மாலை பாரிஸில் அரங்கேற்றம் கண்டது.

சார்சல் தமிழ்ச்சோலையில், நடன ஆசிரியை நடனமாமணி, நாட்டிய விசாரதா செல்வி ஜீவா திருநாவுக்கரசு அவர்களிடம் கடந்த ஏழு வருடங்களாக நடனம் பயின்றுவரும் செல்வி சர்மிளா சர்வேஸ்வரன் அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம் தாயக மலர்வுக்காக தமை ஈந்த மாவீரர்களுக்கும், பொதுமக்களுக்குமான அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகியது.

அனைவரும் எழுந்து நின்று மாவீரருக்கான மரியாதையைச் செலுத்த பக்க வாத்தியக் கலைஞர்கள் இருந்த இடத்திலேயே இருந்தனர். இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த கலைஞர்களுக்கு எழுந்து நிற்கவேண்டும் என்ற முறை தெரியாமல் கூட இருக்கலாம். ஆனால், ஏற்கனவே பாரீஸில் பல மேடை நிகழ்வுகளில் கலந்து கொண்ட வயலின் இசைக் கலைஞருக்கு ஏன் இது தெரியாமல் போனது? அவர் எழுந்து நின்று மாவீரர்களுக்கான



மரியாதையைச் செலுத்தியிருந்தால், அவரைப் பார்த்து நிச்சயம் மற்றைய கலைஞர்களும் எழுந்திருப்பார்கள். இவரும் இவரைப்போன்ற ஏனைய கலைஞர்களும் இனிமேலாவது இது பற்றிச் சிந்திப்பார்களா?

அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து பாரீஸ் முத்துமாரி அம்மன் ஆலயக்குருக்கள் ஜெயக்குமார் ஐயர் சலங்கைபூஜை செய்தபின், செல்வி அபித்தா பரஞ்சோதியின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட M.J.C.யின் பொறுப்பாளர் திருமதி நதீன், செல்வி சர்மிளாவையும், அவரது குருவையும் பாராட்டியதோடு தொடர்ந்தும் தான் அவர்களுடன் பணியாற்ற விரும்புவதாகவும், எமது நாட்டுப்பிரச்சினைகள் விரைவில் தீரும் என நம்புவதாகவும் கூறினார்.

ஈழமுரசு ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. சிவா அவர்கள் பேசும்போது, 'பரதத்தை சாஸ்திர நடனம், ருத்திரதாண்டவம் எனப்படும் போர்க்கலை என இரண்டாகப் பிரிக்கலாம். இன்றைய அரங்கேற்றம் இவருக்கான சாஸ்த்திர நடனத்துக்குரிய பரீட்சையே; ஆனால் போர்க்கலையில் இவர் ஏற்கனவே விசேட சித்தியடைந்து விட்டார்' எனப் பாராட்டினார்.

அரங்கேற்றவிழாவில் முக்கியமாகச் செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட எண்ணிக்கை உருப்படிகளில் ஒன்றாக எழுச்சிப் பாடலை எடுத்துக் கொண்டதும், அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்ததையும் காணமுடிந்தது. 'நள்ளிரா வேளையில் நாதமணி வந்து நாலுதிசையிலும் கேட்குதடி' எனும் மாவீரர் துயிலுமில்லப் பாடலிற்கான அபிநயங்களில் பார்வையாளர்கள் அனைவரினதும் கண்கள் பனிக்குமளவிற்கு செல்வி சர்மிளா தன்னை மறந்து அழுதபடி ஆடியதோடு எம்மையும் உருக வைத்து துயிலுமில்லம் அழைத்துச்சென்றார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக பணியகப்பொறுப்பாளர் திரு. வே.மனோகரன் அவர்கள் சிறுவயதிலிருந்தே தனது பங்களிப்பைச் செய்து வரும் செல்வி சர்மிளாவை வாழ்த்தி, எமது கண்களின் முன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித அவலங்களை, உண்மை நிலையை குறிப்பாக வெளிநாட்டு மக்கள் முன் காவிச்செல்லும் முக்கிய ஊடகமாக பரதம் உள்ளது. சாஸ்த்திரிய முறைகளுடன் பரதத்தைப் பார்ப்பவர்களுக்கு இது வேதனையளிக்கலாம். எனினும் இதுவே இன்றைய எமது அவசியத்தேவை. சர்மிளா மாத்திரமின்றி அனைத்துக்கலைஞர்களும் போர்க்குணம் கொள்ள வேண்டும்; ஊட்டப்படவேண்டும். வீரத்தையூட்டும் விடுதலைப்பாடல்களுக்கும், அவலங்களைச் சுட்டிக்காட்டுகின்ற பாடல்களுக்கும் ஆடவேண்டும். இவற்றையெல்லாம் நாம் செய்யாதவிடத்து எமது மக்களுக்கு துரோகம் செய்தவர்களாகி விடுகின்றோம்' என உணர்ச்சியுடன் தமது உரையில் கூறினார்.

இசைவேளையை பாடகர் 'ஒரு நாள் போதுமா...' பாடலுடனும் மிருதங்கக் கலைஞரின் அழகிய ஸ்வரங்களும் மற்றைய இசைக்கலைஞர்கள் இசைக்கருவிகளோடு இனிய இசையையும் தந்து மனங்களை மகிழ்வித்தனர்.

தமிழ்ச்சோலை தலைமைப் பணிப்பாளரும் ஆசிரியருமான திரு. அருளம்பலம் அவர்கள் 'தமிழ்ச்சோலை மாணவியான சர்மிளா பல இடங்களில் பல்லாயிரக்கணக்கான உணர்வாளர்கள் முன்னிலையில் தனது கலைச்சேவையை வெளிப்படுத்தியவர். இதனால் தமிழ்ச்சோலை பெருமையடைகின்றது' எனப் பாராட்டி சான்றிதழ் அளித்து கௌரவித்தார்.

நடன ஆசிரியை செல்வி ஜீவா திருநாவுக்கரசு நட்டுவாங்கம் செய்ய, சென்னையில் இருந்து வருகைதந்திருந்த பாடகர் திரு.கேசவன் அவர்களுடன் இணைந்து பிரான்ஸை வதிவிடமாகக் கொண்ட செல்வி. சத்தியதேவி திருநாவுக்கரசு அவர்கள் நல்ல தமிழ் பாடல் இசைத்தனர். இதனை மெருகூட்டும் வகையில் சென்னையிலிருந்து வருகைதந்திருந்த பக்கவாத்தியக் கலைஞர்கள் திரு. கிரிதார் - மிருதங்கம்; திரு.குளூர் ரவிச்சந்திரா - புல்லாங்குழல்; திரு. குருமூர்த்தி - கெஞ்சிரா, தபேலா; திரு.அருண்சுகுமார் - கடம், மோர்சிங் ஆகியோருடன் பாரீஸை வதிவிடமாகக் கொண்ட திரு.தேவராஜா - வயலின் என ஒவ்வொருவரும் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இவர்கள் அனைவரையும் செல்வி சர்மிளா கௌரவித்தார். செல்வி ஜீவா திருநாவுக்கரசு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அனைத்துப் பாடல்களையும் நல்ல தமிழ்மொழியில் தேர்ந்தெடுத்திருந்தமையும், 'தித்திக்கும் தேன் தமிழே...', 'நள்ளிரா வேளையில்.....' பாடல்களை மிக உருக்கமாகப் பாடிய திரு.சென்னை கேசவன் அவர்களை பாராட்டாமலிருக்க முடியாது. அதேவேளை மேடையில் தம்மை மறந்து இசையுடன் ஒன்றிப்போயிருந்த திரு. கேசவனின் பாடல் வரிகள் கூடிக் குறைந்த வேளையிலும் அவற்றை வெளிக்காட்டாது நாடனமாடிய செல்வி சர்மிளாவின் சாமர்த்தியம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றே.

அடவுவகைகளை மிகச் சுத்தமாகவும், பாவங்களை மிக நுணுக்கமாகவும், கண், இமை அசைவுகளிலேயே கருத்தைக் கூறிவிடுவதாகவும், புஸ்பாஞ்சலி முதல் மயில் நடனம் வரையிலான 11 உருப்படிகளிலும் சிறந்த முறையில் வெளிப்படுத்தியிருந்ததில் சர்மிளாவின் திறமையைக் காணமுடிந்தது. மேடையில் தோகைவிரித்தாடிய சின்ன மயில் தொடர்ந்தும் ஆடாதா என ஏங்க வைக்கும் அளவிற்கு விறுவிறுப்பாக தனது முழுத் திறமையையும் அசைவுகளோடு வெளிப்படுத்தியிருந்தார்.

கறுப்புப் பின்னணியில் அழகிய வெண்கல நிறமுறைய கோவில் தூண்களை ஒத்ததாக அமைக்கப்பட்டிருந்த மேடை அலங்காரம் அனைவரது ரசனைக்கும் விருந்தாகியதுடன், சிறப்பாக இருந்த நடனநிகழ்வுகளை மேலும் மெருகூட்டியது.

திருபார்த்திபன் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே நிறைவு பெற்ற இவ் அரங்கேற்றத்தில் 600-ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொள்ள, திரு.விநாயகமூர்த்தி அவர்கள் தமிழிலும், செல்வி ரேவதி சோமசுந்தரம் அவர்கள் பிரெஞ்சிலும் தொகுத்தளித்தனர்.


தொடர்ந்து தனது போராட்டப்பங்களிப்பை செல்வி சர்மிளா செய்வார் என நம்புவதோடு அவரையும் அவர் தம் குருவையும் பெற்றோரையும் பாராட்டுகின்றோம்.

- கரிகாலன்

# புகலிட நிகழ்வுகள்

## பாரிஸ் வீதிகளில் விநாயகர் வீதியுலா

பாரீஸ் 18-ல் அமைந்துள்ள சிறீ மாணிக்க விநாயகர் வருடாந்த ஆலய தேர்த் திருவிழா கடந்த 06.09.98 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.



மதியம் 2 மணியளவில் கோவிலிலிருந்து புறப்பட்ட அலங்கார தேர், தமிழ் மக்கள் பெருமளவில் கூடும் பாரீஸ் லாச்சப்பல், மார்கடே புவாசொனியே பகுதிகளினூடாக வீதிவலம் வந்து மாலை 5 மணியளவில் மீண்டும் கோவிலைச் சென்றடைந்தது.

மாணிக்க விநாயகரைத் தரிசித்து அருள்பெற ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்ததையும் காவடியாட்டம், கற்பூரச் சட்டி, தேங்காய் உடைத்தல் என மக்கள் பக்திப்பெருக்குடன் ஈடுபட்டதையும் காணமுடிந்தது.

## துயர் துடைப்பிற்கு நிதியளிப்பு

ஜேர்மன் கிரீன்பீல்ட் தமிழர் ஒன்றியம் துயர்துடைப்பு நாட்களை முன்னிட்டுச் சேகரித்த 1020Dm ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்தது.



08.08.98 அன்று நோர்வே ஒஸ்லோவில் நடைபெற்ற சுதந்திரதாக நிகழ்வுகள்.



# விடுதலைக்கு ஆடும் பாதங்கள் அரங்கேற்றம்

ஜேர்மனி டோட்முன்ட் பவித்திர நாட்டியாலயத்தின் இயக்குநரும் விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியக கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியையுமான நாட்டிய சாந்தி செல்வி பவித்திரா செல்வகாந்தனின் மாணவியான செல்வி ஆன் விநோலினி நடேசனின் பரத நாட்டிய அரங்கேற்றம் முன்ஸ்ரர் நகரில் நடைபெற்றது. அமைதி வணக்கத்தையடுத்து அருட்தந்தை இம்மானுவேல், அருட்தந்தை ஜெயசேகரம் ஆகியோரின் ஆசியுடன் அரங்கேற்றம் ஆரம்பமாகியது.

முதலில் தலைமை தாங்கிய பேராசிரியர் திரு.வி. இராஜசூரியர் உரைநிகழ்த்துகையில், 'நடனம் என்பது தமிழர்களின் புனிதக்கலை. அதனை வெளிநாடுகளில் பயின்று தன் காலத் தேவைக்கேற்ப புதுமைகளைப் புகுத்தி ஆடிவருவது வரவேற்கத்தக்கது. அரங்கேற்ற நாயகிக்கு என் வாழ்த்துக்கள்' என்றார்.

ஆசிரியர் பவித்திரா செல்வகாந்தனின் நட்டுவாங்கத்தில் மதுரக்குரலோன் கண்ணனின் இசை மழையில் சேர்ந்து பாடிய திருமதி. பத்மலோஜினி குமாரச்சந்திரனின் இன்னிசையுடன் மிருதங்கவித்துவான் பிரணவநாதனின் தாளத்திலும், இந்திய வானொலி புகழ் வயலின் வித்துவான் திருராதாகிருஷ்ணனின் வயலின் இசையிலும் செல்வன் சிவரூபனின் மோர்சிங்கிலும் இணைந்த பாடல்களுக்கு செல்வி ஆன் விநோலினி நடேசனின் பாதங்கள் ஆடத்தொடங்கின.

நடன உருப்படிகளான அலாரிப்பு, நடேச கௌத்துவம், ஜதீஸ்வரம், வர்ணம், பதம், தில்லானா ஆகியவற்றை தாளக்கட்டுப் பிசகாமல் ஆடிய செல்வி விநோலினி சபையோரின் பாராட்டு தலைப் பெற்றுக்கொண்டார். ஆசிரியையின் நட்டுவாங்கம் மிக நேர்த்தியாக இருந்தது.

மண்ணின் விடுதலைக்காக ஆடிய பாதங்கள் நடன அரங்கேற்றத்தின் போதும் மண்ணின் வீரர் புகழ்பாடும் பாடலுக்கு நடனமாடின.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்தந்தை இம்மானுவேல் அவர்கள் உரையாற்றுகையில், 'இந்த மேடையிலே தனது கலைவாழ்வை அரங்கேற்றும் இவரின் பாதங்கள் என்றும் விடுதலைக்காக தாயக மண்ணிலும் தொடவேண்டும். அதற்கு அந்த மண் மீட்கப்படவேண்டும்' என்றார். இதேவேளையில் பரதநாட்டிய அரங்கேற்றம் காணவந்திருந்த ஜேர்மன் மக்களுக்காக அவர் எமது நாட்டின் நிலைமையை ஜேர்மன் மொழியிலும் கூறினார்.



சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஜேர்மன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் தலைவர் அருட்தந்தை ஜெயசேகரம் பேசுகையில், 'செல்வி விநோலினியின் நடனம் மிகவும் சிறப்பாக இருந்தது. மனித வாழ்வில் ஆன்மீகம் மிக முக்கியமானது. அதனை நடனக்கலையுடன் இணைத்து மனித வாழ்விற்கு பயன்படுத்த வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

'செல்வி விநோலினியின் பாதங்கள் விடுதலை வேண்டியே ஆடும் பாதங்களாக இருக்கவேண்டும்' என்று சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியகக் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு.கா. சிவநாதன் தெரிவித்தார். மண்டபம் நிறைந்த மக்களைக் கொண்ட அரங்கேற்ற விழா நிகழ்வுகளை தமிழில் திரு. என்.ரி ஜெகனும் ஜேர்மன் மொழியில் செல்வி. ஆர் சிவலோகநாதனும் தொகுத்து வழங்கினார்.

— *வீ.ஆர் வரதராஜா*

# செல்வா விளையாட்டுக் கழகம் நடாத்திய கரும்புலிகள் ஞாபகார்த்தவிழா

கடந்த 6 வருடங்களாக கரும்புலிகள் ஞாபகார்த்தமாக கரப்பந்தாட்டப் போட்டிகளை நடாத்திவரும் செல்வா விளையாட்டுக் கழகம் முதல்முறையாக இவ்வருடம் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியையும், 16.08.98 அன்று சூரிச்சில் கரும்புலிகள் ஞாபகார்த்தமாக கலைமாலை விழா ஒன்றினையும் நடாத்தியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஈகைச்சுடரினை ஏற்றிவைக்க, தாயக மலர்வுக்காக இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்கள் பொதுமக்களுக்குமான அமைதிவணக்கம் செலுத்தப்பட்டு விழா ஆரம்பமானது. அண்மைக் காலங்களில் வளர்ச்சிகண்ட விடுதலை கானம்பாடி (லஷ்மி) இசைக்குழுவின் விடுதலைக்கானங்கள், வருகை தந்த மக்களால் பாராட்டும் வகையில் அமையப்பெற்றது. ஈழமுரசு பத்திரிகையில் 'விடியலைத் தேடி' என்னும் தொடர் நாவலைத் தந்த குடத்தனை உதயன், தனது இரண்டாவது படைப்பாக 'விழியோரத்துக் கனவுகள்' என்னும் நாவலை புத்தகவடிவில் கொடுத்திருந்தார். இவ்விழாவில் 'விழியோரத்துக்கனவுகள்' வெளியீடு செய்யப்பட்டபோது இராசலிங்கம் அம்பிகாபதி அறிமுக உரையையும் சி.மதியழகன் வாழ்த்துரையையும் V.P. நற்குணநாதன் ஆய்வுரையையும் வழங்கியிருந்தார்கள். ராதா நடனாலயா மாணவிகளின் எழுச்சி நடனங்களும் விடுதலை உணர்வை சிறப்பாகவே எடுத்துக்காட்டியது.

அன்னிய தேசங்களில் வாழும் தமிழினத்தின் எதிர்கால வாழ்வையும், தாய்மொழி, தாய்நாட்டு பிரச்சினைகளையும் சித்தரிக்குமுகமாக 'துருவம்' என்னும் நாடகம் சூரிச் தமிழ் வித்தியாலய மாணவ மாணவிகளால் மேடையேற்றப்பட்டது. சிறுவர் சிறுமியரை தாய்மொழியான தமிழ்மொழியில் ஊக்குவிக்கும் நோக்கில் சுதா ஜெயராஜா அவர்கள் சிறுவர் பூங்கா நிகழ்வுகள் நடாத்தப்பட்டது. கரும்புலிகள் பற்றிய சிற்றுரை ஆற்றிய ஒருங்கிணைப்பாளர், கரும்புலிகள் யார்? ஏன் அவர்கள் அப்படியானார்கள்? என்ற வினாக்களுடன் சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமரான ஜெயசிக்குறுபடை மீது வன்னிமண்ணில் நடாத்தப்படும் சமரின் வளர்ச்சிக்கு கரும்புலிகள் பங்கு பற்றியும் எடுத்து விளக்கியிருந்தார். நீண்டகாலமாக எம் ஈழ மலர்வுக்காக குரல் கொடுத்து வரும் தமிழகத்தின் சுப வீரபாண்டியன் அவர்களும் சிறப்புரை ஒன்றினை ஆற்றினார். அவரின் உரையில் ஒருகாலத்தில் தமிழின பற்றாளர்கள் வில்லும், வாளும் கொண்டு போர் புரிந்துள்ளார்கள். ஆனால் இன்று ஒரு மாபெரும் மாற்றத்தைப்பெற்று உயிரை ஆயுதமாக்கி போர் புரிவதைச் சுட்டிக்காட்டியதோடு எதிரியின் படைப்பலத்தையும் ஆயுத பலத்தையும் நிர்மூலமாக்கக்கூடிய எதிரியிடம் இல்லாத ஒரே ஆயுதம் உயிராயுதமான கரும்புலிகள் என்பதையும், இதனை எப்போதுமே எதிரியால் உருவாக்கவும் முடியாது என மிகவும் உணர்ச்சி பொங்க கூறினார். அத்தோடு போர்க்களத்திலும் கலை இலக்கியங்கள் தோன்றும் என்பதையும் இது இன்று ஈழத்தில் நடப்பதாகவும் ஏற்கனவே வேறுபல போராட்டங்களிலும் நடைபெற்றதாகவும் உதாரணங்கள் மூலம் புரியவைத்தார்.

சுப. வீர பாண்டியன் தனது உரையின் இறுதியில் போராட்ட வெற்றிக்கான

1. தலைமை, 2. தியாக உணர்வு, 3. மக்கள் ஆதரவு, 4. உலகின் அங்கீகாரம் ஆகிய நான்கு முக்கிய காரணிகளையும் கூறி அவற்றில் முதல் மூன்று காரணிகளையும் செவ்வனே பெற்ற ஈழப் போராட்டம், உலகின் அங்கீகாரத்தை பெறுவதற்காக உழைக்க வேண்டுமெனவும் கேட்டு 'வெல்க ஈழம் வளர்க தமிழ்' என்று சிறப்புரையை முடித்தார். புலம்பெயர் நாடுகளில் உள்ள ஈழமக்களின் வாழ்வியல் முறையானது போராட்டத்தை ஊக்குவிக்கிறதா? போராட்டத்தை மழுங்கடிக்கிறதா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டி மன்ற நடுவராக தமிழ் ஒலி ஒளியில் (TRT) நிகழ்ச்சிகளை வழங்கும் ஒருவரான சுரேந்திரன் கடமையாற்றினார். ஊக்குவிப்பதாக சிறி, உதயன் அம்பிகாதேவி வாதாட எதிர்த்து மழுங்கடிப்பதாக தயாபரன், மதியழகன், நளினி வாதாடினார்கள்.

இறுதியில் புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்களின் வாழ்வியல் முறையானது எமது போராட்டத்தை ஊக்குவிப்பதாகவே பட்டிமன்ற முடிவு அமைந்தது. தொடர்ந்து செல்வா விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட, உதைபந்தாட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கும் வீரர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டதோடு 5000 சுவிஸ் பிராங்குகள் போராட்ட நிதியாக ஒருங்கிணைப்பாளரிடம் செல்வா விளையாட்டுக்கழகம் வழங்கியிருந்தது. இதுபோன்று மற்ற கழகங்கள் அமைப்புக்கள் செயல்படுவதற்கு செல்வா விளையாட்டு கழகம் ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறது.

— *சங்கையூர் குமார்*


## திருப்பியனுப்ப வேண்டாம்!

### அகதிகளுக்கு ஆதரவான பல்வேறு அமைப்புகள் இணைந்து நடாத்தும்

### மாபெரும்

# அமைதிப்பேரணி

பரப்புரை ஊர்தி, கடந்த ஒருமாதகாலமாக நகரம் நகரமாகச் சென்று பேரணிகளையும் பரப்புரைகளையும் நடாத்தி, இறுதியாக 19.09.1998 அன்று கேளின் மாநகரை வந்தடையும்.

★ அகதியாக விண்ணப்பித்துள்ளவர்கள், போர் நிலவும் நாடுகளிலிருந்து வந்தவர்களாயின் உண்மையான அமைதி எட்டும்வரை திருப்பியனுப்பவேண்டாம்!

★ அவர்களைப் போர் நிமித்த அகதிகளாக அங்கீகரிக்க வேண்டும்!!

★ அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டதும், நீண்ட காலமாக இணைந்து வாழ்ந்துவரும் குடும்ப உறவுகளைப் பிரித்து நாடுகடத்தவேண்டாம்!

★ அவர்களை மனிதாபிமான அடிப்படையில் அங்கீகரிக்க வேண்டும்!!

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஜேர்மனியமக்களுடன் இணைந்து பல இன மக்கள் நடாத்தும் அமைதிப் பேரணி இதுவாகும். அகதிகளுக்கு ஆதரவாகப் பல்வேறு அமைப்புகளுடன் உலகத்தமிழர் இயக்கமும் இணைந்து குரல்கொடுக்கும் இந்தப் பேரணியின்போது, எமது தாயக பூமியில், சிங்கள இனவாத அரசால் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்களும் இனப்படுகொலைகளும் உலகத்தின் பார்வைக்குக் கொண்டுவரப்படவுள்ளன.

**அனைவரும் ஒன்றுகூடுவோம்!**

**நாம் அகதிகளானதற்குக் காரணமான சிறீலங்கா அரசபயங்கரவாதத்தை உலகுக்குத் தெரியப்படுத்துவோம்!!**

பேரணி ஆரம்பமாகும் இடம்:
**Ebert Platz, Köln**

பேரணி ஆரம்பமாகும் காலம்:
**19.09.1998 சனிக்கிழமை மதியம் 12.00 மணி**

**அனைத்துத் தமிழீழ மக்களையும் அழைக்கின்றோம்**

உலகத்தமிழர் இயக்கம் – ஜேர்மனி


# தாயகத்தை நினைவூட்டிய தமிழாலய ஆண்டு விழா

ஜேர்மனியில் அவுஸ்பேர்க் நகரில் 26.07.98 அன்று தமிழாலய ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரமரணமடைந்த மாவீரர்களுக்கும், மரணமடைந்த பொதுமக்களுக்கும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட உலகத் தமிழர் இயக்கக் கல்விப் பணிப் பொறுப்பாளரும் ஆசிரியருமான திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

மாணவர்கள் தமிழாலய கீதம் இசைத்ததைத் தொடர்ந்து, தமிழாலய நிர்வாகி லோ.ரஞ்சன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். முன்சன் தமிழாலய மாணவர்களினதும், நூறன்பேர்க் தமிழாலய மாணவர்களினதும் பேச்சுக்கள், கவிதைகள், கதைகள், நடனங்கள் என்பன மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

பிரதம அதிதி தனதுரையில், சிறார்களுக்குரிய கடமைகளை எடுத்துக் கூறி, எமது தேச வளர்ச்சிக்கு அவர்கள் முதுகெலும்பாக விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் திரு. அன்ரன் ஜெயக்குமார், விழா சிறப்புற உதவிய அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார். பரிசளிப்புடன் விழா இனிதே நிறைவேறியது.

- *இ. நாகலிங்கம்*

# முதலாம் ஆண்டு நினைவில்

தாயின் மடியில்
21.07.1961



தாயக மண்ணில்
10.09.1997

## லெப். கேணல் பாவரசன்

சின்னத்துரை ஆனந்தகுமார்
(சிறுப்பிட்டி வடக்கு)

*பிறப்பிருந்தால் இறப்பிருக்கும் - பிரமனவன்
படைக்கையிலே கிடைத்த உண்மை
இது தானே - என்றாலும் உன் பிரிவில்
உடைந்துவிட்ட எம் இதயம்
ஒப்புதற்கு மறுக்குதடா -
எம் உயிரே ஆனந்தா ...
காலையும் வருகிறது, மாலையும் வருகிறது
கருமங்களும் தான் நிறைவேறிப்போகின்றன - ஆனாலும்
உன்நினைவு மூச்சுக்காற்றாய் ஒடிக்கொண்டே
இருக்கிறது.
ஆண்டொன்று போனதுவா? அது கூடத்
தெரியவில்லை. வெம்பி அழுகின்றோம் நாம்!
மாளவில்லை நீ மறத்தமிழன், எம் மனங்களிலே
என்றென்றும் வாழுகின்றாய்!!*

வாழ்க உன் புகழ் - மலர்க தமிழீழம்

**மனைவி - சிவகௌரி ஆனந்தகுமார்**
**- சகோதர சகோதரிகள்**

தவமணி - இரத்தினம் (தமிழீழம்), சின்னத்துரை - நடராசா (சுவிஸ்), பராசக்தி - சுந்தரலிங்கம் (தமிழீழம்), புவனேஸ்வரி - கணேஸ்வரன், சின்னத்துரை - தனபாலசிங்கம், லோகேஸ்வரி - ஸ்ரீரங்கநாதன்.

# 'அமெரிக்கன் ஓப்பன்' டெனிஸ் முடிவுகள்

**ஆண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டம்:**

முக்கிய டெனிஸ் போட்டிகளில் ஒன்றான 'அமெரிக்கன் ஓப்பன்' போட்டிகள் 13.09.98 முற்றுபெற்றபோது பெறப்பட்ட முடிவுகள். ஆண்கள் ஒற்றையர் ஆட்டம்: ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தை பொறுத்தவரையில் சற்று வித்தியாசமான ஒரு இறுதியாட்டத்தை 28 ஆண்டுகளுக்குப்பின் சந்திக்கிறது. அதாவது 1970-ம் ஆண்டு 'அமெரிக்கன் ஓப்பன்' இறுதிப்போட்டியில் றோஸ்வால் (Rosewall) ரொனி (Tony) என்னும் இரு அவுஸ்திரேலியர்கள் மோதிக்கொண்டதற்கு பிறகு தற்போது 13.09.98-இல் அவுஸ்திரேலியர்களான ரவ்ரர் (Rafter), பிலிப்போசிஸ் (Phillipoussis) இறுதியாட்டத்தில் மோதிக்கொண்டார்கள். நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் முதலாம் இடத்திலுள்ள சம்பிரஸ்சை தோற்கடித்த ரவ்ரர், பிரான்ஸ் ஓப்பனை வெற்றி கொண்ட மோயாவை தோற்கடித்த பிலிப்போசிஸ் தங்களுக்கிடையிலான போட்டியை மிகவும் குதூகலிப்புடன் அவுஸ்திரேலியாவுக்கு தானே வெற்றி என்ற புன்முறுவலுடன் ஆரம்பித்தனர். அவுஸ்திரேலியாவுக்கு வெற்றி நிச்சயம் என்று தெரிந்துவிட்ட போதிலும் உண்மையான வெற்றியாளன் யார்? என்பதற்கு விடை தேட, போட்டி மிகவும் சுவாரஸ்யமாக சென்றது. முதல் செட்டில் ரவ்ரர் 6:3 என்று வெற்றிகொள்ள 2 செட்டை பிலிப்போசிஸ்சும் 6:3என்று வெற்றிபெற்று ஆட்டம் சம நிலை அடைந்த நிலையில் 3-ம், 4-ம் சுற்றுகளை மிக இலகுவாக ரவ்ரர் வெற்றிகொண்டு 'அமெரிக்கன் ஓப்பன்' பட்டத்தை வெற்றிகொண்டார். 6:3, 3:6, 6:2, 6:0 என்று வென்ற ரவ்ரர் உலக தரத்தில் 3-ம் இடத்திலிருந்து 2-ம் இடத்துக்கும் உயர்ந்திருக்கிறார்.

**பெண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டம்:**

பெண்கள் பிரிவின் முன்னணி இரு ஆட்டக்காரர்களான 'ஹிங்கிஸ்'ஸும், 'டவன்போட்'டும் இறுதியாட்டத்தில் 12.09.98 மோதிக்கொண்டபோது வெற்றியை தமதாக்குபவர் யார்? என்பதை இறுதிவரை யாராலும் கணக்கிடமுடியாதிருந்தது. இருவருக்கும் சமமான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. ஹிங்கிசை பொறுத்தவரை உலக தரத்தில் முதல் இடத்தில் இருப்பவர் என்பதைத் தவிர செலஸ், நவேட்டினா போன்ற முக்கிய போட்டியாளர்களை வெற்றிகொண்டு இறுதிப்போட்டிக்கு எட்டியிருந்தார். ஆனால் சுவிசின் வீராங்கனைக்கு அமெரிக்கா மைதான ஊக்குவிப்பும் உற்சாகமூட்டலும் 'டவன்போட்'டை விட நிச்சயம் குறைவானதே. 'டவன்போட்' இரண்டாம் இடத்தில் காணப்பட்டாலும் தனது சொந்தநாட்டு ரசிகர்களுக்கு மத்தியில் வெற்றிபெற்றாகவேண்டும் என்ற உந்தல் இருக்கும் என்பதை தவிர தற்போது மிகவிரைவாக வளர்ந்து வரும் வில்லியம்சை அரையிறுதியாட்டத்தில் வெற்றிகொண்டது மேலும் ஊக்கத்தையே ஊட்டியிருக்கும். பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஆரம்பமான இறுதியாட்டத்தில் முதல் செட்டை 6:3 என்ற நிலையில் இலகுவாக டவன்போட் வெற்றி கொண்டிருந்தபோது நடைபெற்ற இரண்டாவது செட்டில் வெற்றியாளர் யார்? என்பதை முடிவுசெய்யமுடியாத அளவில் உக்கிரமான மோதல் தென்பட்டது. தளராது தனது வெற்றியை அடைந்தே தீரவேண்டும் என்று விளையாடிய டவன்போட்டுக்கு 7:5 என்ற ரீதியில் இரண்டாவது சுற்றிலும் வெற்றி கிட்டியதால் ஒற்றையர் ஆட்டத்தில் மகத்தான வெற்றியும் கிடைத்தது.

**- பொன். தாமோதரம்**



கடந்த 30.08.98 அன்று சுவிஸ் நாடு தழுவிய ரீதியில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்கள், பாடசாலைகள் பற்றிய விபரங்கள் புகைப்படங்களுடன் அடுத்த ஈழமுரசு இதழில் வெளிவரும்.


## மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 1998

புங்குடுதீவு இருப்பிட்டி சனசமூக நிலைய பிரெஞ்சுக்கிளை நடத்தும் அமரர் அ. ந. தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 6 பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 27.09.98 ஞாயிறு காலை 9.00 மணிக்கு 30, Rue Louis Lumiere, (M.o: Porte de Montreuil என்னும் முகவரியில் இடம்பெற உள்ளது. கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் விண்ணப்பங்களை 19.09.98 முன்பாக T.SANGARA.RAJAH, 11 Rue PETIT, 75019 PARIS என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு திரு.த.சங்கரராசா 01 40 03 83 63 என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


# ஒரு நாள் கிரிக்கட் போட்டிகள் உலகசாதனைச் சோடிகளின் அட்டவணை

| விக்கட் | வீரர்கள் | நாடு | ஓட்டங்கள் | திகதி | இடம் |
|---|---|---|---|---|---|
| 1ம் | டெண்டுல்கர், கங்குலி | இந்தியா | 252 | 07.07.98 | கொழும்பு |
| 2ம் | அமிர்சொலி, இசாம்உல்க் | பாகிஸ்தான் | 263 | 20.04.94 | சார்ஜா |
| 3ம் | சயிட்அன்வர், இயாஸ்அகமட் | பாகிஸ்தான் | 230 | 18.01.98 | டாக்கா |
| 4ம் | அசாருதீன், ஜாடஜா | இந்தியா | 275★ | 09.04.98 | கட்டாக் |
| 5ம் | அசாருதீன், ஜாடஜா | இந்தியா | 223 | 17.08.97 | கொழும்பு |
| 6ம் | றிச்சட்சன், டுயோன் | மேற்கிந்தியதீவுகள் | 154 | 21.10.91 | சார்ஜா |
| 7ம் | ஒடேயோ, சுஜி | கென்யா | 119 | 16.10.97 | நைரோபி |
| 8ம் | றிப்பல், வோர்ன் | அவுஸ்ரேலியா | 119 | 04.04.94 | போட்எலிசபெத் |
| 9ம் | கபில்தேவ், கிர்மாணி | இந்தியா | 126★ | 18.06.83 | தான்பிறிச் வேல்ஸ் |
| 10ம் | றிச்சட்ஸ், ஹோல்டிங் | மேற்கிந்தியதீவுகள் | 106★ | 31.05.84 | மன்சஸ்டர் |

(★ ஆட்டமிழக்காமல்)

இவ் ஒரு நாள் சோடிச் சாதனைகளை அவதானிக்கும்போது அண்மைக்காலங்களில் ஒரு நாள் போட்டிகளில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களை உணர முடிகிறது. குறிப்பாக கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 5 புதிய சாதனைகள் (1ம், 3ம், 4ம், 5ம், 7ம்) நிலைநாட்டப்பட்டுள்ளன. இந்தியா மட்டும் 4 சோடிகளில் (1ம், 4ம், 5ம், 9ம்) சாதனை நிலைநாட்டி முன்னணியில் திகழ்கிறது. அது போல் நீண்டகாலமாக முறியடிக்கப்படாததும் ஒரு இந்திய சோடியாகும். (9ம் - 18.06.83 இலிருந்து) 8ம் விக்கட் இணைப்பாட்டம் தவிர்ந்த அனைத்து இணைப்பாட்டங்களும் வெள்ளையர் அற்றவர்களால் நிலைநாட்டப்பட்டதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அத்தோடு முக்கியமானதும் அதிகூடிய ஓட்டங்களைக் கொண்டதுமான முதல் 5 சோடிகளையும் ஆசியர்களான இந்தியாவும் பாகிஸ்தானுமே கைப்பற்றியுள்ளன. உலக கோப்பை போட்டிகள் விரைவில் வர இருப்பதால் அதற்குள் இன்னும் எத்தனையோ சாதனைகள் நிலைநாட்டப்படும், சிதறடிக்கப்படும் போக வாய்ப்புக்கள் இருக்கின்றன.

# புதிய பட்டியலில் இணைந்துள்ள முரளிதரன்



அகில உலகின் கதவுகளை அடைத்து தமிழினத்திற்கு பெரும் கொடுமைகள் புரியும் சிறீலங்கா, கிரிக்கட் விளையாட்டில் கொடி கட்டி பறக்கிறதல்லவா! இவ் வெற்றிகளுக்கு ஆணிவேராக திகழ்பவர் முத்தையா முரளிதரன் என்ற தமிழன் தான் 15 ஆண்டுகளுக்கு மேல் டெஸ்ட் அந்தஸ்து பெற்றுக்கொண்ட சிறீலங்காவில் பெரும்பான்மை சிங்கள வீரர்களால் முடியாததை ஒரு தமிழ் வீரரால் முடிகிறதே. இதனையிட்டு தமிழர்களாகிய நாம் பெருமைப்படுவதா? அன்றி ஒரு இனவாத சிங்கள அணியில் ஒரு தமிழனும் விளையாடுகிறானே என்று வெட்கப்படுவதா? எது எப்படி இருப்பினும் விளையாட்டு என்ற ரீதியில் நோக்குமிடத்து சிறீலங்காவின் சரித்திரத்திலேயே 200 விக்கட்டுகளுக்கு மேல் வீழ்த்திய ஒரே ஒருவீரர் முரளிதரன், அத்தோடு ஒரு இனிங்சின் சிறந்த பந்து வீச்சையும் அமைத்து உலகின் சிறந்த பந்து வீச்சுப் பட்டியலில் 7-வது இடத்தையும் எடுத்துள்ளார். 9 விக்கட்டுக்கு மேல் ஒரு இனிங்சில் வீழ்த்திய முதல் 10 பேர் விபரம் பின்வருமாறு:

| வீரர் | விக்கட்டுகள் | நாடு | பந்துகள் | சராசரி | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| ஜே.சி. லாகர் | 10/53 | இங்கி | 108 | 5.3 | 1956 |
| ஜி.எ. லொக்மன் | 9/28 | இங்கி | 72 | 3.11 | 1895 |
| ஜெ.சி. லாகர் | 9/37 | இங்கி | 100 | 4.11 | 1956 |
| ஆர்.ஜெ. காட்லி | 9/52 | நியூசி | 142 | 5.78 | 1985 |
| அத்துல்காதர் | 9/56 | பாக் | 222 | 6.22 | 1987 |
| டி.இ. மல்கம் | 9/57 | இங்கி | 99 | 6.33 | 1994 |
| மு.முரளிதரன் | 9/65 | சிறீலங்கா | 326 | 7.22 | 1998 |
| ஜே.எம். பட்டேல் | 9/69 | இந்தி | 215 | 7.67 | 1959 |
| கபில்தேவ் | 9/83 | இந்தி | 183 | 9.22 | 1983 |
| சர்ராஸ்நவாஸ் | 9/86 | பாக் | 284 | 9.56 | 1978 |


தமிழின விடுதலையை பெறவெனப் பாய்ந்தவன்
தண்ணீரும் அருந்தாது தவத்திலே காய்ந்தவன்

## லெப். கேணல் திலீபனின் 11ம் ஆண்டு நினைவுநாள்

'Kulturzentrum', Berliner Platz 11, 44623 Herne
19.09.1998 சனிக்கிழமை 16.30 மணி

★ அமைதிவணக்கம் ★ சுடரொளிவணக்கம் ★ மலர் தூவி வணக்கம்
★ மலரும் கலைப்பூக்கள் ★ திலீபகாவியம் ★ நடனத்தொகுப்பு
★ திலீபார்ச்சனை ★ தமிழிசை ★ இன்னும் துயிலுதியோ! ★ நாடகம்

திலீபனின் நினைவில் ஒன்றுகூடுவோம்!
விடுதலைப் பாதையில் நடைபோடுவோம்!!

**'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'**


கலை பண்பாட்டுக் கழகம்
தமிழீழ விடுதலைப் புலிகள் யேர்மன் பணியகம்

**மீண்டும் 01.09.98 முதல் உங்கள் திருப்திக்காக**

# வூட்லன்ஸ் கோல்

*நிமிடங்கள் அதிகரித்துவிட்டன*

## தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது





**60 UN**

**50 Frs TTC**

**120 UN**

**100 Frs TTC**




| | |
|---|---|
| இந்தியா.................. | 50 நிமிடங்கள் |
| இலங்கை ................ | 50 நிமிடங்கள் |
| ஐரோப்பா.................. | 70 நிமிடங்கள் |
| பிரித்தானியா........... | 102 நிமிடங்கள் |
| அமெரிக்கா............. | 100 நிமிடங்கள் |
| கனடா...................... | 100 நிமிடங்கள் |

இன்னும் பல நாடுகள் அதிகரிக்கப்படவுள்ளது. நீங்கள் எங்கள் தொலைபேசி அட்டை மூலமாக எவ்வளவு கூடிய நேரம் உரையாடுகின்றீர்களோ அவ்வளவிற்கு ஒவ்வொரு மாதமும் நிமிடங்கள் அதிகரிக்க வாய்ப்புண்டு.

**நிமிடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது**

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு 15% கழிவுடன் வழங்கப்படும்

| 60un | Local | Vert |
|---|---|---|
| இந்தியா | 26 | 16 |
| இலங்கை | 30 | 16 |
| UK | 50 | 30 |

நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!

## இலங்கை 50mn இந்தியா 50mn

தொடர்புகளுக்கு: அனைத்து தமிழர் வர்த்தக நிலையங்கள்

**Tel: 0140370820 0680626095/ Fax: 0140372820**

25.09.98 முதல் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளில் இருந்து உரையாடுவதற்கான தொலைபேசி அட்டை வெளியாகிறது.

**விநியோகத்தர்கள் தேவை**

**அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள்**

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1.73 | 0.60 | 5.82 | 1.42 |
| பிராங்பேட் | 0.58 | – | 0.34 | 3.35 | 0.82 |
| லண்டன் | 1.67 | 2.89 | – | 9.70 | 2.38 |
| பாரிஸ் | 0.17 | 0.30 | 0.10 | – | 0.24 |
| சூரிச் | 0.70 | 1.22 | 0.42 | 4.08 | – |
| பம்பாய் | 42.65 | 24.66 | 71.30 | 7.33 | 30.01 |
| கொழும்பு | 66.28 | 38.32 | 110.80 | 11.39 | 46.64 |

# வடமராட்சிக் கிழக்கில் தொடரும் பொருளாதாரத் தடை

வடமராட்சி கிழக்குப் பகுதிகள் மீதான சிறீலங்கா இராணுவத்தின் தடை நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன. அப் பகுதிகளுக்கான உணவு விநியோகத்தினை தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்தி வரும் சிறீலங்காப் படைகள், மருந்து மற்றும் தொலைபேசி தொடர்புகளை இப் பகுதிகளுக்கு வழங்க மறுத்துள்ளன.

இப் பகுதி பிரஜைகள் குழுவினர் தம் நாளாந்த பிரச்சினைகள் தொடர்பாக சிறீலங்கா இராணுவ உயர் அதிகாரிகளிடம் முறையிட்ட போதும் அவர்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள படையினர் மறுத்துவிட்டனர்.

இப் பகுதிகளுக்கு தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் அதனை புலிகள் தமது தேவைகளுக்காக பயன்படுத்துவார்கள் என கூறியுள்ள வடமராட்சி இராணுவ உயரதிகாரிகள், இப் பகுதி வீதிகளையும் திருத்தியமைப்பதற்கு தாம் அனுமதிக்கப் போவதில்லை என கூறியுள்ளனர்.

இப் பகுதியில் நிலவும் மருத்துவத் தடையினால் ஏராளமான பொதுமக்கள் அல்லல் படுகின்றனர். இன்று காலை 5.00 மணியளவில் இப் பகுதியைச் சேர்ந்த 75 வயதான செல்லையா என்பவர் தனது நோயினைக் குணப்படுத்துவதற்கான மருத்துவ வசதியின்மையினால் விரக்தியடைந்து தற்கொலை செய்துள்ளார்.

# புலிகளைத் தடுக்க 120 கிலோ மீற்றர் வேலி இராணுவம் அறிவிப்பு

கஜபாபுர முதல் மன்னார் ஓலுமடு என்பன ஊடான் எமது 120 கிலோ மீற்றர் பாதுகாப்பு வேலி புலிகளின் கடும் தாக்குதல்களை முறியடிக்கும் என இராணுவம் அறிவித்துள்ளது. ஜெயசிக்குறு போர் முனைக்கு அழைத்துச்செல்லப்பட்ட சிங்களப் பத்திரிகையாளர்களுக்கு தமது பாதுகாப்பு வேலி பற்றி விளக்கிய இராணுவத் தளபதிகள் தமது படைகள் 42 கிலோ மீற்றர் நீளமான நெடுஞ்சாலையில் நிலைகொண்டுள்ளதாகக் கூறியுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மற்றுமொரு தமிழ்க்....

வதை செய்யப்பட்டு வந்த தமிழ்க் கைதி ஒருவரே தமது படைகளால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிவித்துள்ளது.

புளொட் வதை முகாம்களை மூடுமாறு சர்வதேச அழுத்தம் அரசு மீது உருவாகியுள்ளதால் அரசு இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தருகின்றன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### டக்ளசுக்கு....

லுள்ள டக்ளஸ் தேவானந்தாவின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தனக்குரிய பங்கு தரப்படவில்லை என இலியாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். இவருக்கு ஆதரவாக டக்ளஸ் எதிர்ப்பு ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ராமேஸ்வரன், ராமமூர்த்தி சகோதரர்கள் குரல் எழுப்பி வருகிறார்கள்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளுடன்....

யுத்தம் செய்யவில்லை. ஆகவே தமிழ் மக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவோம். புலிகளுடன் அல்ல. ஐ.தே.கட்சி 14 மாதங்கள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர். அவர்களால் என்ன செய்ய முடிந்தது? புலிகள் இப்போது பலவீனம் அடைந்துள்ள நிலையில் அவர்களுடன் பேசவேண்டுமென ஐ.தே. கட்சியினர் கூறுகின்றனரா? என ரத்வத்தை கேள்வி எழுப்பியுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்காவை....

டிக்கப்படவேண்டும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலியா கன்பராவில் அமைந்துள்ள சிறீலங்கா தூதரகத்திடம் தாம் இலங்கை பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். தொடர்ந்து அவர்கள் தூதரகத்திடம் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும், மக்களின் அத்தியாவசிய தேவைகளான உணவு, மருந்துவம், உடைகளுக்கான தடை நீக்கப்படவேண்டும், பத்திரிகைகள் மீதான செய்தி தணிக்கை நீக்கப்படவேண்டும், மூன்றாம் தரப்பின் மத்தியஸ்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வரவேண்டும் என நான்கு கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.


CENTRE TAMOUL POUR LES DROITS DE L'HOMME-(CTDH)
TAMIL CENTRE FOR HUMAN RIGHTS-(TCHR)
(Established in 1990)

## அறிவித்தல்

உங்கள் 'அரசியற் தஞ்சத்திற்கான விண்ணப்பம்' ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் நிராகரிக்கப்பட்டு, நீங்கள் நாடு கடத்தப்படும் நிலைக்கு தள்ளப்படுவீர்களானால், தயவுசெய்து உடன் கீழ்க் காணும் முகவரிக்கு, உங்கள் பெயர், விலாசம், அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட காரணம், பிறந்த திகதி, வதிவிட விலாசம், அகதி அந்தஸ்து கோரிய திகதி, நிராகரிக்கப்பட்ட திகதி போன்றவற்றுடன் எழுத்தில் அறிவிக்கவும்.

குறிப்பு: இவர்கள் யாருக்கும் ஐரோப்பாவில் வதிவிட விசா வழங்குபவர்கள் அல்ல. ஐரோப்பாவில் உள்ள அரசாங்கங்களின் நியாயமற்ற செயற்பாடுகளை விசாரிக்கும் ஓர் கமிஷன்.

இவர்கள் உங்களுக்கு ஓர் விண்ணப்பப் படிவம் அனுப்புவார்கள்.

தொடர்புகட்கு:
The Secretary
Europan Commission of Human Rights
Council of Europe
67075 Strasbourg Cedex
France
Tel: 33-3-88 41 20 18
Fax: 33-3-88 41 27 92 / 33-3-88 41 27 30



## Maria Stores

Mulhouse இல் புதிய மளிகைக் கடை

உங்களுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், காய் கறிகள், மீன் வகைகள் வீடியோ கேசட்டுகள், ஆடியோ சி.டி.கள், கேசட்டுகள், டெலிபோன் கார்ட்கள், பரிசளிப்பு பொருட்கள், ஆடை வகைகள் பத்திரிகைகள், மற்றும் உங்களுக்குத் தேவையான இதர பொருட்கள் தரமான, உத்தரவாதமான முறையில் உங்களுக்கு அளிக்கின்றது
Maria Stores
என்றும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய காத்திருக்கும் கடை Maria Stores

Maria Stores
30, bd de L'Europe
68100 Mulhouse
Tel: & Fax: 03 89 45 70 29
திங்கள் விடுமுறை



பரீஸ் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய

## நவராத்திரி வைபவம்

பாரீஸ் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 21.09.98 திங்கட்கிழமை தொடக்கம் நவராத்திரிவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

ஆலயத்தில் கொலுவைக்கப்பட்டு தினசரி மாலை வேளையில் அபிசேகம், நடனம், இசைநிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒன்பது நாட்களுக்கும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

29.09.98 செவ்வாய்க்கிழமை சரஸ்வதிபூசையும் மறுதினம் 30.09.98 புதன்கிழமை விஜய தசமியை முன்னிட்டு சிறு பிள்ளைகளுக்கு ஏடுதுவக்கும் வைபவமும், மாலை மானம்பூ (வாழை வெட்டு) வைபவமும் இடம்பெறவுள்ளன.

புரட்டாதிச் சனி விரதத்தை முன்னிட்டு 19.09.98 சனிக்கிழமை தொடக்கம் 17.10.98 கடைசிச் சனிக்கிழமை வரை சனீஸ்வரனுக்கு எள் எண்ணை எரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அம்பாள் அடியார்கள் யாவரும் இவ்விசேட பூசைகளில் கலந்துகொண்டு எம் பெருமாட்டியினது அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

26 RUE DU DEPARTEMENT
75018 PARIS
01 40 38 30 75

ஆலய பரிபாலனசபை



AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30


Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மீண்டும்
நல்லூரர் படம் பதித்த 'வூட்லண்ட்ஸ் கோல்' தொலைபேசி அட்டைகள் வெளியாகிவிட்டன. மேலதிக விபரங்களுக்கு 30-ம் பக்கம் பார்க்க

| | N°: Local | N°: Vert |
|---|---|---|
| இந்தியா - | 50 | 16 |
| இலங்கை - | 50 | 16 |

100 Frs TTC




தொடர்புகளுக்கு:
வூட்லண்ட்ஸ் உணவகம்
207 Rue de Fg. St. Denis, 75010 Paris. Tel: 0140370820

# 80 மில்லியன் டொலர் ஆயுதங்கள் மீது தடை

## சிறீலங்கா மீது சீன நிறுவனம் குற்றச்சாட்டு

(14.09.98)

சிறீலங்காவுடனான 80 மில்லியன் டொலர் ஆயுத விநியோக ஒப்பந்தத்தை சீன அரசு தடைவிதித்துள்ளது. சீன இராணுவத்தினுடனான நேரடி ஒப்பந்தம் ஒன்றின் மூலம் சிறீலங்கா அரசு பலரக ஆயுத தளவாடங்களை கொள்வனவு செய்வதாக கைச்சாத்திட்ட ஒப்பந்தம் ஒன்றை பொது உத்தரவு ஒன்றின் மூலம் சீன அரசு தடைவிதித்துள்ளது.

சீன இராணுவம் நேரடியாக இராணுவ தளவாட விநியோகத்தில் ஈடுபடுவதன் மூலம் பெரும் அளவிலான ஊழல் இடம்பெறுவதால் இப்படியான உடன்பாடுகளை சீன அரசு நிராகரித்துவிட்டது. இந் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் சிறீலங்காவுடனான உடன்பாடும் ஒன்றாகும். இதுவரை காலமும் சீன உத்தியோக பூர்வ நிறுவனம் ஊடாகவே ஆயுத விநியோகங்களை சிறீலங்கா பெற்றுவந்தது. கனரக டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள் உட்பட பல்வேறு ஆயுத தளவாடங்களை விநியோகிக்கும் இந் நிறுவனத்துடன் சிறீலங்கா அரசு நீண்டகால உடன்பாட்டை கொண்டிருந்தது. ஆனால் இம்முறை புதிய ரக ஆயுதங்களை சீன இராணுவம் ஊடாக பெற சிறீலங்கா முயன்றதை 'தொறின்கோ' எனும் உத்தியோகபூர்வ நிறுவனம் வன்மையாக சாடியுள்ளது. பீகிங்கில் உள்ள கொழும்பு தூதுவருக்கு 'தொறினகோ' நிறுவனம் எழுதியுள்ள கடிதத்தில் அரசுகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தை பாதுகாப்பது அரசுகளின் பரஸ்பர கௌரவத்தை பாதுகாப்பதற்கு சமனானது என சுட்டிக்காட்டியுள்ளது.

## சிறீலங்காவை 'பொதுநலவாய' அமைப்பில் இருந்து வெளியேற்ற வேண்டும்

### -அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள்

சிறீலங்காவை பொதுநலவாய அமைப்பில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனக் கோரி அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

கடந்த மாதம் அவிஸ்திரேலியா பாராளுமன்ற உறுப்பினர்களான சம்மிற், மக்பேசன், ஜோன்பிரட்போர்ட் என்பவர்கள் இணைந்தே இவ் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

சிறீலங்காவில் இடம்பெற்று வரும் யுத்தத்தினால் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. எனவே பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் இருந்து சிறீலங்காவை வெளியேற்ற வேண்டும். அவுஸ்திரேலியா சிறீலங்காவுடனான இறக்குமதி ஏற்றுமதியை நிறுத்தவேண்டும். கலாச்சார வர்த்தக உடன்படிக்கைகளை ரத்து செய்யவேண்டும். வழங்கப்படும் அனைத்து விதமான நிதி உதவிகளும் நிறுத்தப்படவேண்டும். விளையாட்டு தொடர்பான உறவுகளும் துண்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இரு சகோதரரர்கள் சுட்டுக்கொலை

வாழைச்சேனை சந்திவெளியில் அமைந்துள்ள இராணுவத்தினர் இரு சகோதரரர்களை சுட்டுக்கொன்றுள்ளனர். கடந்த புதன்கிழமை கடற்கரைக்குச் சென்றுகொண்டிருந்த எஸ். இராஜேஸ்வரன் (26), எஸ். யோகேஸ்வரன் (24) ஆகிய இருவரும் வழமைபோல் காலை ஆறு மணியளவில் தொழிலுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

கடற்கரைக்கு செல்லும் போது தினமும் சந்திவெளி இராணுவ முகாமின் முன்னாலேயே சென்று வந்தனர். அன்றும் அவ்வாறு சென்றுகொண்டிருக்கும் போது, திடீரென காவலரணில் இருந்து இவர்கள் மீது சராமாரியாக துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டதாகவும் இதனால் இருவரும் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்ட இருவர் உடல்களும் ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## மற்றுமொரு தமிழ்க் கைதி மீட்பு

(08.09.98)

வவுனியா புளொட் வதை முகாமிலிருந்து மற்றுமொரு தமிழ் கைதி மீட்கப்பட்டுள்ளார். இவரை சிறீலங்காவின் விசேட பொலிஸ் அணி ஒன்று மீட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த இரு வாரங்களாக இவ் வதை முகாமில் கைதியாக தடுத்து வைக்கப்பட்டு சித்திர

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## டக்ளசுக்கு எதிராக புத்தளத்தில் உண்ணாவிரதம்

யாழ் மாவட்டத்தில் அரசு ஒதுக்கீடு செய்த பணத்தில் தனக்குரிய பங்கை பிரித்து தர வேண்டும் எனக் கேட்டு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். இலியாஸ் புத்தளத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

இவ் ஒதுக்கீடு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமைப் பொறுப்பி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு இல்லை - ரத்வத்தை

'விடுதலைப்புலிகள் பலவீனம் அடைந்து வருகின்றனர். இவ்வேளையில் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பதற்கே இடமில்லை' என ஜெனரல் ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு வாதத்தில் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசுகையில் நாம் தமிழ் மக்களுக்கு எதிராக

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

பாரிஸ் லாசப்பலில்
தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஒடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்
23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41